Free Circulation Germany- England
மணி: 74 - ஓசை: 340 தை. January 2024

# வெற்றிமணி
Vettimaniy
ESTD 1950

31 TH years IN EUROPE Successful Publishing

பிரதம ஆசிரியர் கலாநிதி மு.க.சு.சிவகுமாரன்.B.F.A




# அநுரவுக்கு பயங்கரவாத தடைச்சட்டம் எதற்காகத் தேவையாக இருக்கிறது?

கொழும்பிலிருந்து பா.பார்த்தீபன்

Dr.IN



## கற்றிருத்தல் வேறு, கற்பித்தற்கலை வேறு

## அனைவருக்கும் எமது இனிய தைப் பொங்கல் வாழ்த்துகள்

இதழ்: 340








# எது பெருமை எது சிறுமை



● மாதவி

என்ர மனுசன் எனக்கு சமையலுக்கு, எதுவும் உதவமாட்டார். சோறு கறி எல்லாம் போட்டு மேசையில், வைத்தால் மட்டுமே சாப்பாட்டில் கைவைப்பார். தண்ணியும் விக்கினால் என்று முன் எச்சரிக்கையாக எடுத்து பக்கத்தில் வைக்கவேண்டும்.

அது மட்டுமல்ல, வாய்திறந்து மனுசன் என்ன இன்னும் போடுறது என்றும் கேட்காது. சாப்பிட்டால் பிறகு கையை மட்டும் எழுந்துபோய்க் கழுவுவார். சாப்பாடு நல்லது, கெட்டது எல்லாம், அவர் கழுவாத தட்டைப்பார்த்து புரிந்து கொள்ளவேண்டும்.

வேலையும், வீடும். கடைக்கும் போக என்ர மனுசனுக்கு தெரியாது. நான் வேலையால் வரைக்கை, கொஞ்சம் பிந்தினால், மனுசன் தண்ணியும் குடிக்காது.

இப்ப நீங்கள் என்ன நினைக்கின்றீர்கள். ஒரு பெண் தன் கணவனைப்பற்றி தாயிடம், அல்லது சிநேகிதியிடம், முறைப்பாடு சொல்கிறார் என்றா?

இல்லவே இல்லை. இரண்டு நடுத்தர வயதுப் பெண்கள் தமது கணவன் மாரின் குணங்களை பெருமையாக சொல்லிக்கொண்டு பறக்கின்றார்கள். பறக்கின்றார்கள் என்றால் நான் வந்த விமானத்தில். அருகே இருந்த சீட்டில்தான் அந்த இருவரும் இருந்தார்கள்.

என்னைத் திரும்பி பார்த்தார்கள், மொட்டந்தலையும், தாடியும் அவர்களுக்கு என்னை ஒரு கிந்திக்காரன் அல்லது வேறு ஒரு மொழி பேசும் இந்தியன் என்றே எண்ண வைத்திருக்க வேண்டும்.

அத்தோடு நான் பறந்த விமானம் இங்கிலாந் தில் மன்செஸ்டர் இடத்திற்கு போகிறது. அங்கு தடுக்கி விழுந்தால் பல மொழி பேசும், இந்தியர்கள்தான். நான் காதை மட்டும் திறந்து வைத்துவிட்டு கண்ணை முடிக்கொண்டேன்.

இப்போ மற்றப்பெண்,என்ர அவரும் இருந்த இடத்தைவிட்டு எழும்பமாட்டார். நூறுதரம் என்ர பேர் சொல்லிக்கூப்பிடுவார். அவருக்கு நான் கையுக்கை நிற்க வேண்டும்.

பிள்ளையள் என்ன செய்யினம். மற்றப்பெண் அடுத்த கட்டத்திற்கு நகருகிறாள்.

அட எனக்கு பொம்புளப்பிள்ளை இல்லை.

அட எனக்கும்தான் என்றாள் மற்றவள்.

அவன் கல்யாணம் கட்டி இப்ப ஒரு வருஷம். நான் அவனிட்டை போனால் அவன் ஹாலுக்கு வாறதே இல்லை. மனிசியோட குசினிக்கை ஓரே கதை. கதைச்சு கதைச்சு வெங்காயம் உரிக்கிறான். கோழிவெட்டுறான். கோப்பை கழுவிறான் .

மருமகள் அடுப்பில் ஏற்றுவதும், இறக்கிறதும். சமையல் முடிந்ததும் இருவரும் சாப்பாட்டை போட்டுக்கொண்டு கதிரையில் இருந்து ரி. வி பார்த்தபடி சாப்பிடுகினம்.

முடிந்ததும் சேர்ந்துபோய் கழுவிகினம். சமைக்கும் போதும், கழுவி முடிக்கும் போதும் இடை இடையே இடையைப்பிடித்து, திருகுகினம்.

சாச்சான பல்பு போல, மீண்டும் பிரகாசமாய் சிரிச்சு சிரிச்சு, பின் கழுவுகினம். கோப்பையை மருமகள் எடுத்துக்கொடுக்க துடைத்து துடைத்து அடுகுகிறான்.

என்ர மகன் கதையை கேழுங்கோவேன், என ஒரு ஆள் கதைமுடிக்கும் முன்னமே மரதன் ஓட்டம் போல் மற்றவ தொடங்கி விட்டா.

தங்கடை மனுஷன்மார் பற்றிக்கதைக் கேக்கை இருவரின் முகத்திலும் இருந்த வெளிச்சம் இப்ப இல்லை. முதல் தன்ர மனுஷன்மார் பற்றி சொன்னது முறைப்பாடு அல்ல. அது ஒரு வகைப் பெருமையாகவே அவர்களுக்கு இருந்தது.

இப்ப மருமகளின் மனுஷன்கள் (மகன்கள்) பற்றிச் சொன்னது அப்படி அல்ல. அது ஒரு முறைப்பாடு.

விமானப் பணிப்பெண் குப்பையிருந்தால் போடும்படி ஒர் பையை நீட்டுகிறாள். அவர்கள்! குப்பை இல்லை என்று அவளுக்கு பை சொல்லுகினம். இவ்வளவும் கதைச்சது குப்பைதானே. ஆனால் எறிய மனம் இல்லைப்போலும்.

இரண்டு பேரும் விமானம் இறங்கியதும் வெளியில் வந்தால்.


28 ஆம் பக்கம் பார்க்க...



வெற்றிமணி

தமிழ் எங்கள் உயிருக்கு மேல்

ஓசை : 340


ஆரம்பம்: 1950

ஸ்தாபகர்
அமரர் மு.க.சுப்பிரமணியம்
( முன்னாள் அதிபர்:
குரும்பசிட்டி பொன். பரமானந்தர்
வித்தியாலயம்)

பிரதம ஆசிரியர்
'ஓவியக்கலைவேள்'
கலாநிதி
மு.க.சு.சிவகுமாரன்
Chief Editor:
Dr.M.K.S.Sivakumaran B.F.A

Tel: +49 01631992333
+49 01631992333

e-mail: vettimaniy@hotmail.com


"வெற்றிமணிமொழி'
தோல்வியைக் கண்டு
அஞ்சுபவர்களிடமிருந்து
வெற்றி தானாகவே
விலகிச்செல்கிறது


Vettimaniy Ltd
Company No: 8876276


# அநுரவுக்கு பயங்கரவாத தடைச்சட்டம் எதற்காகத் தேவையாக இருக்கிறது?


கொழும்பிலிருந்து
பி.பார்த்தீபன்


இலங்கையில் உள்ள சட்டங்களில் மிகவும் மோசமானது எனக் கருதப்படும் பயங்கரவாதத் தடைச் சட்டம், சட்டப் புத்தகத்தில் இருந்து நீக்கப்படும் என்பது அநுரகுமார திசநாயக்கவின் தேர்தல் வாக்குறுதியாக இருந்தது. ஆனால், இன்று பயங்கரவாதத் தடைச் சட்டத்தை அரசாங்கம் தனது கைகளில் எடுத்துள்ளது. பயங்கரவாதத் தடைச் சட்டம் இல்லாமல் ஆட்சியைத் தொடரமுடியாது என்ற நிலைக்கு தேசிய மக்கள் சக்தி அரசாங்கமும் வந்துவிட்டதாகவே தெரிகின்றது.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தினால் அதிகளவுக்குப் பாதிக்கப்பட்டவர்கள் தமிழர்கள்தான். அதற்கு அடுத்ததாக ஜே.வி.பி. அமைப்பைச் சொல்லலாம். இரண்டு தடவை ஆயுதக் கிளர்ச்சியில் ஈடுபட்ட ஜே.வி.பி.யின் உறுப்பினர்கள் ஆயிரக் கணக்கானவர்கள் கொல்லப்படுவதற்கும் நீண்ட கால சிறை வாசத்தை அனுபவிக்கவும் இந்தச் சட்டம்தான் காரணம். இந்த ஜே.வி.பி.தான் தற்போது ஆட்சி அமைத்துள்ள தேசிய மக்கள் சக்தியின் தலைமைக்கட்சி. பயங்கரவாதத் தடைச் சட்டம் இல்லாதொழிக்கப்பட வேண்டும் என்பதில் அவர்கள் உறுதியாக இருந்தமைக்கு அதனால் அவர்கள் எதிர்கொண்ட துன்பங்கள்தான் காரணம்.




ஏதிர்க்கட்சியாக இருந்த போது பயங்கரவாதத் தடைச் சட்டம் நீக்கப்பட வேண்டும் குரலெழுப்பிப் போராடிய ஜே.வி.பி. யின் தலைமை இப்போது அந்த நிலைப்பாட்டிலிருந்து இறங்கிவருகின்றதா என்ற கேள்வியை நடைபெறும் சம்பவங்கள் எழுப்புகின்றன. ஏதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவும் இந்த விவகாரத்தை பாராளுமன்றத்திலும் கிளப்பினார். "அரசாங்கம் பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்கப்போவதாக தேர்தல் மேடைகளில் கூறியது. ஆனால், இப்போது அந்த சட்டத்தைப் பயன்படுத்தி பேச்சுச் சுதந்திரம், ஊடக சுதந்திரம் மற்றும் சிவில் உரிமைகளைப் பயிற்கும் வகையில் செயற்பட்டுவருகின்றது" என்று அவர் சுட்டிக்காட்டியிருக்கின்றார்.

செப்ரெம்பர் 21 ஆம் திகதி தேர்தலின் மூலம் ஜனாதிபதியாக அநுரகுமார திசநாயக்க தெரிவான பின்னர், மூன்று சந்தர்ப்பங்களில் பயங்கரவாதத் தடைச் சட்டத்தை கைகளில் எடுத்திருக்கின்றார். அறுகம்பை பகுதியில் இஸ்ரேலிய உல்லாசப் பயணிகளை இலக்குவைத்து தாக்குதல் நடத்துவதற்கு திட்டமிடப்பட்டிருப்பதாக வெளிவந்த தகவல்களையடுத்து நிலைமைகளைக் கட்டுப்படுத்தவும், சிலரைக் கைது செய்து விசாரிப்பதற்கும் பயங்கரவாதத் தடைச் சட்டம் அரசாங்கத்துக்குத் தேவையாக இருந்தது. இதன்போது கைதான ஆறு பேர் இப்போது பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ்தான் விசாரிக்கப்பட்டு வருகின்றார்கள்.

அதனைத் தொடர்ந்து நவம்பர் இறுதி வாரம் இடம்பெற்ற விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் பிரபாரனின் பிறந்த தினம், மற்றும் மாவீரர் நினைவேந்தல் நிகழ்வுகளின் போது பயங்கரவாதத் தடைச் சட்டம் பயன்படுத்தப்பட்டது. நினைவேந்தல்களுக்கான உரிமை மக்களுக்கு இருக்கின்றது என்றும், அதனை யாரும் தடை செய்ய முடியாது என்றும் தேசிய மக்கள் சக்தியின் தலைமை அறிவித்திருந்தது. ஆனால், தடை செய்யப்பட்ட இயக்கத்தை பிரசாரப்படுத்த முடியாது என்றும் அரச தரப்பு கூறியிருந்தது.

"யுத்தத்தில் உயிரிழந்தவர்களை நினைவுகூர்வதற்கு எந்த விதமான தடைகளையும் விதிக்கவில்லை. இதனை எமது அரசாங்கம் ஒரு கொள்கையாக பிரகடனபடுத்தியுள்ளது. இவ்வாறான நிலையில் சட்டவிரோதமான முறையில் நினைவேந்தல் முன்னெடுக்கட்டால் நடவடிக்கை எடுக்கப்படும்" என்று பாதுகாப்பு செயலர் சம்பத் துயகொந்த தெரிவித்திருந்தார்.

ஜே.வி.பி.யைப் பொறுததவரையில் அவர்களும் இரு தடவைகள் அரசாங்கத்துக்கு எதிராக ஆயுதம் ஏந்திப் போராடியவர்கள். அவர்களுடைய போராட்டத்தை ஒடுக்குவதற்கும் பயங்கரவாதத் தடைச் சட்டத்தைத்தான் அரசாங்கம் பயன்படுத்தியது. ஜே.வி.பி.யின் தலைவர் ரோஹண விஜயவீர உட்பட ஆயிரக்கணக்கானவர்கள் அரச படைகளால் கொடூரமாகக் கொல்லப்பட்டனர். அவ்வாறு கொல்லப்பட்ட தமது தலைவர்களையும், உறுப்பினர்களையும் நினைவுகூர்ந்து "கார்த்திகை வீரர்கள்" தினத்தை ஜே.வி.பி. வருடாந்தம் அனுஷ்டிக்கின்றது.

இவ்வாறு ஆயுதப் போராட்டத்தில் கொல்லப்பட்ட தமது உறுப்பினர்களை நினைவுகூரும் நிலையில், தமிழ் மக்களுக்கு மட்டும் அவ்வாறான நினைவேந்தல்களைத் தடுக்க முனைவது விமர்சனங்களுக்குள்ளாகும் என்பது ஜே.வி.பி. தலைமைக்குத் தெரியும். அதனால், அனுமதியைக் கொடுத்துவிட்டு, அதனைக் கட்டுப்படுத்துவதற்கு பயங்கரவாதத் தடைச் சட்டத்தை தேசிய மக்கள் சக்தி அரசு பயன்படுத்தியது.

லண்டனிலிருந்து தாயகம் திரும்பிய புலம்பெயர்ந்த தமிழர் ஒருவரைக் கைது செய்வதற்கும் அரசாங்கம் பயங்கரவாதத் தடைச் சட்டத்தைப் பயன்படுத்தியது. கிளிநொச்சியைச் சேர்ந்த

05 ஆம் பக்கம் பார்க்க...






அனைவருக்கும் இனிய தைப் பொங்கல் நல்வாழ்த்துகள்




அனைவருக்கும் இனிய தைப் பொங்கல் நல்வாழ்த்துகள்



# அநுரவுக்கு பயங்கரவாத தடைச்சட்டம் எதற்காகத் தேவையாக இருக்கிறது?

குறிப்பிட்ட குடும்பஸ்த்தர் தனது தந்தையின் இறுதிச் சடங்களில் கலந்துகொள்வதற்காக தாயகம் திரும்பிய போதே கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்டார். 15 வருடங்களின் பின்னர் அவர் தாயகம் விரும்பியிருந்தார். விடுதலைப் புலிகளுக்காக நிதி சேகரித்து அனுப்பினார் என்பதுதான் அவர் மீதான குற்றச்சாட்டு. பின்னர் அவர் பிணையில் விடுவிக்கப்பட்டாலும், அவர் மீதான வழக்கு முடிவடையும் வரையில் அவர் லண்டன் திரும்ப முடியாது என்பதுதான் நிலை.

பயங்கரவாதத் தடைச்சட்டம் மிகவும் மோசமான ஒரு அடக்குமுறைச் சட்டம் என்பதை மனித உரிமை அமைப்புக்கள் சுட்டிக்காட்டுகின்றன. கைது செய்யப்படும் ஒருவரிடமிருந்து சித்திரவதை மூலமாகப் பெறப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தை அவருக்கு எதிரான சாட்சியாகப்பயன்படுத்த இச்சட்டமூலம் இடமளிக்கிறது. அதனைவிட, பயங்கரவாதம் என்பதற்குத் தெளிவான வரைவிலக்கணம் இல்லாமையால், எந்தவொரு செயலையும் தமது தேவைக்கு ஏற்ப பயங்கரவாதம் எனக் கூறக்கூடிய நிலை பொலிஸாருக்கு இருக்கின்றது.

இது போன்ற காரணங்களால்தான் இதனை நீக்க வேண்டும் என்று ஐரோப்பிய ஒன்றியம், ஐ.நா. மனித உரிமைகள் பேரவை உள்ளிட்ட உள்நாட்டு அமைப்புக்கள் பலவும் வலியுறுத்திவருகின்றன.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் தாக்கல் செய்யப்பட்ட சுமார் 1,500 க்கும் மேற்பட்ட வழக்குகளில் ஆஜரான ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி.தவராஜாவிடம் இது தொடர்பாகக் கேட்டபோது, "2009 இல் போர் முடிவுக்கு வந்த பின்னர் இது வரையில் ஒரு துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் கூட இடம் பெறவில்லை" என்றும், "ஆனால், விடுதலைப் புலிகளை மீளுருவாக்கம் செய்கின்றார்கள் என்ற பெயரில் பலர் கைது செய்யப்படுகின்றார்கள்" என்றும் சுட்டிக்காட்டினார். விடுதலைப் புலிகளை மீளுருவாக்கம் செய்கிறார்கள் என்ற பெயரில் போர் முடிவடைந்த பின்னர் பலர் கைதான போதிலும், அதற்கான ஆதாரங்கள் முன்வைக்கப்படவில்லை. அதனால், விசாரணைகள் இல்லாமல் பலர் சிறையில் வாடும் நிலை தொடர்கின்றது.

1979 இல் "தற்காலிகமான" சட்டமாகத்தான் பயங்கரவாதத் தடைச் சட்டம் ஜே.ஆர்.ஜெயவர்த்தன அரசாங்கத்தினால் அறிமுகப்படுத்தப்பட்டது. ஆனால் தொடர்ந்து நீடிக்கப்பட்டு, தமிழ் மக்களின் போராட்டங்கள், மற்றும் அரசியல் எதிர்ப்புகளை முறியடிக்க பயன்படுத்தப்பட்டது என்பதுதான் உண்மை நிலை. "அரசியல் பழிவாங்கலுக்குத்தான் இந்தச் சட்டம் கொண்டுவரப்பட்டது" என்ற ஒரு குற்றச்சாட்டையும் கே.வி.தவராஜா முன்வைத்திருந்தார்.

ஏதிர்க்கட்சியில் இருக்கும் போது என்னத்தைச் சொன்னாலும், ஆளும் கட்சியாக வரும்போது இந்தச் சட்டத்தை நீக்குவ தற்கான எண்ணப்பாடு இல்லாமல் போகும். ஏனென்றால், தடுத்து வைப்பதற்கு இலங்கையில் இருக்கின்ற ஒரே சட்டம் இதுதான். ஒரு வருடத்துக்கு எந்தவிதமான விசாரணைகளும் இல்லாமல் எவரையும் தடுத்து வைப்பதற்கு இந்தச் சட்டம் உதவுகின்றது.அதனால்தான் நீக்குவதாகச் சொன்னாலும் அதனை அரசாங்கங்கள் கடந்த காலங்களிலும் செய்யவில்லை.

பயங்கரமான தடை சட்டத்தின் கீழ் இப்போது பலர் சிறையில் உள்ளார்கள். இதில் மூன்று விதமானவர்கள் உள்ளார்கள். முகநூலில் பதிவு செய்தவர்கள். இவர்கள்தான் விடுதலைப் புலிகளை மீள உருவாக்க முயன்றதாக குற்றஞ்சாட்டப்படுபவர்களில் ஒரு தரப்பினர். இதனைவிட வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருப்பவர்கள். அதாவது, போதிய சாட்சியங்களோ ஆதாரங்களோ இல்லாமல் தடுத்து வைக்கப்பட்டிருப்பவர்கள். மூன்றாவது தரப்பினர் வழக்கு முடிவடைந்து தண்டனையை அனுபவித்துக்கொண்டிருப்பவர்கள்.




இவ்வாறானவர்களில் 10 பேர் 15 வருடங்களுக்கு மேலாக சிறையில் இருக்கின்றார்கள். அதனைவிட பிணையில் விடுதலை செய்யப்பட்டிருப்பவர்கள் சிலரும் உள்ளனர். பிணையில் வந்திருப்பவர்கள் கூட, வெளிநாடுகளுக்குச் செல்ல முடியாது. அரசியல் கைதிகளை விடுதலை செய்வதாக அரசாங்கம் ஏற்கனவே சொல்லியிருக்கின்றது. இவ்வாறு சொல்லும் போது இவர்கள் அனைவருமே விடுதலை அசய்யப்படுவார்களா என்ற கேள்வி எழுகின்றது.

பயங்கரவாத தடைச் சட்டத்தை நீககுவதாக அரசாங்கம் சொன்னாலும், அதிலுள்ள சில அம்சங்கள் தமக்கு அவசியம் என்று அவர்கள் கருதுகிறார்கள். அதனால், அவற்றை உள்ளக்கக்கூடிய மற்றொரு சட்டத்தைக் கொண்டுவருவதில் அரசாங்கம் இப்போது கவனமாக இருக்கின்றது. கடந்த காலங்களில் ராஜபக்ஷக்களும் இவ்வாறான ஒரு முயற்சியை முன்னெடுத்திருந்தாகள். பெயா: மாறினாலும், அதன் இலக்கு ஒன்றாகவே இருக்கும். அதற்கான முயற்சிகளைத்தான் அநுர அரசும் இப்போது மேற்கொள்வதாகவே தெரிகின்றது.





அனைவருக்கும் இனிய தைப் பொங்கல் நல்வாழ்த்துகள்



இனிய தைப்
பொங்கல்
வாழ்த்துகள்
2025
HAPPY NEW YEAR
Luckyfly
SRI LANKA
Summer 2025
DREAM VACATION
AB 1080 €
0234 2399032
0179 14 84892
info@lucky-fly.de | www.lucky-fly.de
BOOK NOW

# சிவத்தமிழ்ச் செல்வியின் நூற்றாண்டு விழாச் சிறப்பு மலராக சிவத்தமிழ் மலர்கின்றது




உலகம் போற்றும் ஆன்மீக அன்னை சிவ தமிழ்ச்செல்வி பண்டிகை கலாநிதி தங்கம்மா அப்பா குட்டி அவர்களின் நூற்றாண்டு விழா எதிர்பவரும் 25.01.2025 அன்று உலகம் முழுவதும் கொண்டாடப் படவுள்ளது. நூற்றாண்டு விழா குறித்து ஜெர்மன் நாட்டிலிருந்து வெளிவரும் வெற்றிமணி பத்திரிக்கை வெளியீடான சிவத்தமிழ்ச் சஞ்சிகை சிறப்பு மலர் வெளியிடுவதை அறிந்து ஆனந்தம் அடைகிறேன். வெற்றிமணி ஆசிரியர் திரு. மு.க.சு.சிவ்குமாரன் அவர்கள் அம்மையாரின் அன்புக்கும் பாத்திரமானவர். அம்மையாரின் அகவை 80 பூர்த்தி விழாக் குறித்து சிறப்பு மலர்களை வெளியிட்டு அம்மையாரை கௌரவப் படுத்தியவர்

அம்மையார் அவர்கள் நாவலர் பெருமானுக்கு பின் எம் மண் பெற்ற தவப்புதல்வி என்றால் மிகையாகாது. தன் வாழ்வை அர்ப்பணித்து சைவமும் தமிழும் வளர அரும்பாடு பட்டவர். சைவப் பிரசங்க மரபை கட்டிக் காத்தவர். அறப்பணிகளில் அவசியம் அறிந்து தெல்லிபழை துர்க்கை அம்மன் ஆலயத்தை அறச்சாலையாக மாற்றியவர். ஏழைகளின் சிரிப்பில் இறைவனைக் காண்போம் என்ற சுவாமி விவேகானந்தரின் சிந்தனைக்கு செயல் வடிவம் கொடுத்தவர். 1982 ஆம் ஆண்டு துர்காபுரம் மகளிர் இல்லத்தை ஸ்தாபித்து இன்று வரை பல நூறு பெண்பிள்ளைகள் கல்வி கற்க வாய்ப்பு ஏற்படுத்தியவர். அம்மையார் எம் மண்ணில் சாதித்தவை ஏராளம். அவர்களின் அயராத பணியால் பலர் பயன்பெற்றனர்

2009 ஆம் ஆண்டு தனது 83 வது வயதில் அம்பாளின் திருவடியை அடைந்த அம்மையாரின் நூற்றாண்டு விழா உலகின் பலபாகங்களிலும் கொண்டாடப் படவுள்ளது. அம்மையாரை அனைவரும் நன்றியோடு நீள நினைந்து வாழ்த்தி மகிழ்வோம். நூற்றாண்டு விழா சிறக்க பிரார்த்திப்போம்.

**கலாநிதி**
**ஆறு.திருமுருகன்,**
**தலைவர், ஸ்ரீ துர்க்கா தேவி தேவஸ்தானம், தெல்லிப்பழை**

## தெய்வத்திருமகள்

**வாழ்நாள் தமிழ்ப் பேராசிரியர் அ.சண்முகதாஸ், யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்**

1998 ஐப்பசி மாதம் நாலாம் திகதி நான் மிகுந்த மகிழ்ச்சியுடன் இருந்தேன். அன்று யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் பட்டம ளிப்பு விழா நடைபெறவிருந்தது. "அம்மா" என நாம் அழைக்கும் சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டிக்கு அன்று கௌரவ கலாநிதிப் பட்டம் வழங்குவதென யாழ்ப்பாணப் பல்கலைக் கழக மூதவையும் பேரவையும் ஒப்புதலளித்திருந்தது. அப்பொழுது யாழ்ப்பாணப் பல்கலைக் கழக கலைப்பீடத்தின் தலைவராக நான் பணி செய்துகொண்டிருந்தேன். அம்மாவினை பட்டமளிப்பு அன்று வேந்தருக்கு அறிமுகப்படுத்தும் பணி கலைப்பீடத் தலைவருடையது என்று முன்னரே சொல்லப் பட்டது. எனக்கோ சொல்லொணா மகிழ்ச்சி. 1998.10.04 அன்று காலை எனக்கு மிகுந்த "புழுகம்". இருப்பினும் நாங்கள் அம்மாவை வெறும் தங்கம்மா அப்பாக்குட்டி என்று எண்ணுவதில்லை. அவர் அருள்மிகு துர்க்காதேவி அம்பாளை புரப்பவர் பேணுபவர் என்றே மதித்து வந்தோம். அந்த வகையில் சிறியவனாகிய நான் எப்படி அவரை அறிமுகம் செய்வது என்ற எண்ணமும் உண்டாயது. பல்கலைக்கழக சம்பிரதாயங்களை நாம் எல்லோருமே பேணவேண்டுமென எண்ணி மகிழ்ந்தேன்.

அம்மாவினுடைய வாழ்வில் முதலில் அவருக்கு ஈழத்திலே வழங்கப்பட்ட பட்டம் "சிவத் தமிழ்ச் செல்வி" என்பதேயாகும். 1970ஆம் ஆண்டு ஈழத்துச் சிதம்பரம் என்றழைக்கப்படும் காரை நகர் சிவன் திருக்கோயில் ஆதீனம் "சிவத்தமிழ்ச் செல்வி" என்னும் பட்டத்தினை வழங்கியது. அதனையே அம்மாவும் பிறரும் பயன்படுத்தினர். அதன் பின்னர் பல பட்டங்கள் பெற்ற போதும் ஈழத்திலே அவருக்கு யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம் வழங்கிய "கலாநிதி"ப் பட்டம் சிறப்புடையதாகும். யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்துக்கு அருள்மிகு துர்க்காதேவியின் அருள் கிடைத்தது.



**சிவத்தமிழ் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின் 80 ஆவது அகவை அறக்கொடை விழாவின் போது 2005**

'சிவத்தமிழ்ச் செல்வி' எனப் பலராலும் பல்லாண்டுகளாக நினைக்கப்பட்ட சொல்லப்பட்ட எங்கள் தங்கம்மா அப்பாக்குட்டிக்கு "தெய்வத் திருமகள்" என்னும் பட்டம் அகில இலங்கை இந்துமாமன்றம் 2005ஆம் ஆண்டு யூலை மாதம் 15-17 திகதிகளில் யாழ்ப்பாணத்தில் நடத்திய மாமன்றத்தின் பொன் விழாவின்போது வழங்கப்பட்டது. அம்மாவுக்கு இந்த விழாவின்போது முன்னர் வழங்கப்பட்ட பட்டத்தினை விடச் சிறப்பானதொன்றை வழங்க வேண்டுமென மன்றத்தின் பொதுச் செயலாளர் திரு.கந்தையா நீலகண்டன் கூறினார். பல பட்டங்கள் எங்கள் எண்ணங்களிலே தோன்றின. மாநாட்டுக்கு சில நாட்கள் முன்னர் காரிலே அதுபற்றி பேசிக் கொண்டு வந்தோம். அன்னை சிவத்தமிழ்ச் செல்வியை நினைக்கும்போதெல்லாம் எனக்குச் சேக்கிழாருடைய,

"மங்கையர்க்குத் தனியரசி எங்கள் தெய்வம்
வளவர்திருக் குலக்கொழுந்து வளைக்கை மானி
செங்கமலத் திருமடந்தை கன்னி நாடாள்
தென்னர்குலப் பழிதீர்த்த தெய்வப் பாவை"

என்னும் பாடல் உடனடியாக நினைவுக்கு வரும். அப்பாடலிலே வரும் 'தெய்வப்பாவை' என்னும் தொடர் அம்மாவின் பட்டமாக அமையுமா என எண்ணினேன். இருப்பினும், "தெய்வத்திருமகள்" என்னும் பட்டம் பொருத்தமாக இருக்குமென மதியுரை கூறினேன். பின்னர் எல்லோரும் அதனை ஏற்றுக் கொண்டனர். அப்பட்டத்தினை அன்னைக்கு வழங்கி இந்துத மாமன்றம் மகிழ்ந்தது. சைவ உலகின் தாயாக- ல்லோருக்கும் வழிகாட்டியாக திகழ்ந்துவந்த எங்கள் அன்னையை தெய்வத்தின் உருவாகவே கண்டோம். எனவேதான் யாழ். இந்து மாநாட்டில் அம்மாவை "தெய்வத் திருமகள்" எனப் போற்றிபட்டம் வழங்கிக் கௌரவித்து மாமன்றம் பெருமை தேடிக் கொண்டது."






# பேசாப் பொருட்களைப் பேசுகின்ற ‘உலகின் மறுபக்கம்’!

கடந்த வாரம் (30.11.2024) ‘மறுநிர்மாணம் நண்பர்கள்‘ ஆதரவுடன், லண்டனில் “The Other Side of the World“ எனும் கலா பிள்ளையின் நூல் சிறப்பாக வெளியிடப்பட்டது. இங்கிலாந்திலுள்ள பல்வேறு சமூக அனுசரணையுடன் நடைபெற்ற இந்த நிகழ்வு, மரபு நூல் வெளியீட்டு விழாவை விட வேறுபாடான ஒரு சமூக விழிப்புணர்வு நிகழ்வாக அமைந்தது.

நூலின் அறிமுக உரையை சமூக ஆர்வலரும், திறனாய்வாளரும், சுகாதாரத்துறையில் பணியாற்றுபவருமான மீனாள் நித்தியானந்தன் வழங்க, முப்பதாண்டுகளுக்கு மேலாக ஜேர்மணி–இங்கிலாந்து போன்ற நாடுகளிலிருந்து அச்சில் வெளிவருகின்ற வெற்றிமணி இதழின் பிரதம ஆசிரியர் வெற்றிமணி மு.க.சு. சிவகுமாரன் நூலின் தனிச்சிறப்பையும் அதன் சமூகத் தொடர்பையும் அழுத்தமாக எடுத்துரைத்தார். பேராசான் நித்தியானந்தன், வைத்தியர் பகீரதன் அமிர்தலிங்கம், புற்றுநோய் வைத்தியர் அஞ்சலா பத்மநாதன், நூல்களின் காதலர் பத்மநாப ஐயர், இலக்கியச் செயற்பாட்டாளர் பௌசர், வைத்தியர் பாலா உள்ளிட்ட பல துறைசார் வல்லுனர்களும் கலந்து கொண்ட இந்நிகழ்வு புதியவன் இராசையா, தோழர் முத்து உள்ளிட்ட மறுநிர்மாணம் நண்பர்களினால் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. வெளிவந்திருக்கும் ‘உலகின் மறுபக்கம்‘ நூல், சமுதாயத்தில் பேசப்பட விரும்பாத ஒரு முக்கியமான கருப்பொருளைப் பேசுகின்றது.



இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு மார்பகப் புற்றுநோயின் தாக்கத்தால், அவருக்குக் கடினமான சிகிச்சை அனுபவங்கள் நிகழ்ந்தன.

கீமோதெரபி, ரேடியோதெரபி, கட்டியை அக ற்றும் அறுவைச் சிகிச்சைகளின் ஊடாக அவருக்கு அமைந்த வாழ்க்கைமுறை மாற்றங்களும், சோதனைகளும், அதை வெற்றிகரமாகக் கையாண்டு எப்படி வெளியே வந்தார் என்கின்ற தனிமை சார்ந்த அனுபவங்களும் அவரது எழு த்துகளின் ஊடாக வெளிப்பட்டுள்ளன.

நூலை எழுதத் தூண்டிய கார ணங்களாக முக்கிய சில விடயங்களைக் கலா பிள்ளை வெளிப்படுத்துகிறார்.

★மார்பகப் புற்றுநோயைக் கண்டறியும் சேவைகளை இருபாலரும் பயன்படுத்திக் கொள்ள வேண்டிய அவசியம்.

★புற்றுநோயைக் தொடக்கத்திலேயே கண்டறிவதின் முக்கியத்துவம்.

★உடல் ஆரோக்கியம் மற்றும் மன அமைதியை முன்னோக்கி உடற்பயிற்சி, ஆரோக்கியமான உணவு பழக்கம் உள்ளிட்டவற்றை கடைபிடிக்க வேண்டிய அவசியம்.

★நோய் சமயத்தில் நேர்மறை சிந்தனை மூலம் மனத்தின் ஆற்றலை உயர்த்த முடியும் என்கின்ற சுயநம்பிக்கை போன்றவை இவற்றில் சிலவாகின்றன.



வெளியீட்டு நிகழ்வின் சிறப்பம்சங்களாக, விழாவின், ரஜிதா சாம் பிரதீபன் நடத்திய கலந்துரையாடலில் நூலாசிரியருடன் நடத்தப்பட்ட நேரடி உரையாடலோடு, முன்மாதிரியாக வாழ்ந்து புற்றுநோயை எதிர்கொண்ட விமலா சந்திரன், டென்மார்க்கிலிருந்து இந்நிகழ்வில் கலந்து கொண்டு, தனது அனுபவங்களை பகிர்ந்து கொண்டமை அமைந்தது. அத்தோடு மெய்வெளி தொலைக்காட்சி சாம் பிரதீபனின் நெறியாள்கையில் மதி – காந்தன் தம்பதிகளின் அரங்காற்றுகை அளிக்கை ஒன்று பார்வையாளர்களைக் கவர்ந்து கொண்டது. சாம் பிரதீபனின் இக்கலந் துரையாடலானது புற்றுநோய் குறித்த மனதோட்டங்களையும், அதைச் சுற்றியுள்ள சிந்தனை சிக்கல்களையும் மாற்ற வேண்டும் என்கின்ற கலா பிள்ளையின் நோக்கை மையப்படுத்தியது சிறப்பாக அமைந்திருந்தது. புற்றுநோயால் பாதிக்கப்பட்டவர்கள் வாழ்வில் கடந்து செல்லும் அனுபவங்களை வெளிப்படுத்துவதன் மூலம், அதனைச் சமூகத்தில் ஒரு களங்கமாகக் கருதும் எண்ணங்களை மாற்றி அமைக்க வேண்டும் என்பதே இந்நூலின் ஒரு சாராம்சம். இந்நூலின் விற்பனையிலிருந்து கிடைக்கும் நிதியை, கலா பிள்ளைக்கு சிகிச்சை வழங்கிய The Royal Marsden Cancer Charity, UK க்கு அவர் நன்கொடையாக வழங்குவதும் அவரின் சமூக சேவையினை வெளிப்படுத்துகிறது. பொதுமக்கள் புற்றுநோய் குறித்த விழிப்புணர்வை அதிகரிக்க முடியும் என்பதே இந்நிகழ்வின் முழுமையான செய்தியாகும்.




அனைவருக்கும் இனிய தைப் பொங்கல் நல்வாழ்த்துகள்

# ஆசியாவில் முதலாவது பெண்கள் விடுதியுடன் கூடிய முதலாவது மகளிர் கல்லூரி



யாழ்ப்பாணக் குடாநாட்டின் மத்திய பகுதியில் உள்ள உடுவில் கிராமமானது யாழ்ப்பாண பட்டினத்தில் இருந்து ஏறக்குறைய ஆறு மைல் தொலைவில் அமைந்துள்ளது. பத்தொன்பதாம் நூற்றாண்டின் தொடக்கத்திலேயே சனச்செறிவு உடையதாகக் காணப்பட்ட இக் கிராமத்தை சுற்றி வளம் கொழிக்கும் கிராமங்கள் வியாபித்துக் காணப்பட்டது.

வட கிழக்கில் சுன்னாகமும் வட மேற்கில் சண்டிலிப்பாயும் தெற்கில் சுதுமலையும் தென்கிழக்கில் இணுவிலும் தென்மேற்கில் மானிப்பாயும் சூழ்ந்து உடுவிலை உணர்ச்சி மிக்க இடமாக மெருகூட்டியுள்ளது.

இந்த உடுவில் எல்லோருடைய உதடுகளிலும் உச்சரிக்கவும் உச்சாடனம் செய்யவும் காரணமாக அமைந்தது உடுவில் மகளிர் கல்லூரியின் பிறப்பே ஆகும். இந்த பிறப்பிற்கு காரணம் என்

தர்மகுமாரன்
(ஆசிரியர், உடுவில் மகளிர் கல்லூரி)

னவென்று ஆராயும் போது அதிசயமும் ஆச்சரியமும் நிறைந்த வரலாறு.

இன்றைய சமூகத்தினருடனும் 200 வருடங்களாக மங்காப்புகழுடன் மார்பு தட்டி தலை நிமிர்ந்து பெண்களின் நிலையான இருப்புக்கு நிலை குலையாது தன்னிறைவான கல்வியையும் ஆற்றல்களையும் வளர்த்துக் கொண்டு வருவதுடன் அமுத சுரபி போல செயல்பட்டுக் கொண்டிருக்கின்றது.

உடுவில் மகளிர் கல்லூரியின் வரலாற்றை முன்னோக்கி பார்க்கும் போது வினஸ்லோ தம்பதியினர் உடுவில் வீதியால் சென்று கொண்டிருக்கும் போது பாழடைந்த வீடும் தேவாலயமும் பூந்தோட்டமும் அவர்களை கவர்ந்து ஈர்த்தது. தாம் தேவ ஊழியம் செய்யவும் தமது செயல்பாடுகளை விசாலப்படுத்தவும் ஏற்ற இடமாக இதனைத் தெரிவு செய்தனர்.

இந்நிலையில் அமெரிக்க மிசனரிகள் தாம் தொண்டு செய்ய வந்த சமூக அமைப்பை உற்று நோக்கினர். அதிலே ஏதோ குறையிருப்பதை அவதானித்தனர். அக் காலத்தில் யாழ்ப்பாண பெண்கள் கல்வி என்றால் நினைக்க முடியாத ஒரு காரியமாக இருந்தது. ஆண்கள் மட்டுமே கல்வி கற்க வேண்டும். பெண்கள் வீட்டில் இருந்து கணவனையும் பிள்ளைகளையும் பராமரிக்க வேண்டும் என்ற பிற்போக்கு சிந்தனை நிலவியிருந்தது.

இதனை எப்படியாவது மாற்றியமைக்க வேண்டும் என வின்ஸ்லோ அம்மையார் தனது குறிக்கோளாக கருதி ஆண்டவரின் ஆசீர்வாதத்துடன் இலக்கு நோக்கி பயணிக்க ஆரம்பித்தார். அதற்கான கன்னி முயற்சியாக பழைய உடுவில் வீட்டை திருத்தி அதிலே திண்ணைப் பள்ளியை நடாத்த தீர்மானித்தார்.

இதற்காக தன்னை வருத்தி இரவு பகல் பாராது வீடு வீடாகச் சென்று சிறு பெண்களைப் படிக்க வரத் தூண்டினர். படிக்க வந்தால் நவீன உடுப்புக்களை தருவோம் என பல்வேறு ஊக்குவிப்புக்களை வழங்குவதாக கூறியும் யாரும் படிப்பதற்கு வரவில்லை.

ஒரு நாள் இரண்டு பெண்பிள்ளைகள் விளையாடிக் கொண்டிருக்கும் போது இடியுடன் கூடிய மழை பொழிந்தமையினால் மழைக்கு ஒதுங்குவதற்காக வின்ஸ்லோ அம்மையாரின் வீட்டில் ஒதுங்கிய போது விளையாட்டினால் ஏற்பட்ட களைப்பின் காரணமாக இரண்டு பிள்ளைகளில் ஒரு பிள்ளை வின்ஸ்லோ அம்மையார் கொடுத்த உணவை உட்கொள்கிறார்.

இந்த உணவின் மூலம் பெண் விடுதலை பெறப் போகிறார்கள் என்பதை உணவு உண்ட பெண்களும் உணரவில்லை. யாழ் மாவட்ட பெண்களும் கனவில் கூட நினைக்கவில்லை. மாற்றம் என்பது இது தான் மங்கா புகழுடன் மார்தட்டி நிற்கும் உடுவில் மகளிர் கல்லூரியின் ஆரம்பமும் எழுச்சியும்.

மிகவும் கட்டுபாட்டுடன் சாதியும் மதமும் வேரூன்றி விருட்சமாக இருந்த சமூக கட்டமைப்பு உயிரை விட தன் மானத்தையே பெரிது எனக் கருதி இரண்டு பெண்களையும் தேடிய போது வின்ஸ்லோ அம்மையாரின் திண்ணைப் பள்ளியில் இருந்ததைக் கண்டு வீட்டுக்கு கூட்டிச் சென்றனர்.

அந்த பிள்ளைகள் இருவரும் உயர்குலமென வரையறுக்கப்பட்ட சைவ வேளாள குலத்தை சேர்ந்தவர்கள் என அறிய முடிகின்றது. வீட்டிற்கு சென்றதும் மிஷ




னரிமாரின் உணவை உண்டதை அறிந்த பெண்களின் பெற்றோர்கள் அவர்களை அந்த இரவு தங்களின் வீட்டின் உள்ளே தங்க விடாது வின்ஸ்லோ அம்மையாரின் வீட்டில் கொண்டு போய் விட்டு விட்டு எங்கள் பெண்களை நீங்களே பொறுப்பேற்க வேண்டும். பிள்ளைகளை படிப்பித்து சீதனம் கொடுத்து ஏற்ற மணவாளனையும் தெரிந்தெடுத்து திருமணம் செய்து வைக்க வேண்டும் எனக் கூறிச் சென்று விட்டனர். அதனை மகிழ்ச்சியாகவும் தேவ கிருபையாக கருதி ஏற்றுக் கொண்டார் திருமதி வின்ஸ்லோ.


இவ்வாறு அர்ப்பணிப்புடன் தெற்காசியாவிலே முதல் பெண்கள் விடுதியுடன் அமைந்த பாடசாலையாக வித்திடப்பட்டது. அந்த வித்து விருட்சமாக மாற வேண்டும் என்பதற்காக பெண் பிள்ளைகளை படிக்க அனுப்புமாறு உடுவிலில் உள்ள பெற்றோரிடம் மன்றாட்டமாக கெஞ்சி கேட்ட போது முதலில் மறுத்த பெற்றோர்கள் மேலும் மேலும் வருந்திக் கேட்க மனமிழகிக் கொண்டனர்.

நீங்கள் எங்கள் பிள்ளைகளை வீட்டிற்கு தனியே அனுப்பக் கூடாது எனவும் நீங்கள் உண்ணும் இறைச்சியை எமது பிள்ளைகளுக்கு கொடுக்காது பழங்களை மட்டும் கொடுக்க வேண்டும் என கேட்டுக் கொண்டனர். அதற்கு திருமதி வின்ஸ்லோ பூரண சம்மதம் தெரிவித்தார். திருமதி வின்ஸ்லோ அம்மையாரின் அன்பும் அரவணைப்பும் அறிவு பூர்வமான விடயங்களும் பிள்ளைகளில் ஏற்பட்ட நடத்தை மாற்றத்தையும் கண்டு பெற்றோர்கள் பிள்ளைகளை ஒருவரை ஒருவர் பார்த்து தனது பிள்ளையும் அறிவை பெற வேண்டும் என பிள்ளைகளை கொஞ்சம் கொஞ்சமாக அனுப்ப தொடங்கினர். இது பல்கிப் பெருகி பெண்களின் நிலையான கல்விக் கொள்கையை கொழுந்து விட்டு எரியச் செய்தது. அதற்கு திருமதி வின்ஸ்லோ அம்மையாரின் நேரிய சிந்தனையும் நேர்மையான நோக்கங்களே ஆகும்.

பெண் பிள்ளைகளின் எண்ணிக்கை நாளொரு வண்ணமும் பொழுதொரு மேனியுமாக அதிகரிக்கத் தொடங்கியது. இதனை அவதானித்த அமெரிக்க மிஷன் சங்கத்தினர் 1823 ஆம் ஆண்டு உடுவிலில் பெண்கள் பாடசாலையை ஆரம்பிக்க அனுமதி வழங்கினர். 1824 ஆம் ஆண்டு வின்ஸ்லோ அம்மையாரின் கனவு நனவாகியது.

இவ்வாறு ஆரம்பிக்கப்பட்ட இப் பாடசாலை ஒவ்வொரு ஆண்டிலும் முன்னேற்றகரமான

30 ஆம் பக்கம் பார்க்க...



## திருவள்ளுவர் டோட்மூண்ட் நகரின் மைல்கல்லானது!
(Milestone)

**நாடாளுமன்ற உறுப்பினர் வொல்கான் பாறன்**

திறந்து வைத்து பேசிய நாடாளுமன்ற உறுப்பினர் வொல்கான் பாறன்,
எமக்கு எங்கு சென்றாலும் வீட்டை அண்மித்துவிட்டோம் என்பதைக்காட்ட,
உயரத்தில் தெரியும் U என்ற எழுத்தைத் தாங்கிய கட்டிடம் இருந்தது.
இனி திருவள்ளுவரும் இருக்கிறார். குறிப்பாக இது யாவருக்குமான
அடையாளமாகும் என்றார்.
இங்கு அமைந்திருக்கும் தமிழ் மெய்யியலாளர் திருவள்ளுவர் சிலையில் கையில்
வைத்திருக்கும் பனை ஓலைகளில் "அனைத்து உயிர்களும் சமம்" என்று
எழுதப்பட்டுள்ளது. அதைத்தான் தமிழ் சமூகம் சொல்ல விரும்புகிறது.
அந்த உருவம் பல்லின மக்களிடையேயான நட்பின் அடையாளமாக யேர்மனியப்
பெண் கத்தரீனா பொக் அவர்களால் வடிவமைக்கப்பட்டுள்ளது.



அனைவருக்கும் இனிய தைப் பொங்கல் நல்வாழ்த்துகள்

# வயோதிபத்தில் தனிமை

குழந்தைப் பருவத்தில் தாயின் மடியில், பிள்ளைப் பருவத்தில் சகோதரங்கள் பாசத்தில், இளம் பருவத்தில் சிநேகிதர் பக்கத்தில், மங்கை பருவத்தில் கணவனின் அல்லது மனைவியின் அரவணைப்பில், வயதுவந்த காலத்தில் பிள்ளைகள் அன்பில், தொடர்ந்து பேரப்பிள்ளைகள் கலகலப்பான மகிழ்ச்சியில். இப்படியே தொடர்ந்து வந்தால்

**பிள்ளைகள் இரண்டுக்கு மேல் இருந்தால், அந்த ஒற்றை பெற்றவர் பந்தாடவும் படுவார்**



வாழ்க்கையில் வேறு என்ன வேண்டும்? ஆனால் அப்படி நடப்பதற்கு எந்தவிதச் சாத்தியக்கூறும் இல்லை. எங்கே இல்லை? புலம்பெயர்ந்த நாடுகளில் வாழும் தமிழர்களாகிய எங்களுக்கு!

தாய்நாட்டில் வாழ்ந்த போது அது ஒரு நிலாக்காலம், கூட்டுக்குடும்பம்! ஒரே வீட்டிலேயே அப்பா, அம்மா, பேரன், பேர்த்தி, ஏன் பூட்டன், பூட்டி கூட ஒன்றாக ஒரே வீட்டில் வாழ்ந்தார்கள். சகோதர உறவுகளும் சேர்ந்து ஒன்றாக வாழ்ந்ததும் உண்டு. சாப்பாடு? ஒரே பானையில் பதினைந்து பேருக்குச் சாதம் வடிப்பார்கள். எங்கள் மொழியில் சோறு வடிப்பார்கள்.

அந்தக் காலத்தில் இதனால் தான் ஒரு பொன்மொழியும் உருவாகியிருக்கும் என எண்ணுகிறேன்:

“கூழோ கஞ்சியோ உள்ளதைப் பகிர்ந்து சாப்பிடுவோம்.”

அக்காலத்தில் தனிமை என்பதே யாருடைய வாழ்க்கையிலும் ஏற்பட்டதே கிடையாது. வயோதிபர் இல்லம் இருந்திருக்கலாம், ஆனால் கேள்விப்பட்டதே



பாக்குப் பாட்டி (யேர்மனி)

கிடையாது. எங்கேயோ தூரத்தில் கைத்தடியில் இருப்பதாக அறிந்திருக்கிறேன். இதைக் கட்டாயம் கவனிக்கவும். எங்கேயோ தூரத்தில்!

இப்படியான அற்புதமான அழகான வாழ்க்கையை விட்டு வெளிநாடுகளுக்கு வந்தோம் நாங்கள். வந்தோம் என்பதைவிட விரட்டப்பட்டோம் என்று சொல்லுவதே பொருத்தமாக இருக்கும். புதிதில் வெளிநாடு சொர்க்கமாக இருந்தது. சொர்க்கலோகத்தில் ரொக்கமாகப் பணமும் சேர்ந்தது. உழைப்பு, உழைப்பு, உழைப்பு. தொடர்ந்து கல்யாணம், வாழ்க்கை, குழந்தை குட்டிகள்.

நாங்கள் சின்ன வயதில் அனுபவிக்காத விளையாட்டுப் பொருட்களை எங்கள் பிள்ளைகள் அனுபவிக்க வேண்டும்.

நாங்கள் சாப்பிடாத சாப்பாடு பிள்ளைகள் சாப்பிட வேண்டும். நல்ல நல்ல உடுப்புகள் பிள்ளைகள் போட வேண்டும்.

நல்ல படிப்புகள் படித்து நல்ல வேலைகளில் அமர்ந்து பெரிய சம்பளம் எடுத்து, பிள்ளைகள் எங்களையும் கடைசிக் காலங்களில் வைத்துப் பார்க்க வேண்டும். உலகத்தில் உள்ள அனைத்துப் பாசத்தையும் அன்பையும் கொட்டி வளர்த்திருக்கிறோம் அல்லவா?

இப்படியே எங்களை ஓரம் தள்ளி வைத்துவிட்டு பிள்ளைகளுக்காகவே வாழ்ந்தோம். பிள்ளைகளும் வளர்ந்து கல்யாண வயதை எட்டியிருப்பார்கள். ஓரளவு வயது வந்து, வாழ்ந்து கொண்டிருக்கும் போதே பெற்றோர் எல்லோருக்கும் புரிந்து கொண்டு வந்திருக்கும்: “கடைசி காலங்களில் பிள்ளைகள் எங்களை தங்களுடன் வைத்திருக்கமாட்டார்கள்” என்பதும், “நாங்களும் அவர்களுடன் சேர்ந்து வாழ முடியாது” என்பதும்.

**இதனால் பெற்றோரிடமிருந்து வரும் சில பொன்மொழிகள்:**

1. எங்களைத் தங்களுடன் வைத்திருக்க வேண்டாம். கடைசி காலங்களில் கண் எட்டும் தூரத்தில் ஒரு சிறு வீட்டில் வைத்தால் போதும்.

2. எங்களுக்கு பரவாயில்லை. இவையள் எங்களை பார்க்காவிட்டால் என்ன? எங்களுக்கு பென்சன் வரும் வீடு கிடைக்கும் நாங்கள் நல்லபடியாக வாழ்வோம்.

3. பிள்ளைகளை குற்றம் சொல்லி என்ன பயன்? பள்ளிக்கூடத்துக்கு போனா வேறு கலாச்சாரம், வீட்டில் வந்தா தமிழ் கலாச்சாரம். அவங்க எதைதான் பின்பற்றுவது? அவங்க என்ன செய்கிறாங்களோ, எங்களுக்கு உடன்பாடுதான்.

4. என் பிள்ளை எந்த நாட்டு பிள்ளையை கட்டுறானோ (றாளோ), அவங்க எங்கே எங்களை பார்ப்பது?

5. பிள்ளைகள் கட்டின பிறகு ஒன்றாக வாழவே முடியாது. இப்போதைய கால பிள்ளைகள் ஒற்றுமையா வாழமாட்டார்கள்.

6. ஐயய்யோ! நாங்க போய் வாழமாட்டோம்ப்பா. அதை தொட்டா குற்றம், இதை தொட்டா குற்றம்.

இப்படிப் பலவிதமான பேச்சுகள் வயோதிபர்களிடையே உண்டாகும். பிள்ளைகளைத் திருமணம் செய்து கொடுத்து தனிக்குடித்தனத்துக்குச் சந்தோஷமாக வழி அமைத்து அனுப்பிவிட்டு, தாங்கள் தனிமையை நாடிவிட்டார்கள்.எந்த விடயத்தில் ஒற்றுமை இல்லாவிட்டாலும், பெற்றோர்கள் எல்லோரும் இதில் ஒற்றுபட்டுவிட்டார்கள்:

தனிமை!

இங்குதான் “வயோதிப தனிமை” என்னும் தலைவலி உருவாகிறது. தனிமையிலும் பலவகையான தனிமைகள் உண்டு. ஆனாலும் வயோதிபப் பெற்றோர்கள் தனித்து விடப்பட்டு, தனிமையின் சோகத்தை அனுபவித்துக் கொண்டுதான் இருக்கிறார்கள். இதில் பிள்ளைகள் எந்தவிதத்திலும் பாத்திரவாளிகளும் இல்லை குற்றவாளிகளும் இல்லை.

இந்தக் கால வாழ்வாதாரம் இதுதான்.

**இதைப் புரட்டிப் பார்த்தால் புரியும்:**

தன்வினை தன்னைச் சுடும் கடவுள் திருப்பி அடிக்கிறான் செய்த வினைகள் நின்று தாக்கித் கர்மா இப்படி பலவாறாகச் சொல்லலாம். இருபது, முப்பது, நாற்பது வருடங்களுக்கு முன்பு அதே பெற்றோரைத் தவிக்கவிட்டு ஏங்கவிட்டு, நாட்டுக் கலவரத்தைச் சாக்காக வைத்து நாங்கள் ஓடி ஒளிந்தோம். அதன் பலாபலனை இன்று நாம் அனுபவிக்க வேண்டாமா? அதுவும் பிள்ளைகள் இரண்டுக்குமேல் இருந்தால், அந்த ஒற்றை பெற்றவர் பந்தாடவும் படுவார்.

பந்து யார்பக்கம் என அறிய வாருங்கள் மாசிமாதம் வெற்றிமணிக்கு.

டொட்மூண்ட் மாநகரில்....
தமிழர் அரங்கம்
சனிக்கிழமை 15.00- 18.00
திரையிசை நடனம்
(Cinimatic Dance)
கீபோர்ட் (Keyboard)
வெள்ளிக்கிழமை 18:00-19:00
அனுபவம் வாய்ந்த ஆசிரியர்களால் கற்பிக்கப்படுகிறது.சிறுவர்களில் இருந்து பெரியோர்கள் வரை இணைந்து கொள்ளலாம்
Für Kinder und Jungendliche und Erwachsene!
6€ Pro Stunde
வெள்ளிக்கிழமைகளில்
Jeden Freitag
தமிழ் மொழி (Tamillsche Sprachunterricht)
வெள்ளிக்கிழமை 16:00-17:45
Free
சிறார்களுக்கும்,இளையோர்களுக்கும், எளிமையான முறையில் தமிழ் கற்பிக்கப்படும்.
Für Kinder und Jungendliche!Auch speziell jugendliche, die sich mit der tamilische Sprache nicht auskennen
யேர்மன் மொழி (Deutsch für Anfänger / Innen)
ICH LERNE DEUTSCH
6€ Pro Stunde
வெள்ளிக்கிழமை 17.45 -19.15
யேர்மன் மொழியில் பேசவும் எழுதவும் கற்பிக்கப்படும் யேர்மன் குடியுரிமை பெறுவதற்கு பயன் உள்ளதாக அமையும்
தமிழர் அரங்கம்
Rheinische Srt.76-80
44137 Dortmund
Info:0151 633 633 33
0178 146 006 3

அனைவருக்கும் இனிய தைப் பொங்கல் நல்வாழ்த்துகள்



# சிரியாவில் அசாத் ஆட்சியின் வீழ்ச்சி: அரபு வசந்தத்தின் முற்றுப்புள்ளியா?

**பல ஆண்டுகளாக உள்நாட்டு போர் நடந்த சிரியாவின் தலைநகரை கிளர்ச்சியாளர்கள் கைப்பற்றியுள்ளமை அரபு நாடுகளில் மேலும் பதற்றத்தை அதிகரித்துள்ளது. தலைநகரை தாங்கள் கைப்பற்றி விட்டோம் என்று கிளர்ச்சியாளர்கள் குழுவின் தளபதி ஹசன் அப்தில் கனி கூறியுள்ளதுடன், அசாத்தின் அரசாட்சியை கைப்பற்ற தாம் நீண்ட காலமாக தயார் படுத்தியதாக ஹயத் தஹ்ரீர் அல்-ஷாம் குழுவின் தலைவர் அகமது அல்-ஷரா தெரிவித்து உள்ளார்.**

துனிசியாவில் 2010ஆம் ஆண்டு அன்றைய ஆட்சியாளருக்கு எதிராக மல்லிகைப் புரட்சி என்ற பெரும் கிளர்ச்சி வெடித்து ஆட்சி மாற்றத்தை நிகழ்த்தியது.

இப்படியாக ஆரம்பித்த அரபு வசந்தம் தான் அரபு நாடுகளிலும, ஆப்பிரிக்க நாடுகளிலும் ஆட்சி அதிகாரத்தை மாற்றியுள்ளது.

### ஆட்சிகளை கவிழ்த்த அரபு வசந்தம் :



அரபு வசந்தங்களாக எகிப்து, லிபியா, யேமனில் ஆட்சி மாற்றங்கள் நிகழ்ந்தின. அரபு வசந்தம் தான் அரபு, ஆப்பிரிக்க நாடுகளின் பேரழிவையும் விளைவித்தது.

இறுதியாக சிரியாவில் தொடங்கிய உள்நாட்டு யுத்தம் பாரிய அழிவைச் சந்தித்து நிற்கிறது. இந்த அரபு வசந்தத்தின் தாக்குதலுக்கு அல்ஜீரியா, ஈராக், ஜோர்டான், குவைத், மொராக்கோ, சூடானும் தப்பவில்லை.

சவூதி, ஓமன், மேற்கு சகாராவிலும் சாடையாக அரபு வசந்தம் எட்டிப் பார்த்து ஓய்ந்தது.

### அரபு வசந்தமும் -அதன் விளைவும்:

அரபு வசந்தமும், அதனுடைய போரின் விளைவுகளும் அந்த பிராந்தியத்திலுள்ள நாடுகளுக்கு மட்டுப்படுத்தப்பட்ட வளர்ச்சியில் 600 பில்லியன் டாலருக்கு மேலான நஷ்டத்தை விளைவித்திருக்கிறது என்று ஐக்கிய நாடுகள் பொருளாதர அவையின் ஆய்வு தெரிவிக்கிறது.


அத்துடன் இந்த பிராந்திய நாடுகளின் தேசிய ஒட்டு மொத்த உற்பத்தியில் 6 சதவீதத்துக்கு இந்த இழப்பு சமம் என்று ஐநாவின் இந்த புள்ளிவிவரங்கள் குறிப்பிடுகின்றன. போர்களும், பாதுகாப்பின்மையும், சுற்றுலா துறையால் கிடைக்கின்ற வரவை பாதித்து, வெளிநாட்டு முதலீட்டையும் தடுத்து, கடன், வேலைவாய்ப்பின்மை மற்றும் ஊழல் போன்ற பொருளாதார பிரச்சனைகளை மோசமாகியுள்ளதாக கூறப்படுகிறது.

### சிரியாவில் ஆட்சி மாற்றம்:

போர் மேகம் சூழ்ந்துள்ள மத்திய கிழக்கில் தொடர் பதற்றம் அதிகரித்து வருகிறது. சிரியா நாட்டில் 2011-ம் ஆண்டு முதல் உள்நாட்டு போர் நடந்து வருகிறது. மூன்று இலட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் கொல்லப்பட்டு உள்ளனர் என ஐ.நா. அமைப்பு தெரிவிக்கின்றது. இந்த எண்ணிக்கையை விட இரு மடங்காக ஆறு இலட்சம் என சிரியாவின் மனித உரிமைகள் கண்காணிப்பகம் தெரிவிக்கின்றது.

சிரியாவில் கடந்த 2011ம் ஆண்டில் அதிபர் அசாத்திற்கு எதிராக டெரா பிராந்தியத்தில் உள் நாட்டு கிளர்ச்சி உருவானது. அது மேலும் பல பிராந்தியங்களுக்கும் பரவிய நிலையில், ஆட்சியாளர்களுக்கு எதிராக கிளர்ச்சிக்குழு பலவும் உருவானது.

பல்வேறு கிளர்ச்சி குழுவுக்கும், சிரியா அரசுக்கும் இடையே கடந்த 14 ஆண்டுகளாக உள்நாட்டு போரில் ஏராளமான சிரிய மக்கள் அகதிகளாக பல் வேறு உலக நாடுகளில் தஞ்சமடைந்துள்ளனர்.



ஐங்கரன் விக்கினேஸ்வரா

### பொருளாதாரச் சரிவும் நெருக்கடியும்:

நீண்ட கால யுத்தம் சிரியாவை சீரழித்து, அதன் பொருளாதாரத்தை முடக்கி, உள்கட்டமைப்பை அழித்து, லட்சக்கணக்கான மக்களை இக்கட்டான சூழ்நிலையில் தள்ளியுள்ளது. சிரியாவில் போருக்கு முன்பு இருந்த 2.2 கோடி மக்கள் தொகையில், பாதிக்கும் மேற்பட்டவர்கள் இடம்பெயர்ந்து உள்ளதாக ஐ.நா கூறியுள்ளது.

உள்நாட்டில் இடம்பெயர்ந்த 68 லட்சம் மக்களில், 20 லட்சத்திற்கும் அதிகமானோர் மிகக் குறைவான அடிப்படை வசதிகளுடன் நெரிசலான முகாம்களில் வாழ்கின்றனர். அதனை விட கூடுதலாக 60 லட்சம் பேர் நாட்டை விட்டு வெளியேறியுள்ளனர்.

இவற்றை மறுகட்டமைப்பு செய்வதற்குத் தெளிவான பாதை இல்லாமல், இந்தப் போர்ச்சூழல் அடிப்படைத் தேவைகளுக்கும் நெருக்கடியை உருவாக்கியுள்ளது.

பெரும்பாலும் லெபனான், ஜோர்டான் மற்றும் துருக்கியில், 53 லட்சம் அகதிகள் உள்ளனர். வடமேற்கு சிரியாவில் ஏற்கெனவே 20 லட்சம் மக்கள் முகாம்களில் வாழ்கின்றனர். இடம்பெயர்ந்தவர்களில் பலர் உதவி பெறும் நம்பிக்கையில் அயல் நாடுகளுக்கு அகதிகளாக செல்கிறார்கள். ஆனால் உள்நாட்டில் இடம்பெயரும் அதிகளவிலான மக்களைப் பாதுகாக்கும் சூழல் அங்கு இல்லை என்று கூறப்படுகிறது.

இந்தச் சமீபத்திய மோதலுக்கு முன், 2023ஆம் ஆண்டு நிலவரப்படி, சிரியாவில் 1.53 கோடி மக்கள் அடிப்படை உதவிகள் தேவைப்படும் நிலையில் இருந்தனர். 1.2 கோடி மக்கள் கடுமையான உணவுப் பஞ்சத்தை எதிர்கொள்ளும் நிலையில் இருந்தனர்.

மேலும் பிப்ரவரி 2023இல் துருக்கியின் காசியான்டெப் அருகே

28 ஆம் பக்கம் பார்க்க...

NANDY'S CURRY'S & MORE
WWW.NANDYS.DE
Düsseldorf
ஒரே குடையின் கீழ் எங்கள் சேவை

Nandy's Catering & Partyservice

உங்கள் இல்லத்தில் எந்த வைபவங்களாக இருந்தாலும் குன்றாத சுவையுடன், சுடச் சுடப் பரிமாறுகின்றோம்.
இலங்கை, இந்திய, ஐரோப்பிய உணவுகளையும் தயாரித்து வழங்குகின்றோம்.
பரிமாறுதல் ஒரு கலை அது எமது நிறுவனத்தின் கைவந்தகலை!

உணவு விநியோகம் பரிமாறல் மற்றும் நிழல்படம், வீடியோ அதுமட்டுமன்றி எமது திறமையான ஊழியர்கள் உங்கள் விழாவை திட்டமிட்டுதல், திருமணமேடை, மண்டபம் மற்றும் மண்டபச் சோடனைகள் மற்றும் நடைமுறைப்படுத்துதல் போன்றவைகளுக்கு உதவ ஆயத்தமாக உள்ளோம்.

தொடர்புகளுக்கு: 0173-7424955
0211-7691974
www.Nandys.de | email: info@nandys.de

அனைவருக்கும் இனிய தைப் பொங்கல் நல்வாழ்த்துகள்




அனைவருக்கும் இனிய தைப் பொங்கல் நல்வாழ்த்துகள்

# சூரிய தரிசனம்

சூரியதரிசனம், ஞாயிறு வணக்கம், ஞானபாநு , வசன கவி போன்ற பாரதியின் வாரிதி வரிகளுக்குள் பேரொளி பூத்து நிற்கும் சூரிய பகவானின் பேரெழிலைப் பருகா தவர் இலர்.

> **பொருள் யாவிற்கும் முதலே!**
> **பொன்செய் பேரொளித் திரளே!**
> **பருதியே ! பானுவே!**

நின்னை வணங்கிட வந்தேன் வாழ்த்திட வந்தேன் எனப் பாடும் பாரதி, தமிழ் விசும்பின் ஒற்றைச் சூரியனாய் நின்று உலகொளிர்விக் கிறார்.

பாரதியின் உள்ளம் மிகப் பெரியது. அனைத்து உயிர்களின் மீதும் அதீத அன்பு கொண்டது. உயிருள்ளவற் றையும் , உயிரற்றவற்றையும் பேத மின்றிப் பார்த்து, பிரபஞ்சம் முழுவ தும் தன் சொந்தமெனக் கொண்டா டும் பெருவுள்ளம்.

பாரதி ஒரு வாரிதி என்று நான் மட்டுமா கூறுகிறேன் ? அவரே தன் மன விசாலத்தைக் கூறுகிறார்.

என்ற னுள்ளங் கடலினைப் போலே எந்த நேரமும் நின்னடிக் கீழே எந்தன் உள்ளம் கடலைப் போல என்கிறார். மா கடலாகக் கிடந்தாலும் , எப்பேர்ப்பட்ட பெரி யோரானாலும் பணிவு என்பது மிக அவசியம் என்பதை மறைமுகமாகச் சுட்டுகிறதோ இந்த வரிகள் என்று கூட எண்ணத் தோன்றும். சுடர், ஜோதி , ஒளி போன்ற மந்திரச் சொற்களை பாரதியிடம் அதிகம் காணலாம். ஒவ்வொரு உயிரிலும் ஆத்ம ஜோதி நிறைய வேண்டும், அறிவு சுடர்வி ட்டுக் கொண்டே இருக்க வேண்டும், உடல் ஒளி பொருந்தி இருக்க வேண்டும் என ஒவ்வொரு அணுவி லும் ஜோதி நிறைய நான் நன்றாக வாழும் படி செய்வாயே என வள்ளிய தேவனைக் கேட்கிறார்.

ஆதலினால் காதல் செய்வீர் உலக த்தீரே என்று காதலைப் போற்றிப் போற்றிப் புகழ்ந்த பாரதிக்கு, சூரியன் பூமியைப் பார்த்துக் கொண்டிருப்பது கூட காதலாகத் தான் தெரிகிறது.

> **காதல் கொண்டனை**
> **போலும் மண்மீதே,**
> **கண்பிறழ் வின்றி நோக்குகின் றாயே!**

மாதர்ப் பூமியும் நின்மிசைக் காதல் மண்டினாள், இதில் ஐயமொன் றில்லை.

ஆஹா! அதுதானே! பேரெ ழில் புகழ் பூத்து ஜொலித்துக் கொண் டிருக்கும் ஒளிதரும் தேவனிடத்தே காதல் மலர்வது சகஜம் தானே .

ஆனால் ! சூரியனையே பெற்றோராய் கருதும் பாரதி யின் மெய்ஞ்ஞான அறிவு கண்டு வியந்து போனேன். அதுவும் பெற் றோர் என்றால் எத்தனை மரியாதை இருக்க வேண்டும் என்பதும் சொல்லாமல் சொல்கிறார்.



> **ஆதித் தாய்தந்தை நீவிர் உமக்கே**
> **ஆயி ரந்தரம் அஞ்சலி செய்வேன்.**

சூரியனை ஆதித் தாய் தந்தை யாக தெய்வமாக குருவாக எனப் பலவாறும் போற்றி நன்றி கூற, பண்டிகையாகவே கொண்டாடும் தமிழர் பாரம்பரியம் எத்தனை சிற ந்தது.

> **திண்ணிய கருத்தி னோடும்**
> **சிரித்திடு முகத்தி னோடும்**
> **நண்ணிடும் ஞானபாநு**
> **அதனை நாம் நன்கு போற்றின்,**
> **பண்ணிய முயற்சியெல்லாம்**
> **பயனுற வோங்கும்**
> **எண்ணிய எண்ண மெல்லாம்**
> **எளிதிலே வெற்றி யெய்தும் !**


பேய்கள் தொலைய , திருவளர் வாழ்க்கை, கீர்த்தி, தீரம், நல் லறிவு, வீரம் மருவுபல் கலையின் சோதி வல்லமை யென்ப வெல்லாம் வந்து நிறைய , பிறந்திருக்கும் புது வருடம் வெற்றிமணி வாசகர்களுக்கும் , உலகளாவிய ரீதியில் இருக்கும் தமிழ் இனியர்களுக்கும் பேரின் பத்தை நல்கிட நவமுறு ஞான பாநுவை நண்ணிப் பணிகிறேன் !

“சூரிய உதயத்திலேயும் சூரிய அஸ்தமனத்திலேயும் வானத் தில் நடக்கும் இந்திர ஜாலக் காட்சி யில் கணந்தோறும் புதிய புதிய வினோதங்கள் மாத்திரமேயன்றி இன்னுமொரு விசேஷம் உண்டு. நேற்றிருந்தது போல் இன்றைக்கி ராது. இன்று இருப்பது போல நாளை இராது. தினந்தோறும் வெவ்வேறு வியப்புகள், வெவ்வேறு உலகங்கள், வெவ்வேறு மகிமைகள், வெவ்வேறு கனவுகள், வெவ்வேறு ஆனந் தங்கள்......” ஃஷ பாரதி கர்மயோகி பத்திரிகை



கலாதரி
திவ்யா சுஜேன்
(இலங்கை)




Nila Decoration
GN EVENT
NANDY'S
THE BEST OF 90'S & 2000
Alaipayuthey
அலைபாயுதே
JANUARY
11
KORG
GRUGAHALLE ESSEN
FOR SPONSORS & MORE INFO
BOOKING PARTNER
gn_event_germany
0178 378 09 86
gnevent.info@gmail.com

# யாரோ ஒருவருக்காக உழைத்துக்கொடுக்கும் நாம்!



"திரை கடலோடி திரவியம் தேடியவர்கள் தமிழர்கள்"

என நாமெல்லாம் படித்திருப்போம் ! சங்க காலம் முன்னிருந்து அதன் பின்னாலான பல காலகட்டங்கள்வரையிலும் உலக வணிகத்துறையில் மிகமுக்கியமான இடம் நமக்கிருந்தது என்று சொன்னாலும் மிகையில்லை . ஆனால் அவையெல்லாம் இன்று பழைய கதைகளாகிப்போனதோ என்னவோ . வணிகம் என்றாலே, தமக்கும் அதற்கும் சம்பந்தமில்லாதது போலவும், தம்மால் ஒருபோதும் வணிகத்துறையில் சாதிக்கவே முடியாதென்பது போலவும் சிலர் ஒதுங்கி, ஒடுங்கிக்கொண்டுள்ளனர். உண்மையில் இத்தகைய முற்கற்பிதங்கள் தான் வணிகத்துறையில் நாம் நுழைவதற்கும், சாதிப்பதற்கும் தடைக்கற்களாக இருக்கின்றன என்பதுதான் யதார்த்தம்.

ஆண்களோ பெண்களோ, பாலின பாகுபாடின்றி இன்றெல்லாம் நமக்கு தொழில் மிக முக்கியமானது. ஏனெனில் அதிகரித்து வரும் இந்த வாழ்க்கைச் செலவை சமாளிக்க, நல்ல வருமான ஆதாரம் இருக்க வேண்டும். ஆனால் இன்றைய காலகட்டத்தில் ஒரு நல்ல வருமான ஆதாரதினை ஒருவருக்கு கீழ் அல்லது ஒரு நிறுவனத்திற்காக செய்யும் வேலையை மாத்திரம் வைத்துக்கொண்டு பெற்றுவிடமுடியாது. ஒரு நல்ல வேலை கிடைக்காததால் தற்கொலை செய்துகொள்ளும் , அல்லது படித்த படிப்பிற்கு தங்களுக்கு யாரும் நல்ல வேலை கொடுக்கவில்லை என்பதால்தான் தங்களுடைய வாழ்க்கையே தடம் புறண்டுபோனது போன்ற கருத்துக்களை சொன்ன "சுவரில்லா சித்திரங்கள் " " வறுமையின் நிறம் சிவப்பு " போன்ற தமிழ்த் திரைப்படங்களை பார்த்து அந்த கதாநாயகர்களுக்காக மனம் நொந்து கவலைப்பட்ட ஒருத்திதான் நானும்.

ஆனால் இப்போது யோசித்துப்பார்க்கிறேன் ... நாம் நன்றாக படித்திருக்கின்றோம் நாம் படித்த படிப்பிற்கு அடுத்தவர்தான் நமக்கு வேலை தரவேண்டும் என்றும், எதோ ஒரு நிறுவனத்தில் இனைந்துகொண்டு, மாதாமாதம் சம்பளம் வாங்கிவிட வேண்டும் என்கிற அந்த காலை எட்டு மணித்தொடக்கம் மாலை ஐந்து முப்பது மணிவரையிலான யாரோ ஒருவருக்காக உழைத்துக்கொடுக்கும் வாழ்க்கைமுறையினைத்தான் நாமெல்லாம் மிக நீண்டகாலமாகவே கொண்டாடிக்கொண்டு வந்திருக்கின்றோம் இல்லையா?

அதிலும் விடுமுறை எடுத்துக்கொண்டால் கூட எங்கே நமக்கு பதிலாக நம்முடைய இடத்தினை வேறு யாருக்கும் கொடுத்துவிடுவார்களோ என்கிற அச்சத்தில் ஒரு நாள்கூட அதிகப்படியாக விடுமுறை எடுத்துவிடக்கூடாது என்பதிலும் ,நிறுவன பொறுப்பாளர் நம்மீது திணிக்கும் அதிகப்படியான வேலையினை செய்துகொடுக்காவிட்டால் நம்மை வேலையைவிட்டு தூக்கிவிடுவார்களோ என்கிற வேலை பற்றிய



நிச்சயமின்மையால்மாடுபோலஎல்லாபணிகளையும் மிகக்குறைந்த சம்பளத் திற்காக இழுத்துப்போட்டு செய்தவர்கள் இன்னும் செய்துகொண்டிருப்பவர்கள் நம்மில் எத்தனைபேர் ? முன்புபோல் அல்லாமல் தற்போதெல்லாம் சிஸ்டம் கொஞ்சம் மாறியிருக்கிறது என்றுகூட சொல்லலாம் . இன்றைய தலைமுறையினர் யாரும் ஒரே நிறுவனத்திற்காக , ஒரே வேலைக்காக மல்லுக்கட்டிக் கொண்டிருப்பதில்லை. அவர்களது வேலை பற்றிய தீர்மானங்கள் மிக ஆரோக்கியமானதாக மாறியிருக்கிறது என்றுகூட சொல்லலாம்.



பிரியா இராமநாதன்
(இலங்கை)

நாம் இன்னொருவருக்காக தொட ர்ச்சியாக நம்முடைய உழைப்பினை ஊதியத்திற்காக வழங்கிக் கொண்டிருப்பதைக் காட்டிலும், நம்முடைய சொந்த வணிகத்தை தொடங்கினாலும், அதிலிருந்தும் நல்ல வருமானத்தை ஈட்டலாம். இந்த வணிகம் என்பது இன்றைய பல இளைஞர்களிடையே பரவலாக பேசக்கூடிய விடயமாக இருந்து வருகின்றது. நாம் ஒரு வியாபாரத்தை செய்கின்றோமா அல்லது வேலை தேடப்போகின்றோமா என்பது அவரவர் தனிப்பட்ட விருப்பம். எனினும் நம்முடைய வருமானத்தை வகுத்துக் கொள்ள வேறொருவரின் கீழ் பணியாற்றுவதை விட, நம் சொந்த வியாபாரத்தை நடத்துவதன் நன்மை பன்மடங்கு அதிகமானது . ஏனெனில், அது நமக்கு மட்டுமல்ல நம்முடைய சமூகத்திற்கும் , நாட்டிற்கும், ஏன் இந்த உலகிற்குமே சிறந்தது. உண்மையில் கிடைக்காத வேலைக்காக அதன் பின் ஓடுவதை விட ஒரு தொழிலில் இறங்குவது ஒரு நல்ல மூளை உள்ள ஒருவர் செய்யும் வேலை.

நாம் வேறொருவரின் கீழ் பணிபுரியும் போது, நாம் எவ்வளவுதான் கடினமாக முயற்சி செய்து உழைத்தாலும், பெரும்பாலான சந்தர்ப்பங்களில் நாம் செய்யும் வேலையைப் நிறுவனம் பாராட்டத் தவறிவிடுவது வழக்கமான விடயமே . இங்கே நம்முடைய கடின உழைப்பின் பலனை பெற்றுக் கொள்ளப்போவது வேறு யாரோ ஒரு நபரே . இதே நாம் நம்முடைய சொந்த வியாபாரத்தை செய்யும்போது அது ஒரு பிரச்சினையாக இருக்காது. நாம் உண்ணாமல் உறங்காமல் கண்விழித்து கடினமாக உழைத்தாலும் எந்த இழப்புமின்றி, செய்த அனைத்திற்கும் பலனை நாமே அனுபவிக்க முடியும். ஒரு இடத்தில் ஒருவருக்கு கீழ் வேலையை செய்து, சம்பாதிப்பதை காட்டிலும் புதிதாக சொந்தத் தொழிலைத் தொடங்கி நம்முடைய நிறுவனம் நாளுக்கு நாள் வளர்ந்து வருவதை பார்ப்பது என்பது அளவிடமுடியாத ஓர் மகிழ்ச்சியினை நமக்கு அள்ளிக் கொடுக்கக்கூடியது . ஒருவருக்கு கீழ் ஓரிடத்தில் வேலையைச் செய்யும்போது வாழ்க்கையின் இலக்குகளை அடைவதென்பது அவ்வளவு இலகுவானதல்ல. ஏனென்றால், ஒரு இலக்கை நோக்கி நாம் எவ்வளவு கடினமாக உழைத்தாலும், சம்பளம் என்பது நிறுவனம் விரும்பும் தொகையில்தான் அமையும். ஆனால் நம்முடைய சொந்த வணிகத்தினை செய்யும்போது, ஒரு அழகான வீடு, வாகனம் ஆகிய கனவுகளை அந்த நேரத்தில் மனதில் வைத்து, அந்தக் கனவுகளை நனவாக்க கடுமையாக உழைக்க வாழ்க்கையின் குறிக்கோள்களாக எடுத்து செய்து கொண்டு போக முடியும்.

குறிப்பிட்ட வயதெல்லையில் ஓய்வு பெற்றுக்கொண்டு கையில் எஞ்சியதை வைத்துக்கொண்டு வாழவேண்டும் என்கிற நிலை சொந்த வணிகத்தில் நிச்சயம் இருக்கப்போவதில்லை . ஏனெனில் நாம் நமக்கான ஓர் குட்டி வணிக சாம்ராஜ்யத்



தையே உருவாக்கிவைத்திருக்கிறோம் என்கிற திருப்தி மரணத்தறுவாயிலும் நமக்கிருக்கும் . நாம் வேலை பார்க்கும் சக்தியை இழந்த பின்பும் நம்முடைய வணிகம் நமக்கான வருமானத்தை ஈட்டிக்கொடுக்கும் ஒன்றாகவும் , பின்னாளில் நம்முடைய குடும்ப உறுப்பினர்களுக்கே ஓர் ஆதாரமான பின்னணியாகவும் இருக்கக்கூடும் இல்லையா ?




அனைவருக்கும் இனிய தைப் பொங்கல் நல்வாழ்த்துகள்





சேவியர்
(தமிழ்நாடு)

## நடுப்பக்கம்

# வீட்டில் ஒற்றைக் குழந்தையா?



குழந்தைகள் இறைவனால் அருளப்படும் கொடைகள். குழந்தைகள் வரமா இல்லையா என்பதை குழந்தை வரம் தேடி அலைபவர்களிடம் கேட்டால் புரியும். ஏக்கம் இல்லாமலேயே குழந்தை வரம் வாய்த்து விடுபவர்கள் பல வேளைகளில் குழந்தைகளின் அருமையைப் புரிந்து கொள்வதில்லை.

குழந்தைகள் கடவுளின் குட்டி வடிவம். மகா சக்தியின் மினியேச்சர். அதை கடவுள் நம்மிடம் கொடுத்திருக்கிறார். “குழந்தைகள் உங்களால் வரவில்லை, உங்கள் மூலமாய் வந்திருக்கிறார்கள்“ என்கிறார் கலீல் ஜிப்ரான். அந்தக் குழந்தைகளை மிகச் சரியான வகையில் வளர்க்கும் பொறுப்பு நமக்குக் கடவுளால் கொடுக்கப்பட்டிருக்கிறது.

என் பெற்றோருக்கு ஏழு பிள்ளைகள். எனது பாட்டி ஒருவருக்கு பதினாறு பிள்ளைகள். இன்னொரு பாட்டிக்கு பதினோரு பிள்ளைகள் என முன்பெல்லாம் பிள்ளைகள் இறை ஆசீரின் அடையாளமாக கருதப்பட்டார்கள். இப்போது காலம் மாறிவிட்டது. நாம் இருவர் நமக்கு இருவர் வந்தது. அதுவும் காலாவதியாகி நாம் இருவர் நமக்கு ஒருவர் என்றானது. இப்போது நாமே குழந்தை, நமக்கேன் குழந்தை எனும் வாசகங்களும் காணக் கிடைக்கின்றன.

குழந்தைகள் இல்லாத வீடு, தேவதைகள் இல்லாத சொர்க்கம். என்னதான் இலட்சம் ரூபாய்க்கு வண்ண விளக்கு வாங்கி வைத்தாலும் அதில் மின்சாரம் பாய்ந்தால் தான் அழகாய் ஒளிரும். மழலையில் குரல் ஒலிக்காத வீடுகள் ஏகாந்தத்தின் துயரம். அதனால் தான் நம் மூலமாய் குழந்தை பிறக்கவில்லையேல், தத்து எடுத்து தனதாக்கிக் கொள்ளும் அற்புதமான பெற்றோர்கள் நம்மிடையே இருக்கின்றனர்.

குழந்தைகளை வரவேற்பது ஒன்று, வளர்த்துவது இன்னொன்று. அது ஒரு கலை. முன்பெல்லாம் நிறைய குழந்தைகள் இருந்த வீடுகளில் மூத்த குழந்தைகளே இளைய குழந்தைகளை வளர்த்தின. மூத்த அக்கா, தங்கைகளுக்கும், தம்பிகளுக்கும் இன்னொரு அம்மாவாகிப் போனார்.

ஒரு குழந்தை மட்டும் வீட்டில் இருந்தால் அந்தக் குழந்தை தலைக்கனம் பிடித்ததாக, கர்வம் கொண்டதாக, தன்னலம் நிறைந்ததாக, சமூக பழக்கம் இல்லாததாக இருக்கும் என ஏகப்பட்ட புகார்கள் உண்டு. எல்லாமே பொய். ஒரு குழந்தை எப்படி இருக்கிறது என்பதும், எப்படி இருக்க வேண்டும் என்பதும் பெற்றோரின் கையில் தான் இருக்கிறது. உலகம் வியந்த ஐன்ஸ்டீன், ஐசக் நியூட்டன் ஏன் இந்திரா காந்தி கூட பெற்றோருக்கு ஒற்றைக் குழந்தை தான்.



பொதுவாக ஒரே ஒரு குழந்தை வீட்டில் இருந்தால் பெற்றோரின் முழு கவனிப்பும் அந்தக் குழந்தைக்குக் கிடைத்து விடுகிறது. எப்போதும் கொஞ்சிக் குலாவி, கேட்பதையெல்லாம் கொடுத்து, செல்லத்தின் உச்சியில் அவர்களை உட்கார வைத்து விடுகின்றனர். அது தவறு.

குழந்தைக்கு அனுமதியையும், மறுப்பையும் சரி விகிதத்தில் கொடுக்க வேண்டும். வெற்றியையும், தோல்வியையும் சின்ன வயதிலேயே பழக்க வேண்டும். அரவணைப்பையும், கண்டிப்பையும் மழலைப் பருவத்திலேயே அறிமுகப்படுத்த வேண்டும். சுருக்கமாகச் சொல்ல வேண்டுமெனில் வாழ்க்கையின் இரண்டு பக்கங்களையும் பெற்றோரே அவர்களுக்கு அறிமுகம் செய்து வைக்க வேண்டும்.

அது தவறும் போது தான் சிக்கல் ஆரம்பமாகிறது. குழந்தைகள் பள்ளிக்கூடம் போகும் போது நினைப்பதெல்லாம் கிடைப்பதில்லை. எல்லோரும் அரவணைப்பதில்லை. வெற்றிகள் மட்டுமே வசமாவதில்லை. அங்கே அவர்கள் வாழ்வின் எதார்த்தத்தை அச்சத்தோடு எதிர்கொள்ள வேண்டிய சூழல் வருகிறது. குழந்தைகளுக்கு பெற்றோரே அவற்றையெல்லாம் கற்றுக் கொடுத்தால்

17 ஆம் பக்கம் பார்க்க...




அனைவருக்கும் இனிய தைப் பொங்கல் நல்வாழ்த்துகள்



# வீட்டில் ஒற்றைக் குழந்தையா?

அவை மிக எளிதாக அத்தகைய சூழல்களை எதிர்கொண்டு விடுகின்றன.

ஒரு சின்ன உதாரணமாக, வீட்டில் இரண்டு குழந்தைகள் இருந்தால் ஒரு விஷயத்துக்காக குழந்தை காத்திருக்க வேண்டிய சூழல் உருவாகும். அக்காக்கு இப்போ, உனக்கு அடுத்த மாசம். அல்லது, நீ எக்ஸாம் முடி உனக்கு வாங்கித் தரேன். என காத்திருப்பு சூழல்கள் இயல்பாகவே உருவாக்கப்படும். அது குழந்தையை பக்குவப்படுத்தும். ஒற்றைக் குழந்தையெனினும் காத்திருக்கும் குணாதிசயத்தைப் பெற்றோரே கற்றுக் கொடுக்க வேண்டும்.

இன்றைக்கு ‘எமோஷனல் சூயிசைட்‘ அதிகம். காரணம் அளவுக்கு அதிகமாய் பிள்ளைகளைக் கொஞ்சி வளர்த்தும் பெற்றோர். அவர்களுக்கு தோல்வி என்ன என்பதை அறிமுகம் செய்து வைக்காத பெற்றோர். வாழ்க்கை மேடு பள்ளங்களின் கூட்டுத் தொகை என்பதைக் கற்றுக் கொடுக்காத பெற்றோர்.

இன்றைக்கு மண முறிவுகள் வெகு சகஜம். ஏன் ? வாழ்க்கையின் எதார்த்ததையும், நடைமுறை சிக்கல்களையும் அறிந்திராதவர்களே மணமகளாகவோ, மணமகனாகவோ வருகின்றனர். அவர்களுக்கு புதிய உறவும், பொறுப்புணர்ச்சியும் பதற்றத்தையும், மன அழுத்தத்தையும் தருகிறது.

சின்ன வயதிலேயே குழந்தைகளுக்குத் தேவையான சுதந்திரம் கொடுத்து, அவர்களை சுயமாய்ச் செயல்பட வைத்தால் குழந்தைகள் பக்குவமடைந்து விடுவார்கள். சின்ன வயதில் பெற்றோர் பிள்ளைகளுக்கு பொறுப்புகளைக் கொடுத்தால் அது அவர்களுக்குப் பழகி விடுகிறது.

‘பொத்திப் பொத்தி வெச்சேன், இப்படி பண்ணிட்டாளே‘ என புலம்பும் பெற்றோர் புரிந்து கொள்வதில்லை, அவர்கள் செய்த தப்பே பொத்திப் பொத்தி வெச்சது தான் என்பதை. பிள்ளைகளுக்கு அளவுக்கு அதிகமான பாதுகாப்புக் கவசங்கள் போடுவது தவறு. ஒரே ஒரு குழந்தையெனில் இந்த சிக்கல் அதிகமாக வந்து விடுகிறது. அத்தகைய குழந்தைகள் திருமணத்தின் போது சட்டென அத்தனை கட்டுகளும் அவிழும் போது குழம்பி விடுகின்றனர்.

ஒற்றைக் குழந்தையாய் வளரும் குழந்தைகள் பெரும்பாலும் பேசிக் கொண்டே இருப்பார்கள். கேட்கும் திறன் குறைவாக இருக்கும். அதை பெற்றோர் கவனத்தில் கொண்டு அவர்களிடம் அந்த திறமையை வளர்க்க முயற்சி எடுக்க வேண்டும். குழந்தையுடன் அன்பாகவும், நேசத்தோடும் இருக்க வேண்டும். அதே நேரம், அவர்களுக்குத் தேவையான கண்டிப்பை வழங்கத் தவறவே கூடாது.

ஒன்றுக்கு மேற்பட்ட குழந்தைகள் இருந்தால் வீட்டிலேயே பிள்ளைகள் பகிர்தல், மற்றும் இணைந்து வாழ்தலில் பழகி விடும். ஒரே குழந்தையெனில் அவற்றையெல்லாம் பெற்றோர் குழந்தைகளுக்குக் கற்றுக் கொடுக்க வேண்டும். அருகிலுள்ள குழந்தைகள், ஆலய குழுக்கள், சமூக குழுக்கள் போன்றவற்றில் இணைத்து விடலாம்.

கலைகளில் குழந்தையை நிச்சயம் சேர்த்து விடுங்கள். அதிலும் கிரிக்கெட், டென்னிஸ், டான்ஸ் போன்ற பல ரோடு



இணைந்து செய்யும் கலைகளில் ஈடுபடுத்துவது அதிக பயனளிக்கும். குழந்தையின் தனிமையை அது குறைக்கும். அது போல பெற்றோரும் அதிக நேரம் குழந்தையோடு செலவிட்டு தனிமையை இனிமையாக்க வேண்டும். இல்லையேல் அவர்கள் ஸ்மார்ட் போன், கணினி என டிஜிடலுக்குள் நுழைந்து நிஜ ஆனந்தத்தை இழந்து விடுவார்கள்.

“நீ எனக்கு ஒண்ணே ஒண்ணு கண்ணே கண்ணு“, “நீ தான் என் உலகம்“ எனும் அதீத மனநிலையையோ, “இன்னொரு குழந்தை எனக்கு இல்லாம போச்சே“ எனும் இயலாமை மனநிலையையோ குழந்தையிடம் எந்தக் காரணம் கொண்டும் நுழைக்கவே நுழைக்காதீர்கள். அது அவர்களை மன கிளர்ச்சிக்கோ, மன இறுக்கத்துக்கோ இட்டுச் செல்லும். இரண்டுமே நல்லதல்ல.

சுருக்கமாகச்சொல்லவேண்டுமெனில், எந்த ஒரு செயலை உங்கள் குழந்தைக்காகச் செய்ய நினைத்தாலும் ஒரு கேள்வியைக் கேளுங்கள். “எனக்கு ஒன்றுக்கு மேற்பட்ட குழந்தைகள் இருந்திருந்தாலும் இந்த நிலையைத் தான் எடுத்திருப்பேனா ?

குழந்தைகள் குயவன் கை மண் போல. அதை எப்படி வனைவது என்பதை பெற்றோர் தான் முடிவு செய்ய வேண்டும்.

பெற்றோர் வனையத் தவறி னால் யாராரோ வந்து தப்புத் தப்பாய் வனைந்து விடும் அபாயம் உண்டு. எனவே ஒரு குழந்தையோ, பல குழந்தைகளோ, அவர்களை குழந்தைகளாய் வளரவிடுங்கள். தன்னம்பிக்கை, சமூக ஈடுபாடு, அன்பு, பகிர்தல், கீழ்ப்படி–தல் போன்ற நல்ல குணாதிசயங்களோடு வளர்த்துங்கள். அவர்கள் நாளை வீட்டுக்கு ஆனந்தமும், நாட்டுக்கு பெருமையும் தேடித் தருவார்கள்.

SRS தமிழ் வானொலியின் 6 ஆம் ஆண்டு விழா

“பாட்டினில் அன்பு செய்”

சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி
அவர்களின் நூற்றாண்டு விழாச் சிறப்பிதழ்


‘சிவத்தமிழ் ‘அறிமுகம்

திகதி : 15/02/2025 சனிக்கிழமை
நேரம் : 4pm – 10 pm

விழாவில் யேர்மனியில் இருந்து வெளிவரும் வெற்றிமணி பத்திரிகையின் வெளியீடான சிவத்தமிழ் சஞ்சிகை சிவத்தமிழ்ச்செல்வி பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி அம்மையாரின் நூற்றாண்டு விழாச் சிறப்பிதழ் அறிமுகம் செய்து வைக்கப்படும்.
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

தொடர்புகளுக்கு:-
SRS ரவிஷான் +44 7865 663960
SRS தமிழ் வானொலி +44 7549 004300

இடம் : Oxshott Village Centre
19 Holtwood Road, Oxshott,
Surrey- KT22 0QJ






# “எங்கட சனங்கள்”

**திருமதி கி.நித்தியா (அதிபர் சண்முகத் தமிழாலயம்)**

நாமும் நமக்கோர் நலியாக் கலையுடையோம் என தமிழத் திமிருடன் தொடர்கிறேன் நான்.

அண்மையில் ஓர் அரிய நிகழ்வில் கலந்துகொள்ளும் பேறு பெற்றேன். வவுனியா மத்திய மகாவித்தியாலயத்தின் 15வது நிறைவுவிழா ஒன்றுகூடல் அது. நான் 5 வயதில் இருந்து கற்றலுடனும் கற்பித்தலுடனும் இன்றுவரை தொடர்ந்து பணியாற்றும் ஓர் ஆசிரியை. இதுவரை எத்தனையோ அரங்கக் கலைகளையும் கூத்துவகைகளையும் கண்டு களித்திருக்கின்றேன்.

என்னுள் விமர்சனங்களையும் ஏற்ற இறக்கங்களையும் கணித்திருக்கின்றேன். கடந்த வார இறுதியின் சனிக்கிழமை (01.12.2024) அன்று சாம் பிரதீபனின் நாடகம் என்னை ஒரு கணம் நிலைகுலைத்தது. நெகிழ வைத்தது. பெருமைப்படத் தூண்டியது.

“எங்கட சனங்கள்“ தலைப்பிற்கும் நடிப்பிற்கும் ஒரு பாதை கூட விலகிச் செல்லாத கருத்தாளம் மிக்க கதைக்கட்டு. ஓரங்க நாடகங்கள் பலவற்றை நான் பார்த்திருக்கின்றேன். இது அத்தனை நாடகங்களுக்கும் புதிய அர்த்தத்தையும் அணுகுமுறையையும் பிரித்துக்காட்டி அணி செய்திருக்கின்றது. எப்படி இவரால் இவ்வாறு அணியம் செய்ய முடிந்தது என்று நான் அசந்து போனேன். அண்ணனாய், தம்பியாய், தகப்பனாய், காதலனாய், தாயாய், தோழியாய், ஏன் காதலியாய்க் கூட தன்னை நிமிடத்துக்கு நிமிடம் தயார்ப்படுத்திக் கதையை நகர்த்துகிறார். இறுதியில் இது எங்களுக்கானது என்று கூறும் கட்டியத்தில் அத்தனை அர்த்தப் பொழிவுகளும் அடக்கப்படுகிறது.




இந்த நாடகத்தின்போது பெரியவர்கள் மட்டும் வாயைப் பிளக்கவில்லை. நான் ஒரு கண்ணால் சபையையும் திரும்பிப் பார்த்தேன். அத்தனை சிறுபிள்ளைகளின் வாயிலும் சிரிப்பும் பொலிவும் இருந்தது. இதுதான் ஒரு நாடகவியலாளனின் திறமை. நாடக நெறியாள்கையின் உத்திகள் அத்தனையும் புலம்பெயர் தேசத்தினருக்கும் தாயக உறவுகளுக்கும் சிறந்த கருத்தடி என நான் சந்தோசப்படுகிறேன்.

எத்தனையோ புத்தகங்கள் சொல்லாத கதைகளை ஒரு நாடகத்தால் சொல்லிவிட முடியும் என்று நான் அன்று உணர்ந்துகொண்டேன்.



இரண்டாம் மொழியாக தமிழைக் கற்றுக்கொடுக்கும் நாம், இவ்வாறான நாடகக் கலைஞர்களுடனும் நாடகப் பயிலகங்களுடனும் எமது பிள்ளைகளைப் பயணிக்க வைப்பதால் எங்கள் கலையும் தமிழும் உச்சத்தைத் தொடும் அல்லவா? இந்த நாட்டில் வாழும் குழந்தைகளுக்கு தமிழக் கல்வி எவ்வளவு அவசியம் என்று உணர்கின்றோமோ அவ்வளவுக்கவ்வளவு இவ்வாறான அரங்கக் கலைகளும் மிக அவசியம் என்பதை ஒரு தமிழாசிரியையாக நான் இங்கு அடிக்கோடிட்டுக் கொள்கிறேன். அவரது நாடகப் பயிலகத்தின் சிறுவர்களுக்கான சில உத்திகளையும் நான் அவதானித்திருக்கிறேன்.

புலம்பெயர் தமிழ் சிறார்களுக்கு இவர்களைப் போன்ற பன்முக ஆளுமை கொண்டவர்கள் ஒரு சிறந்த கொடையே.

என்றுமே உங்கள் கலையும் தமிழும் வாழட்டும் சாம்பிரதீபன்.




SRS தமிழ் வானொலியின் 6 ஆம் ஆண்டு விழா

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

“பாட்டினில் அன்பு செய்”

திகதி : 15.02.2025 சனிக்கிழமை
நேரம் : 4pm - 10pm
இடம் : Oxshott Village Centre
19 Holtwood Road Oxshott
Surrey, KT22 0QJ

தொடர்புகளுக்கு:-
SRS ரவிஷான்: +44 7865 663960
SRS தமிழ் வானொலி : +44 7549 004300

அனைவருக்கும் இனிய தைப் பொங்கல் நல்வாழ்த்துகள்



# ப்ளூட்டோ: கிரகமாக இருந்து குறுங்கோளாக முடிந்த சோகக் கதை

**1930** ஆம் ஆண்டில், வானியல் சமூகம் ஓர் அதிசயமான கண்டுபிடிப்பைக் கொண்டாடியது: ப்ளூட்டோ, சூரியக் குடும்பத்தின் ஒன்பதாவது கிரகம். ரோம நாட்களில் மறைநிலைகளின் கடவுளான ப்ளூாட்டோவின் பெயரிடப்பட்ட இந்தப் பனி மூடிய மர்ம உலகம் 70 ஆண்டுகளுக்கும் மேலாகக் கிரகங்களின் பட்டியலில் இடம் பெற்றது. ஆனால் 2006ஆம் ஆண்டில், ப்ளூாட்டோ தனது நிலையை இழந்தது. “குறுங்கோள்“ என்ற வகைப்படுத்தலில் நுழைந்த ப்ளூாட்டோவின் பெயர்மாற்றம் பலரிடத்தில் ஏமாற்றத்தையும் விஞ்ஞான உலகத்தில் பெரிய விவாதத்தையும் உருவாக்கியது. அப்படி ஏன் தான் ப்ளூாட்டோ தனது கிரகத்தின் அந்தஸ்தை இழந்தது? இந்த விண்வெளி மற்றும் காலப் பயணத்தில் இந்த முடிவுக்குப் பின்னால் இருக்கும் அறிவியல் காரணங்கள் என்னவென்று பார்ப்போமா?

அரிசோனா மாநிலத்தில் உள்ள லொவெல் வான்காணும் மையத்தில் வானியலாளர் கிளைட் தொம்பாவ் (Clyde Tombaugh) கண்டுபிடித்தபோது ப்ளூாட்டோவின் பயணம் தொடங்கியது. சிறியதாகவும் தொலைவாகவும் இருந்தாலும், ப்ளூாட்டோ சூரியக் குடும்பத்தின் ஒன்பதாவது கிரகமாக வரவேற்கப்பட்டது. 76 ஆண்டுகள் வரை, அது மற்ற பெரிய கிரகங்களுடன் சூரியனைச் சுற்றி வந்தது. ஆனால் வானியல் அறிவின் முன்னேற்றம் அதிகரிக்க ப்ளூாட்டோவின் நிலை மாறியது.

தூரநோக்கிகளை மேம்படுத்தியவுடன், வானியலாளர்கள் நெப்ட்யூனுக்கு அப்பால் உள்ள குயிப்பர் பலகையில் (Kuiper Belt) எண்ணற்ற பொருட்களைக் கண்டுபிடிக்கத் தொடங்கினர். குறிப்பாக இந்தப் பகுதி பனி மூடிய பொருட்களால் நிரம்பியுள்ளது. இதன் விளைவாக விஞ்ஞானிகள் ஒரு கிரகமாகக் கிரகம் என்றால் என்ன என்பதைப் பற்றிச் சிந்திக்க ஆரம்பித்தனர். 2006ஆம் ஆண்டில், சர்வதேச வானியல் ஒன்றியம் கிரக வரையறைக்கான மூன்று விதிமுறைகளை அறிமுகப்படுத்தியது:

1. சூரியனைச் சுற்றவேண்டும்: ஒவ்வொரு பொருளும் சூரியனைச் சுற்றி வலம் வரவேண்டும்.

2. சுற்று வடிவம்: அதன் ஈர்ப்பு விசை அதைக் கிட்டத்தட்ட ஒரு பந்து வடிவமாக மாற்றும் அளவுக்கு நிறை பருமனுடன் இருக்க வேண்டும்.




3. சுற்றுச்சூழலைச் சுத்தமாக்க வேண்டும்: அது தன் புவியலைச் சுற்றி உள்ள மற்ற பொருட்களை அகற்றியிருக்க வேண்டும்.

ப்ளூாட்டோ முதல் இரண்டு விதிகளை எளிதாகப் பூர்த்தி செய்தது, ஆனால் மூன்றாவது விதியில் தோற்றது. அதன் பாதை குயிப்பர் பலகையில் உள்ள எண்ணற்ற பொருட்களுடன் மோதுகிறது, அதனால் அது தனது சுற்றுச்சூழலை முழுமையாகச் சுத்தமாக்கவில்லை. இதனால் ப்ளூாட்டோ “குறுங்கோள்“ என வகைப்படுத்தப்பட்டது.

குயிப்பர் பலகை என்பது நெப்ட்யூனுக்கு அப்பால் உள்ள பரந்த பகுதி, இது பனி மூடிய பொருட்களால் நிரம்பியுள்ளது.



Dr.நிரோஷன் தில்லைநாதன்
(யேர்மனி)

இந்த இடத்தில் ப்ளூாட்டோவுடன் மற்ற குறுங்கோள்கள், உதாரணமாக எரிஸ், ஹாவ்மியா, மற்றும் மாக்கிமாக்கே ஆகியவை உள்ளன. ப்ளூாட்டோவைப் போன்ற இந்தப் பொருட்களின்கண்டுபிடிப்புஅதன் தனித தன்மையைக் கேள்விக்குள்ளாக்கியது மற்றும் அதன் கிரக அந்தஸ்தைச் சிக்கலாக்கியது.

“ப்ளூாட்டோ ஒரு கிரகம் என்றால், இந்த மற்ற பொருள்களும் கிரகங்கள் ஆகக்கூடாதா?“ என்ற கேள்வி தோன்றியது. இந்தச் சிக்கலே வானியலாளர்களைப் புதிய கிரக வரையறையை உருவாக்கத் தூண்டியது.

ப்ளூாட்டோவின் நிலை மாற்றம் வானியலாளர்களிடத்தில் சர்ச்சையை ஏற்படுத்தியது. பல விஞ்ஞானிகளும் பொதுமக்களும் இந்த மாற்றத்தால் பாதிக்கப்பட்டனர். சிலர் புதிய வரையறை ப்ளூாட்டோவை தவறாகவே நிராகரித்ததாக வாதிட்டனர். நாசாவின் “நியூ ஹொரைசன்ஸ்“ திட்டத்தின் பிரதான ஆய்வாளர் ஆலன் ஸ்டெர்ன் இந்த முடிவைக் கடுமையாக விமர்சித்தார். அவரின் கருத்துப்படி, இம்முடிவுக்கு வாக்களித்தது 5மூ க்கும் குறைவான வானியலாளர்கள் மட்டுமே.

இந்த எதிர்ப்பு பொதுமக்களையும் அடைந்தது. ப்ளூாட்டோவின் கிரக அந்தஸ்தை மீண்டும் வழங்குவதற்கான இயக்கங்கள் மற்றும் கோரிக்கைகள் உருவானது.


ப்ளூாட்டோ ஒரு கிரகமாக இருக்கவில்லை என்றாலும், இது இன்னும் ஓர் அதிசயமான உலகமாகவே இருக்கிறது. இதோ அதன் சில பிரமாதத் தகவல்கள்:

சிறியது, ஆனால் சக்திவாய்ந்தது: ப்ளூாட்டோ எமது நிலவின் அளவை விடச் சிறியது, அதின் விட்டம் 2,377 கிலோமீட்டர் மட்டுமே.

28 ஆம் பக்கம் பார்க்க...




மங்கல இசைக்குழு
உங்கள் அனைத்து மங்கள வைபவங்களையும்
நாதஸ்வர தவில் கானமழையில் நனைத்திட
தவில் மேதை அளவையூர்
குமரகுரு அவர்களின் புதல்வன்
நாதஸ்வர இன்னிசைச் செல்வன்
N.K.Raguraman
Dresdener
Str.6 50126
Bergheim
Germany
Tel: 0049 157 89 15 95 71
0049 2271 670236 | 0049 160 91146240








# உப்பு ▶ உப்பில்லா பண்டம் குப்பையிலே

உப்பு இடம் பெறாத விஷயம் இல்லே
உஷாராக இருக்க வேண்டிய எச்சரிக்கை
உப்பில்லா பண்டம் குப்பையிலே... என்று சொல்லி விட்டுப் போய்விட்டனர்.

உப்பை குறையுங்க் இல்லே, தீராத தொல்லை தான் என்று பயமுறுத்திவிட்டனர் டாக்டர்கள்.

உப்பு பற்றி உப்பு பெறாத விஷயம் என்று யாரும் நினைக்கத் தயாரில்லை. ஆனால், உடம்புக்கு வராத வரை உப்பு பற்றி கவலைப்படுவதும் இல்லை. சிலரை பார்த்தால், தட்டில்,அரை ஸ்பூன் உப்பை போட்டு வைத்திருப்பர். தேவைப்படும் போது, இவர்களே, சாம்பார் முதல் தயிர் சாதம் வரை சேர்த்துக்கொள்வர்.

கொழுப்பு தேவைக் அதிகமானால் ஆபத்து எண்ணெய் தேவைக் அதிகமானால் ரத்த அழுத்தம் தான். இனிப்பு தேவைக் அதிகமானால் சுகர். இப்படித்தான் உப்பு தேவை தான் அதிகமானால் ரத்த அழுத்தம் எகிறிவிடும் மாரடைப்பு வருமோ என்ற பீதி கிளம்பும்.

## அப்படி என்ன தான் இருக்கு?

சோடியம் குளோரின் ஆகிய இரண்டு ரசாயனங் களும் சேர்ந்தது தான் உப்புக் இயற்கை கனிமங்களில் ஒன்று சோடியம் குளோரைடு கலவைகளில் ஒன்று. வெண்மை நிறம் கொண்டது சோடியம் குளோரினோ, பச்சை மஞ்சள் கலந்தது தண்ணீரில் கரைந்து விடும் காற்றில் வாயுவாகி விடும்.



டாக்டர் எம்.கே.முருகானந்தன்
MBBS (Cey),DFM (Col),FCGP (Col)
குடும்பவைத்தியர்

## பல்வேறு உப்புகள் உள்ளன:

சோடியம் பைகார்பனேட்: பேக்கிங் சோடா என்பது இது தான். சுத்தம் செய்ய பயன்படுவது. மருத்துவ குணங்கள் கொண்டது. சோடியம் நைட்ரேட்: உரம், வெடிக்கு பயன்படுவது.

சோடியம் ஹைட்ராக்சைடு: பேப்பர், சோப்பு, சில உணவு வகைகளில் பயன்படுத்தப்படும் காஸ்டிக் சோடா எனப்படுவது.

## வேணும் ஆனா வேணாம்

உடலில் உப்பு தேவைக் அதிக அளவில் உப்பு, வியர்வை, சிறுநீர் மூலம் வெளியேறி விட்டால், அதை ஈடு செய்ய வேண்டி உப்பு கரைசல் தேவை. உடலில் உப்பு குறைந்தால் தண்ணீர் வற்றிய நிலைக்கு தள்ளப்படுகிறது. அப்போது வாந்தி, மயக்கம் வருகிறது. அதை தீர்க்க அதிக அளவில் தண்ணீர், எலக்ட்ரால் கரைசல் குடிக்க செய்கின்றனர் டாக்டர்கள். உடலில் அதிக உப்பு சேர்ந்தாலும் தொல்லை தான். அதிக உப்பு உள்ளவர்களுக்கு அடிக்கடி தாகம் எடுக்கும் அடிக்கடி சிறுநீர் போவர். சிறுநீர் மூலம் தான் அதிகப்படியான உப்பு வெளியேற்றப்படுகிறது.

## உப்புல சூப்பர் பலன்




வெது வெதுப்பான தண்ணீரில் உப்பை கரைத்து தொண்டையில் நிறுத்தி கொப்பளித்தால் தொண்டை கரகரப்பு போய்விடும். புண் இருந்தாலும் போய் விடும்.

தேய்க்கும் பற்பசையில் உப்பு உள்ளது அதுபோல சோப்பிலும் உள்ளது. உடலில் உள்ள எரிச்சல், தோல் பிரச்னை இதனால் போய் விடும். பல் பாதுகாப்புக்கு உப்பு முக்கியம்.

## எவ்ளோ ஓகே

நாம் குடிக்கும் தண்ணீரில் உப்பு உள்ளது. அதனால், உணவில் சேர்ப்பது உட்பட ஒருவரின் உப்பு தேவை ஒரு டீஸ்பூன் தான் என்பது தான் நிபுணர்களின் கருத்து.

உப்பு போட்டாலே, உணவு அயிட்டங்களுக்கு தனி சுவை வந்து விடும் தான் ஆனால், அதற்காக நாற்பதை தாண்டியும் உப்பை குறைத்துக் கொள்ளாமல் இருந்தால் தொல்லை தான்.

ரத்த அழுத்தம் அதிகமாக உள்ளவர்கள் கண்டிப்பாக உப்பை குறைத்துக்கொள்ள வேண்டும். உப்பினால் இவை ஏற்படுகிறதா என்று சர்வதேச சர்ச்சை நீடித்தாலும், உப்பை குறைத்தால் இதய நோய் கட்டுப்படுகிறது என்பது உண்மை.

## பிரஷர் குறையும்

"லப் டப்' என்று இதயத்துடிப்பு கேட்கிறதே, அப்போது இதயம் சுருங்கி, விரியும். அப்போது ஏற்படும் அழுத்தம் தான் "சிஸ்டாலிக்' என்று அழைக்கப்படுகிறது.

மற்ற உறுப்புகளுக்கு ரத்தம் செலுத்தப்படுவது அந்த அழுத்தம் மூலம் தான்.

இதயத்துடிப்புகளுக்கு இடையே உள்ள இடைவெளியில் மட்டும் தான் இதயம் ஓய்வெடுக்கிறது. இந்த இடைவெளியில் ஏற்படும் அழுத்தம் தான் ரத்த அழுத்தம் "டயஸ்டாலிக்' என்று பெயர்.

ரத்த அழுத்தம் 130/85 என்பது நார்மலானது சுருங்கி விரியும்போது எடுக்கப்படுவது தான் முதலானது அதை டாப் நம்பர் என்பர் அதுபோல, இரண்டாவது குறிக்கப்படுவது தான் டயஸ்டாலிக்.

மருந்து, மாத்திரைகள் மட்டுமின்றி, உப்பு குறைக்கப்பட்டாலே, ரத்த அழுத்த அளவு தானாகவே குறைந்து விடும்.

## எதை கைவிடணும்?

பிரஷ் பழங்கள், காய்கறிகளை சாப்பிட பழகலாம் உப்பு குறைத்து உணவு சாப்பிட பழக வேண்டும்.

பாட்டில் பானங்களை கண்டிப்பாக கைவிட வேண்டும். அதில் உப்பு அதிகம்.

பாக்கெட்டில் அடைக் கப்பட்ட உணவு, நீண்ட நாள் பாதுகாப்புக் காக சோடியம் பயன் படுத்தப்படுகிறது. உப்பு அதிகமாக உள்ளதால் அவற்றை தவிர்க்க வேண்டும்.

ஊறுகாய், உப்பு போட்ட நொறுக்குகளை மறந்து விட வேண்டும்.

## அறிவிப்பாளர் அமரர் முல்லை மோகன் அவர்களுக்கு

## வெற்றிமணி பத்திரிகையின் இதய அஞ்சலி





தாயகத்தில் மணிக்குரல் ஒலிபரப்பில் ஆரம்பித்து, யேர்மனியில் 35 வருடங்களுக்கு மேலாக அறிவிப்பாளராக இருந்த முல்லை மோகன் இன்று 12.12.2024 வியாழக்கிழமை யேர்மனியில் காலமானார்.
ஆலயங்களிலும், விழாக்களிலும், தன் இனிய குரலால் வலம் வந்த இனியவர்.
வணக்கம் ஐரோப்பா முதல் பல நிகழ்ச்சிகளில் தடம் பதித்தவர். வெற்றிமணி பத்திரிகை நடத்திய பேராசிரியர் அ. சண்முகதாஸ் அவர்களது பவளவிழா வில் கலந்து சிறப்பித்தார். தாயகத்தில் முல்லைத்தீவைப் பிறப்பிடமாகக்கொண்டவர் தன்பெயரோடு முல்லையை இணைத்து மண்வாசத்துடன் வாழ்ந்து வந்தவர்.

**அன்னாருக்கு வெற்றிமணி பத்திரிகையின் இதய அஞ்சலி.**

**அனைவருக்கும் இனிய தைப் பொங்கல் நல்வாழ்த்துகள்**



# சிந்தனைத் தூண்டல்

“யார் சொன்னார் எவர் சொன்னார் என்பதை விட்டுவிட்டு எவர் சொன்ன சொல்லையும் உனது சொந்த அறிவால் எண்ணிப்பார்.

என்று சொன்ன சோக்ரடீஸ் ஐ நஞ்சு கொடுத்து மரணத்தைத் தண்டனையாகக் கொடுத்த சமுதாயம் இன்று மாறிவிட்டது. ஆனால் நாம் இன்றும் யதார்த்தம் பற்றிச் சிந்திக்காது பண்பாடு, கலாசாரம் என்று 25 வீதம் மூளையைக் கூடப் பயன்படுத்தாது வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். மனித மூளையை வெல்ல போட்டா போட்டி போட்டு உலகம் முன்னேறிக் கொண்டிருக்கின்றது. எலோன் மாஸ்க் புதிதாக மனித றொபோட்டக்களை உருவாக்கிச் இரண்டு வாரங்களுக்கு முன் கண்காட்சியில் வெளிப்படுத்தியுள்ளார். மனிதனில்லாமல் இயங்கும் வாகனங்கள் தோன்றிவிட்டன. உணர்ச்சிகளை வெளிப்படுத்துகின்ற றொபோட்டக்கள் வெளிவரத் தொடங்கிவிட்டன. நாம் இன்னும் குண்டுச் சட்டிக்குள் குதிரை ஓட்டலாமா? வால்காவில் இருந்து கங்கைவரை, சேப்பியன் மனித குலத்தின் வரலாறு வாசித்துப் பார்த்த போது மனித மூளை எப்படி இருந்தது? ஆரம்ப மனிதன் எப்படி வாழ்ந்தான்? இந்தக் கட்டுப்பாடுகள், நம்பிக்கைகளை எப்படி மனித குலத்துக்குள் புகுத்தப்பட்டது என்னும் ஆழ்மன வெளிச்சம் எமக்கு ஏற்படும்.

மனிதர்களைக் கட்டுப்படுத்தல் என்பது எங்கும் சாத்தியமில்லை. அவர்களைப் புரிய வைத்தல் என்பதே உலகத்தை மாற்றச் சிறந்த வழி. ஒவ்வொரு மனிதர்களுக்கும் ஒவ்வொரு புரிதல், அவர்கள் வாழ்ந்த சூழ்நிலை, கற்ற விடயங்கள், வாசித்த புத்தகங்கள், சுய தேடல், சுய புத்தி, சிந்தனைத் திறன் போன்றவை இருக்கின்றன. இவற்றின் வடிவமே மனிதன். நம்பிக்கை என்பது மனிதனுக்கு மனிதன் வேறுபடலாம். நம்பிக்கையை யாரும் மாற்ற விரும்புவதில்லை. அவரவருக்குச் சரி என்று படுவதை அவர்கள் செய்யலாம். ஆனால், சிந்தனைத் தூண்டல் ஒரு சிந்தனாவாதிக்கு அவசியமாகப்படுகின்றது.

எமது பாதங்கள் எமது உடலைத் தாங்கி நின்று நிமிர்ந்து நிற்க உதவுகின்றன. அத்தனை தசை நார்களும் பாதங்களில் படிந்திருக்கின்றன. மனிதனின் ஆதாரசக்தி பாதங்களில் அமைந்திருக்கின்றது. மனிதனின் இரண்டு பாதங்களும் இரண்டு வைத்தியர்கள். பாதங்களின் ஒவ்வொரு குறிக்கப்பட்ட பகுதிகளுக்கும் அழுத்தம் கொடுக்கும் போது உடலின் அவ்வவ் பகுதிக்குரிய உள் உறுப்புக்கள் தூண்டப்படுகின்றன. உதாரணமாக பெருவிரலுக்கு கொடுக்கின்ற அழுத்தம் மூளை, நுரையீரல் பிரச்சினைகளைத் தடுக்கின்றது. இரண்டாம், மூன்றாம் விரல்கள் கண்களின் பிரச்சினைகளைத் தடுக்கின்றது. இவ்வாறு ஒவ்வொரு பகுதிகளும் உடல் உறுப்புகளைப் பாதுகாக்கின்றன. பாதங்கள் இன்றி மனிதன் நிற்க முடியாது நடக்க முடியாது போகின்றான். இந்தப் பாதங்கள் நோய் நொடியின்றி வாழவும், குளிர் சூட்டிலிருந்து எமது பாதங்களைக் காக்கவும், அசுத்தங்கள் அதை எட்டாமல் பேணவும் பாதுகாப்புக்காக அணிவதே பா....தணி என்பதை யாம் அனைவரும் அறிந்திருக்கின்றோம். எம்மைப் பாதுகாக்கின்ற பாதணியை மதிப்பதா? மிதிப்பதா?

கொதிக்கும் வெயிலில் நாம் நடக்க வெப்பத்தைத் தானேற்று சூட்டிலிருந்து எம்மைப் பாதுகாக்கின்றது. பூச்சி புழுக்கள் எம்மைத் தீண்டாது தடுக்கின்றது. சேற்றிலே நாம் நடக்க சேற்றைத் தான் பூசி எமது பாதங்களைத் துப்பரவாக வைத்திருக்கின்றது. நோய்க்கிருமிகள் எம்மை வந்தடையாதிருக்க பாதங்களைப் பாதுகாத்து உடலைப் பேணுகின்றது. இவ்வாறு வெளி அழுக்குகளைத் தானேற்று எமது பாதங்களைச் சுத்தமாகவே வைத்திருக்கும் பாதணியை எமது உடலும் வீட்டின் உள்புறமும் சுத்தமாய் இருக்க வெளியே கழட்டி வத்துவிட்டு வீட்டினுள் நுழைகின்றோம். இவ்வாறு எமக்காகச் சேவை புரிகின்ற பாதணியைக் கேவலமாகக் கருதும் பழக்கம் மனித இனத்திடம் இருக்கின்றது. தமக்குதவுவாரை ஏறெடுத்தும் நோக்காத மனிதர் எம்மோடே பவனி வரும் பாதணியை மாத்திரம் எங்கே கண்டு கொள்ளப் போகின்றார். பாதணி பாதுகாப்புக் கவசமே தவிர மரியாதையற்ற பொருள் அல்ல என்பது யாவரும் அறிந்த விடயமே. இருந்தும் கோயிலின் வெளியே கழட்டி வைப்பது சுத்தம் கருதியே என்பதைப் புரிந்து கொள்வது ஒன்றும் பெரிய விடயம் அல்ல. ஆலயத்தினுள் பக்தர்கள் நிலத்தில் அமர்ந்திருப்பார்கள். தியானம் செய்வார்கள். அங்கப்பிரதட்சணை செய்வார்கள். இவ்வாறான நடைமுறைகள் நடைபெறும் இடம் சுத்தமாக இருக்க வேண்டும் என்ற காரணத்தினாலேயே பாதணி கோயிலினுள் அணிவதில்லை. கடவுளுக்கு மரியாதை கொடுப்பதற்காகக் கழட்டுவதாகத் தவறான எண்ணமும் நம் மத்தியில் இருக்கின்றது.



கௌசி
சிவபாலன்
(யேர்மனி)

அழகழகாக அலங்கரிக்கப்பட்ட மண்டபம். அதனுள் அழகழகான பாதணிகள் அணிந்து மண்டபத்தில் பெண்கள் வலம் வருவார்கள். ஆடைகளுக்குக் கொடுக்கும் அவதானத்தை பாதணிகளுக்கும் கொடுப்பார்கள். இம்மண்டபத்தில் விளக்குகள், ஆரத்தித் தட்டு, பூத்தட்டு ஏந்திவரும் பெண்கள் உட்பட அழகுக் காலணியில் வரிசையாக வருவார்கள். விளக்குகளுடன் கூடவே வரும் காலணியை மேடை வந்தவுடன் கழட்டிவிட்டுப் போகும்படி பணிக்கப்படும். ஆனால் பருவமடைந்த பெண்ணோ பாதணியுடனே ஏறிக்காட்சியளிப்பார். ஆரத்தி எடுக்கும் பெண்கள் காலணியைக் கழட்டிவிட்டே ஆரத்தி எடுக்க வேண்டும். மேடையிலோ எந்தவித கும்பங்களோ வைக்கப்பட்டிருப்பதில்லை. நிலத்திலே மதகுருவோ இருப்பதில்லை. ஆனால், வாசலில் வைக்கப்பட்டிருக்கும் கும்பங்களைப் பாதணியுடனேயே தரிசித்துப் பின் திருநீறு குங்குமம் இட்டு வருவார்கள். விளக்குக்கு மரியாதை என்றால், விளக்குத் தூக்கிவரும் பெண்பிள்ளைகள் அணிந்திருப்பார்கள். விளக்குக்கு மரியாதை என்றால், விளக்குத் தூக்கி வரும் பெண்பிள்ளைகள் பாதணி அணிந்திருத்தல் என்ன நியாயம்.

மேடையை அலங்கரிப்பவர்கள் பாதணி அணிந்த பாதங்களுடனேயே மேடை அலங்காரங்கள் செய்வார்கள், ஆரத்தி எடுப்பவர்கள் பாதணிகளைக் கழட்டி வருகின்ற போது அலங்காரஞ் செய்தவர்கள் விட்டுச் செல்லும் அசுத்தங்களை பாதங்களில் ஏற்றுக்கொள்ள வேண்டும். பாதணிகள் பாதுகாத்து வந்த பாதங்கள் பழுதடைய இங்கு இடம் அளிக்கப்படுகின்றது. காலுறைதானே அணிகின்றீர்கள் என்றால், அந்தக் காலுறை ஏற்ற அழுக்குகள் மீண்டும் பாதணிக்குள் செல்கின்றன. வீட்டில் பாதணியைக் கழட்டும் போது காலுறையுடன் சேர்ந்தே வீட்டுக்குள் அழுக்குகள் வந்து விடுகின்றன. ஏன் பாதணி கழட்ட வேண்டும்? என்று கேட்டால் அது அப்படித்தான் என்னும் பதிலே விளக்கமாகப்படுகின்றது. காலம் காலமாக நடைபெற்று வரும் நடைமுறை என்னும் விளக்கத்தை ஏற்றுக் கொள்ளமுடியாது போகின்றது. இது வடிவேல் பாசையில் சின்னப்பிள்ளைத் தனமாகவே மனத்துக்குப்படுகின்றது. காலம் காலமாக வந்த நடைமுறைகளா இப்போது பூப்புனித நீராட்டுவிழாக்களில் நடைபெறுகின்றன?

இராமன் காட்டுக்குச் சென்றுவிட்டான். பரதன் இராமனுடைய பாதரட்சைகளை எடுத்துக் கொண்டு வந்து அரியணையில் வைத்து இராமன் அரசாளுகின்றான் என்று அரசாட்சி செய்தவன்.

காரியம் ஆற்றுகையில் காரணம் புரிய வேண்டும். காரணம் புரியாது காரியத்தில் ஈடுபடல் மடைமைத்தனமாய்க் கருதப்படுகின்றது. ஆடைஅலங்காரங்கள் அழகல்ல. மனஅறியாமை நீக்கும் அழகே அழகு. தெளிவுமட்ட மனதில் சிந்தனை விரிவுபடும். நான்கு பக்கப் பார்வையில் உலகை அளக்கும் ஆற்றல் புலப்படும்.



அனைவருக்கும் இனிய தைப் பொங்கல் நல்வாழ்த்துகள்

# ஊரோடு ஒட்டி உறவாடி மனதிற்கு விருப்பமில்லாத வாழ்க்கையை வாழ வேண்டுமா?



எந்த ஒரு சமூகக் கட்டமைப்புக்குள்ளும் வாட்டமாக அமர்ந்து கொண்டு அதைப்பற்றி மீண்டும் மீண்டும் குறை கூறுவதிலோ அல்லது அதன் வரைமுறைகளில் குற்றம் காண்பதிலோ எந்த விதமான அர்த்தமும், பயனும் இல்லை. அத்தகைய அமைப்புக்குள்ளிருந்து நம்மை விடுவித்துக்கொள்ளச் செயலற்றக் கருத்து வேறுபாடுகள் மட்டுமே வைத்திருப்பது உதவாது. நம் செயலில் நாம் காட்டும் மாற்றங்கள்தான் உதவும். சக மனிதர்களுக்குக் கேடு விளைவிக்காத அறிவின் செயல்பாட்டிற்கு/ பகுத்தறிவிற்குஃ நுண்ணறிவிற்கு/ அல்லது தனிமனித நம்பிக்கைகளுக்கு மாறான எந்தவிதக் கட்டமைப்புக்குள்ளும் நம்மைப் பொருத்திக் கொண்டு வாழ்க்கையைக் கழிக்க வேண்டும் என்று எந்தக் கட்டாயமும் இங்கு இல்லை.

அத்தகைய கட்டமைப்பை மீற முயற்சிக்கும் ஆரம்பத் தருணத்தில், நாம் எப்போதும் எதிர்ப்புகளையே எதிர்கொள்ள வேண்டியிருக்கும். ஒதுக்கப்படுவோம், விமர்சனத்திற்கும் கேலிகளுக்கும் ஆளாக்கப்படுவோம். தனிமையை ஏற்றுக்கொள்ள வேண்டியிருக்கும். ஆனால் இந்தச் சவால்கள் வெறும் தடைகள் அல்ல, அவை நம்முடைய உள்உண்மையுடன் பொருந்தி வாழ்வதற்கான தீர்மானத்தைச் சோதிக்கும் வாய்ப்புகள்.

ஊரோடு ஒட்டி உறவாடி மனதிற்கு விருப்பமில்லாத வாழ்க்கையை வாழ வேண்டுமா அல்லது மனதும் அறிவும் ஒன்று கூடி இயங்குகிற வாழ்க்கை வேண்டுமா என்பதை நாம் தான் தேர்வு செய்ய வேண்டும்.

சுதந்திரம் என்பது வழங்கப்படுவதல்ல துணிச்சலுடன் செயல்படத் துணிபவர்களால் அது கைப்பற்றப்படுகிறது. அதற்குச் சுயபுத்தி, மன உறுதி, மற்றும் தார்மீக நம்பிக்கைக் கொண்டிருக்க வேண்டும். “எனக்கு வேறு வழியில்லை, இந்தச் சமூகம் இப்படித்தான் செயல்படுகிறது“ என்று கூறிக்கொண்டே காலத்தைக் கடத்துவது நம் இயலாமையை மண்மூடிக் கொட்டி அதில் பரிதாபத்தை வளர்க்கும் முயற்சி. இந்த உதவியற்றத் தன்மைத் தேக்கநிலையின் சுழற்சியை நிரந்தரமாக்குகிறது. சமூக ஒதுக்கிவைப்பு அல்லது பரிச்சயத்தின் ஆறுதலில் கிடைக்கும் சுகம் பற்றிய பயம் வளர்ச்சிக்கான நமது உள்ளார்ந்த திறனை அடக்கிவைக்கிறது. இந்தச் சுழற்சியினின்று மீள விழிப்புணர்வும், விமர்சனச் சிந்தனையும் உண்மையாக வாழ்வதற்கான அசைக்க முடியாத அர்ப்பணிப்பும் தேவை. சௌகரியத்தை விட உண் மையையும், ஏற்றுக் கொள்ளப் படுவதை விடத் தனித்தன்மையும் மதிப்பவர்களுக்கு மட்டுமே சுதந் திரம் சொந்தமானது.

வழக்கமானதை நிரா கரித்து, அதன் அனைத்து அபா யங்கள், நிச்சயம ற்ற தன்மைகள் மற்றும் வெகுமதிகளுடன் வாழ்க்கையின் முழுமையைத் தழுவுவது ஒரு தேர்வாகும். இங்கு தலைதூக்கும் கேள்வி, நமது பிரிவினையைச் சமூகம் ஏற்குமா என்பதல்ல, நம் தனித்தன்மையை ஏற்றுக்கொள்ளும் மன உறுதி நமக்கு இருக்கிறதா என்பதே. மனமும் புத்தியும் இணக்கமாகச் செயல்படும்போது, வெளிப்புறத் தீர்ப்பு அதன் பிடியை இழந்து, நாம் நோக்கமும் நிறைவும் கொண்ட வாழ்க்கையில் அடியெடுத்து வைக்க ஆரம்பிப்போம்.



தீபா சீறிதரன்
(தைவான்)




அனைவருக்கும் இனிய தைப் பொங்கல் நல்வாழ்த்துகள்



# ஊடகங்களில் பெண்கள் சித்தரிக்கப்படும் விதம்

இன்றைய உலகம் இயங்கிக் கொண்டிருக்கிறது என்றால் அதற்கு மூல காரணம் ஊடகங்கள் ஆகும். ஒரு ஜனநாயகத்தின் காவல் நாயாக காணப்படும் ஊடகம் இன்றையளவில் பெரிது முக்கியத் துவப் படுத்தப்படுகின்றது.

ஊடகங்கள் ஒரு நாட்டின் சமூக, கலாச்சார மற்றும் அரசியல் நிகழ்வுகளை வெளிப்படுத்தும் பிரதான கருவியாக விளங்குகிறது. இணையத்தின் வருகையுடன் உலகமயமாதலினால் ஊடகமானது பல விதங்களில் பல வடிவங்களில் அபரீதமான வளர்ச்சியினை அடைந்து வருகின்றது.

இதன் மூலம் மக்கள் எந்த நேரத்திலும் எங்கிருந்தாலும் செய்திகளை உடனுக்குடன் அறியமுடிகின்றது. ஊடகங்கள் பொதுமக்களுக்கு தகவலை வழங்குவதற்கும், சமூகத்தின் பல்வேறு தரப்புகளை பிரதிபலிப்பதற்கும் மிகப் பெரிய பொறுப்பு வகிக்கின்றன.

குறிப்பாக, பெண்கள் ஊடகங்களில் எப்படி சித்தரிக்கப்படுகிறார்கள் என்பது மக்கள் மத்தியில் பெரும் வாதமாகவே காணப்படுகின்றது.

இந்த விடயம் சமூகத்தில் பெண்கள் குறித்த பார்வையை உருவாக்குகிறது.

சமூகத்தில் ஜனநாயகக் கொள்கைகளை நிலைநாட்டுவது தொடர்பில் அடிக்கடி நாம் வலியுறுத்தி வருகின்றோம்.

நமது உரிமைகளுக்காகவும், சுதந்திரத திற்காகவும் போராடுகின்றோம். எனினும் எமது அன்றாட வாழ்க்கையில் நாம் ஜனநாயக நெறிமுறைகளை பின்பற்றுகின்றோமா? என்று வினாவினை எழுப்பினால் அதற்குரிய விடை தேடுவது என்பது மிகவும் கடினமான ஒன்றாக காணப்படுகின்றது.

குறிப்பாக உரிமைகள் மற்றும் சுதந்திரத் திற்கு அப்பால் ஜனநாயகம் தொடர்பான விழிப்புணர்வு மற்றும் புரிதல் எம்மிடம் எவ்வாறு காணப்படுகின்றது.

பால் நிலை பரிமாணம், ஊடகங்களில் பெண்களின் வகிபங்கு, செய்தி அறிக்கையிடலில் பால்நிலை சமத்துவம் போன்றன தொடர்பில் எமக்கு காணப்படும் புரிதலானது சற்றுக் குறைவாகவே உள்ளது.

ஊடகங்கள் சமூகத்தில் பெண்களை இரு விதங்களில் சித்தரிக்கின்றன. அது நல்லதாகவும் கெட்டதாகவும் சித்தரிக்கப்படுகின்றது. பெண்கள் பெரும்பாலும் ஊடகங்களில் எதிர்மறையான குணாதிசயங்களோடே சித்தரிக்கப்படுகிறார்கள்.

உதாரணமாக, பெண்களை அழகைப் பொருட்டு மட்டுமே காண்பிக்கும் செய்திகளும், விளம்பரங்களும் அதிகமாகத் தோன்றுகின்றன. இதனால், பெண்களின் திறமைகள், அறிவுத்திறன்கள் மற்றும் அரசியல், சமூகத்துக்கு கொடுக்கும் பங்களிப்புகள் மேம்படாமலும் பேசப்படாமலும் மறைக்கப்படுகின்றன.

பல ஊடகங்களில் பெண்களை பாலியல் பொரு ளாக சித்தரிப்பது ஓர் வழக்கமாக மாறிவிட்டது. இது விளம்பரங்கள், திரைப் படங்கள், நாடகத்தொடர்கள் மற்றும் இசை வீடியோக்களில் அதிகமாக காணப்படுகிறது. இந்த வகையான சித்தரிப்பு, பெண்களின் படைப்பாற்றல் மற்றும் ஆளுமையை ஒடுக்கி அவர்களை தாழ்த்துவதற்கான வழியாக பயன்படுத்தப் படுகிறது.



ஜிந்துஜா விஜயகுமார்
யாழ்ப்பாணம்

ஊடக நிறுவனங்களில் பெண்களின் தலைமை வகிக்கும் பண்பானது குறைவாகவே காணப்படுகின்றது. அதாவது பல முக்கிய செய்தி நிறுவனங்களில் மேல் நிலை பதவிகளில் பெரும்பாலும் ஆண்கள் ஆதிக்கம் செலுத்துகிறார்கள். இதனால், பெண்களின் தகுதி குறைந்த அளவிலேயே விவாதிக்கப்படுகின்றன.

ஒரு சமூகத்தில் பெண்கள் எதிர்கொள்ளும் சிக்கல்கள் பலவாக இருந்தாலும்,



ஊடகங்களில் பெரும்பாலும் குறிப்பிட்ட மாதிரியான கட்டுப்படுத்தப்பட்ட முறைகளாக மட்டுமே பெண்கள் காட்சியளிக்கப் படுகிறார்கள். இதனால், அவர்களின் பலவிதமான அனுபவங்கள் மற்றும் உண்மை விடயங்கள் பொருட்படுத்தப்படாமல் மறைக்கப்படுகின்றன. இருப்பினும் சமீப காலங்களில், பெண்களை வெறும் அழகிய காட்சிகளாக மட்டுமல்லாமல் அறிவின், ஆளுமையின் அடையாளங்களாகவும் சித்தரிக்க முயற்சிகள் பல மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதற்கு முக்கிய உதாரணம் ஒலிம்பிக் வீராங்கனைகள், விஞ்ஞானிகள், தொழில்முனைவோர் ஆகியோரை மையமாக வைத்து வரும் செய்தி களை குறிப்பிடலாம்.

ஊடகங்களில் பாலின சமநிலையை கொண்டுவர அதிகாரிகள், அரசாங்கங்கள் மற்றும் பல நிறுவனங்கள் கடுமையான நடவடிக்கைகளை எடுத்து வருகின்றன. சட்டங்கள் மற்றும் கொள்கைகள் ஊடகங்க ளில் பெண்கள் சமச்சீர் முறையில் சித்தரி க்கப்பட வேண்டும் என்பதில் அதிக கவனம் செலுத்துகின்றன.

சமூகவலைத்தளங்கள் மற்றும் புதிய ஊடகத்தொழில்நுட்பங்களின் வளர்ச்சி, பெண்களுக்கு தங்கள் குரலை நேரடியாக பரப்ப முடியும் எனும் சக்தியை வழங்கியுள்ளது. இதன்மூலம் பெண்கள் தங்களைச் சார்ந்த பிரச்சனைகளைத் தீர்க்க மேலும் பல தளங்களில் குரல் கொடுக்கின்றனர்.

தற்காலத்தில் பெண்கள் இணைய வழி போன்ற பல்வேறு ஊடக தளங்கள் (You Tube> Instagram> Podcast) பெண்களுக்கு தங்களின் பார்வைகளை, அனுபவங்களை நேரடியாக பகிர்வதற்கான பெரிய வாய்ப்புகளை வழங்குகின்றன. இது மெய்நிகர் சூழலில் பெண்களின் குரலை அதிகம் ஒலிக்க வைத்துள்ளது.

இதன் மூலம் பெண்கள் தங்களுக்குரிய ஒரு தொழில்வாண்மை முயற்சியாகவும் மேற்கொள்கின்றார்கள். இதனால் மற்றவரிடம் சார்ந்திருக்கும் பெண்கள் தங்கள் தேவைகளை தாமே பூர்த்தி செய்வதற்கான வாய்ப்புக் காணப்படுகின்றது.

ஊடகங்களில் பெண்களின் சித்தரிப்பு தொடர்ந்து பரிணாமம் அடைந்தாலும், இன்னும் பல சவால்களை எதிர்கொள்ள வேண்டிய சூழல் உள்ளது. பெண்களை சமுதாயத்தில் உண்மையான இடத்தை அடையச் செய்ய ஊடகங்களின் செயல் மிக முக்கியம். ஊடகங்களில் பெண்களின் நிலையில் பல மாற்றங்கள் ஏற்பட்டுவிட்டாலும், மேலும் பல முயற்சிகள் பெண்களின் துல்லியமான, பன்முகமான சித்தரிப்பிற்காக மேற்கொள்ளப்பட வேண்டும்.

பெண்களை சமுதாயம் பார்க்கும் கோணம் மாற்றப்பட்டு ஆண்களைப்போல ஊடக உலகில் பெண்களுக்கான அங்கீகாரமும் கிடைக்கப்பட வேண்டும்.

உலகின் முதலாவது பெண் பிரதமரை அறிமுகம் செய்த எமது நாடு நிச்சயம் பெண்களின் எதிர்காலத்திற்கான முயற்சிகளை மேற்கொள்வதற்கு உறுதுணையாக இருக்கும் என்பது குறிப்பிடத்தக்க ஒரு விடயமாகும்.





# உங்களுக்கானவை உங்களிடமே வந்து சேரும்

**நாம்** திட்டமிடும் வாழ்வை எப்போதும் நாம் எண்ணியபடியே வாழமுடிவதில்லை. எப்போதும் எல்லாம் சரியாக இருக்க வேண்டுமென நாம் பார்த்துப் பார்த்து முடிவெடுத்தாலும் இது இப்படியாக இருக்கப் போவதில்லையெனக் காலம் தன் கணக்கைக் காட்டிவிட்டுப் பல் இளித்துக்கொள்ளும்.

நாம் நம்பியிருக்கும் உறவுகள் நம்மை விட்டுப் போகலாம், நாம் காண்கின்ற கனவு வாழ்க்கை சிதைந்து போகலாம், கோட்டை கட்டி வைத்திருக்கும் எதிர்காலக் கனவுகள் தகர்ந்து போகலாம், நம் இலட்சியங்கள் உடைந்து போகலாம்.

இவையெல்லாம் நிகழ்கின்றபோது தோன்றும் ஆயிரமாயிரம் கேள்விகளுக்கு நம்மிடமோ் நம்மைச் சுற்றியுள்ளவர்களிடமோ பதில் இருக்காது. பதில் இல்லையென்பதைத் தாண்டி நம்மைச் சுற்றி என்ன நடக்கின்றது என்பதை நம்மாலேயே புரிந்துகொள்ள முடியாது.

எது சரி, எது பிழை, எங்கே தவறிழைத்தோம், யார் ஏமாற்றினர் என்பதைக்கூட நம்மால் ஊகிக்க முடியாது விரக்தியில் இருப்போம்.



நம் உலகம் உடைந்து நொறுங்கிவிட்டதாய் வேதனை கொள்வோம். கண்ணீரில் கவலைகளைக் கரைக்க வழி தேடுவோம்.கடவுளைத் தேடிச் சென்று கோவத்தைக் கொட்டித் தீர்ப்போம். ஆனால் உண்மை என்னவெனில் நம்மை விட்டு விலகிச் சென்றதை விட நல்லவற்றிற்காக நாம் தயார்படுத்தப்பட்டுக்கொண்டிருப்போம். அல்லது நமக்கானது நம்மை வந்து சேர்வதற்கிடையில் அதற்குப் பொருத்தமானவராக நாம் மாற்றப்பட்டுக் கொண்டிருப்போம்.



பொலிகையூர் ரேகா
(இங்கிலாந்து)

நாம் நம்மை அதிகம் சிரமப்படுத்தத் தேவையில்லை. அதி கம் சிந்திக்க வேண்டியதல்லை, நாம் என்ன தவறிழைத்தோமென நம் வாழ்நாட்களைக் கவலையில் கழிக்க வேண்டியதில்லை.

நம்மை விட்டுச் சென்றதைக் குறித்து வருந்தி நாம் நம் நேரத்தை வீண்டிக்க வேண்டியதில்லை.நாம் செய்ய வேண்டியதெல்லாம் எது சரியானதோ அதன்படி நடக்க வேண்டியதே. நேர்மையாக நடந்து நம் மதிப்பு என்ன என்பதை உயர்த்த வேண்டியதே.

நாம் என்னதான் விரட்டியடித்தாலும் நமக்கானது நம்மிடத்தில் வந்து சேரும். நாம் என்னதான் இறுகப் பிடித்தாலும் நம்மை விட்டு விலகிச் செல்வது விலகியே தீரும். அது இன்பமாகவும் இருக்கலாம், துன்பமாகவும் இருக்கலாம்.

நமக்கானது நம்மை வந்து சேரும்-மனிதர்கள்,கனவுகள், இலட்சியங்கள், வேலை- அவை நம்மைச் சரியான நேரத்தில் தேடி வரும். நாம் போராட வேண்டியதில்லை. நம்மை அவசரப்படுத்த வேண்டியதில்லை. நம்மைத் தேடி வருமா வராதா எனத் தெரியாமல் நம்மை நாமே நோகடிக்க வேண்டியதில்லை.

நாம் செய்ய வேண்டியதெல்லாம் அதனதன் போக்கில் அவற்றை விட்டுவிட வேண்டியதுதான். தொடர முடியாதென நினைத்த உங்கள் கனவுகளைத் தொடருங்கள். பிரிந்துவிட்டதாய் நினைத்தவர்களுக்கான உங்கள் அன்பை அப்படியே வைத்திருங்கள்,நீங்கள் உருவாக்கிய உங்கள் இலட்சியத்தை அப்படியே தொடருங்கள். இப்படியெல்லாம் நடக்கின்றதே என உங்களை வருத்திக் கொண்டிராமல் அததற்குரிய காலத்தைக் கொடுத்துவிட்டு உங்கள் கடமைகளைத் தொடருங்கள். உங்களைத் தகுதியானவராய் மாற்றிக் கொள்ளுங்கள் உங்களுக்கானவை உரிய காலப் பகுதியில் உங்களை வந்தடையும். அதைப் பெறுவதற்காக உங்களைத் தயார்படுத்துவதே உங்கள் பொறுப்பாகும். அன்றி வருந்தி வருந்தி வாடிப்போவதல்ல. உங்களுக்கானவற்றை உங்களைத் தேடி வருவதற்காக



அனுமதித்து விட்டு அமைதி காத்தீர்களானால் அவை உரிய நேரத்தில் வந்து சேரும். உங்கள் அன்புக்குத் தகுதியானவர்களெனில் அதே மனிதர்கள் உங்களிடத்தில் வருவார்கள்.உங்கள் இலட்சிகளுக்கும் கனவுகளுக்கும் தகுதியானவராய் உங்களை உயர்த்திக்கொள்வீர்களானால் அவை உரிய காலத்தில் உங்களை வந்தடையும்.

ஆம்! உங்களுக்கானவை உங்களை உரிய காலத்தில் வந்து சேரும். இல்லையெனில் அவை உங்களுக்கானவையல்ல என உள்ளத்தைத் தேற்றிக்கொள்ளுங்கள்.




அனைவருக்கும் இனிய தைப் பொங்கல் நல்வாழ்த்துகள்

# குமரி கண்ட குமரன்

## நம் பண்பாடு நெறியை வாழ்விலில் பதித்த இசையனுபவம்



### ரசனைப் பகிர்வு




**தன்** நிலத்தை,தன் மக்களை நேசிப்பவனே உண்மையான கடவுள் என்றும், அவ்விதம் காவல் தெய்வமாக விளங்கிய முருகனையே தெய்வமாக வழிபட்டதாகவும் சங்க இலக்கியங்கள் சான்று பகிர்கின்றன. முருகனைத் தலைசிறந்த வீரனாகவும், மன்னர்களின் வீரத்தையும், போர்த்திறத்தையும் ஒப்பிடும் போது அவனே ஒரு முன்மாதிரியாகவும் எடுத்தாளப்பட்டிருக்கிறான். “கொற்றவைக் குழவி“ என்ற பெயரால் அழைக்கப்பட்டதன் பின்னணியில் கொற்றவைத் தாயின் மகனாக விளங்கிய இந்த முருகக் கடவுள், பஃறுளி ஆற்றின் பன்மலை அடுக்கங்களில் வாழ்ந்த மன்னனாக வாழ்ந்தவன் முருகன் என்றும், நடுகல் வழிபாட்டின் மாண்பையும்

**கானா பிரபா**
(அவுஸ்திரேலியா)

கவிஞர் அறிவுமதி தன் “தமிழ் முருகன்“ என்ற நூலில் சங்க இலக்கிய வரலாற்றுத் தேடலின் ஆய்வு ரீதியான நூலாகப் பகிர்ந்திருக்கிறார்.

இரு தசாப்தங்களுக்கு முன்னர் நமது மண்ணின் எழுச்சிப் பாடல்களில் ஒன்றான...... பாடலில் நித்யஸ்ரீ மகாதேவன் “அந்த முருகனுக்கே அவன் நிகரானவன்“ என்று அறிவுமதி அவர்கள் எழுதிய போது எப்படி எங்கள் கடவுளை “அண்ணனுக்கு“ ஒப்பிடலாம் என்று கண்டனக் குரல்கள் எழுந்தன.அந்த நேரத்தில் அவர் தன் ஆராய்ச்சிப் பகிர்வின்



வழியாகத் தக்க பதிலடியும் கொடுத்தார். ஆனால் வேதனை என்னவென்றால் இப்படியாக நம் வரலாறு தெரியாமல் மெய் வரலாறு கூறுபவர்களையே இழித்துப் பேசுவது நம் மரபு.

> **ஈழத்தின் நம்பிக்கை தரும்
> ஒரு இசை இளவல் மதீசன்,
> மக்கள் படைப்பாக
> “குமரி கண்ட குமரன்“ என்ற**

இசைப் பெட்டகத்தை ஆக்கியளித்துள்ளார்.

இது காலம் அவருக்குக் கொடுத்த பணியோ தெரியவில்லை. ஆச்சரியமாக, மதீசனே ஐந்து ஆண்டுகளுக்கு முன்னர் இந்த முருகக் கடவுளின் தாய் “கொற்றவை“



பெயர் கொண்ட இசை வட்டை முன்னர் வழங்கியுமிருக்கிறார். ஈழத்தின் இசை, நாடகங்கள் அவை மரபு வழி புராண இதிகாசக் கதைகளாகவோ அன்றி சமூகப் பிரச்சனைகளின் பிரதிபலிப்பாகவோ, தேச விடுதலை கொண்ட கருப்பொருளிலோ எழுந்த போது ஒவ்வொரு படைப்புக்கும் புதிது புதிதாகப் பாடல்கள் ஆக்கப்பட்டு அவை இசை வடிவம் கொடுக்கப்பட்டு மேடையேறி முடிந்ததும் கரைந்து போய் விடும் அவல நிலையே பெரும்பாலும் நிகழ்ந்து வருகிறது.

தேச விடுதலைக்க்காகப் போராடும் களத்தில் எழுந்த பாடல்கள், போராட்டம் அழித்தொழிக்கப்பட்ட பின்னரும் தன் தாய்மண்ணின் மீதும், அதன் சமூக பொருளாதார மற்றங்களின் மீதும் கரிசனை கொண்டு எழும் பாடல்கள் என்று இரண்டு விதமான பண்பினைக் கொண்ட பாடல்களை நம் ஈழத்தவர் சமைத்திருக்கிறார்கள். பின்னையது நடப்புக் காலம். “குமரி கண்ட குமரன்“ பாடல்களும் அத்தகையதொரு பிரிவுக்குள் வருகிறது. குறியீட்டையும், இந்தப் பாடல் தொகுப்பின் பின்னால், தசாப்தத்துக்கு முன் நம் இனம் கண்டதொரு வீழ்ச்சியின் படிமங்களைக் குறியீட்டாகக் காட்டி நிற்கின்றது. ஒவ்வொரு பாடல்களும் இசை, பயன்படுத்தப்பட்ட வாத்திய அலங்காரங்கள், குரல்கள், தாளக்கட்டு என்று வெவ்வேறு வகையினதாகத் தனித்து நிற்கின்றன. ஆனால் அவை கூட்டாகச் சேரும் போது பக்தியும், வீரமும், வீழ்ச்சியும், நெஞ்சில் கனன்று கொண்டிருக்கும் நெருப்பையும் ஒரே நிலையில் வைத்துப் பார்க்கின்றது.

ஈழத்துப் போர்க்காலத்து இசைப் பாடல்களில் ஒருவகையினதான துன்பியல் பாடல்களின் சாயலில் தளர் நடையோடும் இசைக்கப்பட்டிருக்கின்றது. இன்னும் விடியாத் துயரோடு இருக்கும் தமிழ் மண்ணின் ஏக்கக் குரலாய்த் தொனிக்கின்றது. வரிகளைக் கொணர்ந்த பாடலாசிரியரோடு, பாடகர்கள், ஓலிச்சமப்படுத்தலைக் கையாண்டோர், உப இசை வாத்தியக்காரர்கள் என்று எல்லோருமே இசையமைப்பாளர் மதீசனின் “குமரி கண்ட குமரன்“ பாடல்களின் வெற்றிக்கு ஒத்திசைவோடு உதவியிருப்பதைப் பாடல்களைக் கேட்கும் போது புரிகிறது.

இன்றைக்குச் சாமியறையில் இருக்கும் சுவாமிப் படங்களில் இருந்து, ஒரு அரசர் காலத்துப் படம் வரை ஏராளம் நகை நட்டுகள் அணிந்து, பட்டுப் பீதாம்பரங்கள் கொண்டதொரு அமைப்பிலேயே எங்கள் வழிபாட்டு முறை வீட்டுக்குள் இருக்கிறது. ஆனால் தமிழர் பண்பாட்டுக்கும், வாழ்வியலுக்கும் முற்றும் முரணானதொரு கலாசாரப் படிமத்துடனேயே வாழ்ந்து பழகி விட்டோம் என்ற உண்மையை ஓவியர் ட்ராஸ்கி மருது. அன்றைய காலத்தில் அரசனும் சரி, குடி மக்களும் சரி மிகவும் எளிமையானதொரு தோற்றத்தில் வெற்றுடலும், இடுப்பில் அரைத் துண்டுமாகவே தம் தோற்ற வெளிப்பாடுகளை வெளிப்படுத்தியிருந்தனர். இதனையே நாடு காண் பயணி மார்க்கோ போலோவும் இந்தியாவில் இம்மாதிரியானதொரு வாழ்வு முறையைக் கண்டு அதிசயத்து மன்னனும் மக்களும் ஒருவர் ஆயினர் என்று குறிப்பிட்டிருக்கிறார்.


ஓவியர் மருதுவின் ஓவியங்களிலும் மன்னராட்சியையோ, அல்லது அரசனையோ சித்தரிக்கும் போது இந்த எளிமையை உணரலாம். அவரின் பேச்சு முடிந்ததும் இந்தத் தாக்கத்தில் தானா மருது பணி புரிந்த தமிழ்ப் படமான தேவதையில் மன்னராட்சியின் காட்சிப் புலத்தை எளிமைப்படுத்தியதை உதாரணம் காட்டலாம். ஆயிரத்தில் ஒருவன் படத்தின் கலை இயக்குநர் சந்தானம். இந்தப் படம் பேசப்பட்ட அளவுக்கு யதார்த்த பூர்வமாக அணுகிய அந்த அரசர் காலத்துக் காட்சித் திறன் அதிகம் பேசப்படவில்லை. இந்த இடத்தில் இயக்குநர் செல்வராகவனின் நேர்த்தியான உழைப்பைப் போற்றாமல் இருக்க முடியாது.

தேவதை, ஆயிரத்தில் ஒருவன் ஆகியவை தமிழனின் அடையாளத்தை இன்னது இன்னதாகக் காட்டி வர்த்தக ரீதியில் தோல்வி கண்டவை. நிஜம் தோல்வி கண்டு கற்பனை உலகமும் நமக்கு அந்நியமான பண்பாடும் தான் நெருக்கமாக இருக்கிறது. ஈழத்துக் கூத்து மரபில் எழும் மேடை முயற்சிகளில் பண்டைய பாரம்பரிய ஆடை, அணிகளு க்கே முக்கியம் கொடுப்பதையும் இங்கே சொல்லி வைக்க வேண்டும். தலைமுறையாய்க் கொண்டாடிய கிராமத்துக் காவல் தெய்வங்கள் மங்கிவிட்டன.இங்கே காட்சிப்படுத்தலில் அந்த வரலாற்றை மீள நிறுவியிருக்கிறார்கள்.

30 ஆம் பக்கம் பார்க்க...




**வெற்றிமணி திருமண சேவை**




யேர்மனியில் கற்றிங்கன் நகரில் ஆசிரியையாக பணிபுரியும் நற்குணம் உள்ள சைவ, வேளாள குல 30 வயது பெண்ணிற்கு ஏற்ற பட்டதாரி மணமகனை தற்போதைய பாடசாலையிலேயே கற்பிக்க கூடிய தூரத்தில் வரனை எதிர்பார்க்கும் பெற்றோர்.
தொடர்புகளுக்கு: 4915774318528

யேர்மனியில் Wirtschaftsingenieurin ஆக படிப்பை நிறைவு செய்த 35 வயது நற்குணமுள்ள சைவ வேளாள பெண்ணிற்கு பொருத்தமான பட்டதாரி மணமகனை யேர்மனியில் எதிர் பார்க்கும் பெற்றோர்
தொடர்புகளுக்கு: 4915774318528

MOBIL: 0091-9841026997| Email: kbr0452@yhoo.co.in

# ஜெர்மனியில் திருவள்ளுவர் சிலை திறப்பு விழா





"வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான் புகழ் கொண்ட தமிழ் நாடு" என்னும் பாரதியின் வாக்குக்கு இணங்க வள்ளுவர் சிலை ஜெர்மனியில் வந்தமர்ந்திருக்கின்றது.

ஜெர்மனியில் டோட்முண்ட் என்னும் நகரில் சூநளைைஉாந என்னும் வீதியிலே 07.12.2024 அன்று காலை 11 மணிக்குச் சிலை திறந்து வைக்கப்பட்டது. இந்தச் சிலையை வடிவமைத்தவர் கத்தரீனா பொக் என்னும் ஜெர்மனியப் பெண் ஆவார். இச் சிலை கிட்டத்தட்ட ஒன்றரை வருடங்களாகச் செய்யப்பட்டு முடிவுக்குக் கொண்டுவரப்பட்டது. மேற்கு டோட்முண்ட் நகரத்தலைவர் அஸ்றிறிட் கிறேமர், மாநில நாடாளுமன்ற உறுப்பினர் வோல்கான் பாறன், றல்வ் மாநில நாடாளுமன்ற உறுப்பினர் ஸ்ரோல்ஷ், மேற்கு டோட்முண்ட் பிரதி நகரத்தலைவர் ஓலாவ் மயர் ஆகயோர் இந்நிகழ்வில் கலந்து கொண்டு தமிழர்களுடைய பாரம்பரிய இசை பறை மேளம் ஒலிக்க, மக்கள் கரஒலி இசைக்க திருவள்ளுவர் சிலையைத் திறந்து வைத்தவர்கள். இது ஒரு பெருமைப்படும் விடையமாகும்.

இச்சிலை அமைப்பதற்கு முற்றுமுழுதாகப் பாடுபட்ட தமிழ் ஆர்வலரும், தொழிலதிபரும், தமிழர் அரங்க உரிமையாளரும், புலம்பெயர் எழுத்தாளர் சங்கத் தலைவருமான வி.சபேசன் அவர்களும், சிலை வடிவமைப்பது சம்பந்தமான உத்தியோகபூர்வமான முன்னெடுப்புக்களுக்கு முற்றுமுழுதாகப் பாடுபட்ட அவர் மனைவி கலைநிதி சபேசன் அவர்களும் சிலைக்கு மாலை அணிவித்தார்கள்.

அதன் பின் ஜெர்மனியப் பிரமுகர்களுக்கும், சிலையை வடிவமைத்த கத்தரீனா பொக் அவர்களுக்கும் பொன்னாடை அணிவித்துப் பறை மேள அணிவகுப்புடன் தமிழர் அரங்கத்துக்கு அழைத்துச் அழைத்துச் செல்லப்பட்டனர். தமிழர் அரங்கத்தில் ஜெர்மனியப் பிரமுகர்களும் எழுத்தாளர்களும் தமிழ் ஆர்வலர்களும் உரையாற்றினர். தமிழ் மரபு அறக்கட்டளை பன்னாட்டு அமைப்பின் தலைவர் முனைவர் க. சுபாஷினி அவர்கள் காணொளி வடிவில் ஜெர்மனி மொழியில் வாழ்த்துரை வழங்கினார். அந்த உரையானது ஜெர்மனியப் பிரமுகர்களுக்கு வள்ளுவரையும், திருக்குறளையும் சிறந்த முறையில் விளங்க வைத்ததுடன் அந்தச் சிலை நிறுவப்பட்ட அவசியத்தையும் தெளிவுறுத்தியது. பேச்சாளர் சி. சிவவினோபன் அவர்களும் காணொளி மூலம் திருவள்ளுவர் பற்றி விளக்கினார். வந்திருந்த ஜெர்மனியப் பிரமுகர்கள் தாம் திருக் குறளைக் கற்கப் போகின்றோம் என்று கூறியது ஒரு சிறப்பம்சமாக இருந்தது.

திருமதி கலைநிதி சபேசன் அவர்களுடைய மாணவிகள் திருக்குறளுக்கு நடனம் ஆடினார்கள். இசை நிகழ்ச்சி நடைபெற்றது. சிறுவர்கள் திருக்குறள் மனனம் செய்து ஒப்புவித்தார்கள் ,விருந்தினர்களுக்கு மதிய உணவு வழங்க ப்பட்டது. சிலை உருவான கதையை திரு. வி. சபேசன் எடுத்துரைத்தார். சிலை உருவாவதற்குப் பல தமிழார்வலர்கள் நிதி பங்களிப்புச் செய்துள்ளார்கள் எனவும் அவர்களுக்கும் நன்றி தெரிவித்தார். தமிழர்கள் சிலை அமைந்துள்ள இடத்தை வள்ளுவர் சந்தி என அழைக்க வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டார். சபேசன் அவர்களுக்கும் அவர் மனைவி கலைநிதி அவர்களுக்கும் ஜெர்மன் அமைப்புக்கள் பொன்னாடை, மாலை அணிவித்து அவர்களைப் புகழ்ந்து தம்முடைய மகிழ்ச்சியைத் தெரிவித்தார்கள்.

**வான்மதி (யேர்மனி)**

வள்ளுவர் சிலை அருங்காட்சியகத்தில், பூங்காவில் எல்லாம் அமைக்கப்பட்டுள்ளது. ஆனால் ஐரோப்பாவில் வீதியில் வள்ளுவர் சிலை ஜெர்மனி டோட்முண்ட் நகரிலேதான் அமைந் துள்ளது. அத்துடன் ஒரு அந்நிய நாட்டுப் பெண் மணி வள்ளுவர் சிலையை வடிவமைத்ததும் இதுதான் முதல் தடவை என்பதும் பெருமைக்குரிய விடயமாக இருக்கின்றது.

இலண்டன், டென்மார்க், ஹொலாண்ட், பாரிஸ்உட்படஐரோப்பாவின் பல பகுதிகளிலும் இருந்து குளிர் மழையையும் பொருட்படுத்தாமல் அதிகமான மக்கள் வள்ளுவர் சிலையைத் தரிசிக்க வந்திருந்தமை பெரும் மகிழ்ச்சியைத் தந்தது. ஜெர்மனியில் தமிழர்களின் அடையாளமாக அமைந்திருக்கும் வள்ளுவர் சிலை ஒரு வரலாற்றுத் தடயமாகும்.














அனைவருக்கும் இனிய தைப் பொங்கல் நல்வாழ்த்துகள்





# ஜெர்மனியில் திருவள்ளுவர் சிலை திறப்பு விழா















அனைவருக்கும் இனிய தைப் பொங்கல் நல்வாழ்த்துகள்

02 ஆம் பக்கத் தொடர்ச்சி...

## எது பெருமை

அவர்களைக் கூட்டவந்தது அவர்களுடைய மனுஷன்கள் அல்ல. அவர்களுடைய மகன்களும், மருகள்களுமே. எனக்கு என்னமோ அவர்களுடைய மனுசன்களை விட அவர்களுடைய மகன் மேல் என்றே எண்ணத் தோன்றியது. எனக்கும் குசும்பு குறையவில்லை, நானும் தமிழ் என்று காட்டப் போனை மகனுக்கு எடுத்தேன். "அவசரம் இல்லையடா மருமகளுக்கு இரவுச் சாப்பாட்டுக்கு உதவிபண்ணிட்டு ஆறுதலாய் வடா". என்றேன்.

அப்பா நான் சமைக்கிறேன். மருமகள் தான் உங்களைக் கூட்ட வாறா என்றான்.

19 ஆம் பக்கத் தொடர்ச்சி...

## கிரகமாக இருந்து

ஆனால், அதற்கு ஐந்து நிலவுகள் உள்ளன, அதில் சாரன் மிகவும் பெரியது, ப்ளூட்டோவின் அரை அளவுக்குச் சுமார் உள்ளது.

ஒரு நீண்ட நாள்: ப்ளூட்டோவில் ஒரு நாள் (முழுச் சுற்று) 153 மணிநேரங்கள் இது பூமியின் ஆறு நாட்களுக்குச் சமமாகும்.

தீவிரப் பருவங்கள்: ப்ளூட்டோவின் நீள்வட்டப் பாதை மற்றும் சாய்வு அதிரடியான பருவ மாற்றங்களை ஏற்படுத்துகிறது, சில பகுதிகளில் தொடர்ந்து பல்லாண்டுகளுக்குப் பொழுது பொழுதாக ஒளி அல்லது இருண்ட சூழ்நிலையைத் தருகிறது. ப்ளூட்டோவின் அந்தஸ்து குறித்த விவாதம் இன்னும் நிறைவேறவில்லை. சில விஞ்ஞானிகள் பரந்த வரையறைகளைப் பரிந்துரைக்கின்றனர், இது ப்ளூட்டோவுக்கு அதன் கிரக அந்தஸ்தை மீண்டும் வழங்கும். மற்றவர்கள் ஐயுரு விதிகளை ஆதரிக்கின்றனர்.

ப்ளூட்டோவின் "கிரகம்" என்ற பட்டத்தை மாற்றியமைத்தது விஞ்ஞானத்தின் வளர்ச்சியைக் காட்டுகிறது.

"குறுங்கோள்" என்ற பெயரில் இருந்தாலும் சரி, வேறெந்தப் பெயரில் இருந்தாலும் சரி, ப்ளூட்டோ எப்போதும் நம்மை வியக்கவைக்கும் ஓர் உலகமாகவே இருந்து நமது சூரியக் குடும்பத்தில் ஒரு முக்கியமான இடத்தைப் பெறுகிறது.

11 ஆம் பக்கத் தொடர்ச்சி...

## சிரியாவில் அசாத் ஆட்சியின் வீழ்ச்சி:

ஏற்பட்ட நிலநடுக்கம், நிலைமையை இன்னும் மோசமாக்கியது. தற்போதய மோதலின் விளைவாக சிரியாவில் 5,900க்கும் மேற்பட்ட மக்கள் பலியாகினர். 88 லட்சம் மக்கள் இதனால் பாதிக்கப்பட்டனர்.

எண்ணெய் வயல்கள் மற்றும் முக்கிய வர்த்தகப் பாதைகள் மீதான கட்டுப்பாடு உள்ளிட்ட பொருளாதார நலன்களும் தொடர்ந்து பதற்றங்களைத் தூண்டி வருகின்றன.

இவற்றோடு, மக்களின் அடிப்படைத் தேவைகள் பிரச்னையும் இணைந்ததால், நாட்டில் அதிருப்தியான கடும் சண்டை நிலவியது.

### 54 ஆண்டு அசாத் ஆட்சி:

1970களின் தொடக்கத்தில் இருந்து கடந்த 54 ஆண்டுகளாக அசாத் குடும்பம் சிரியாவில் ஆட்சி புரிந்து வந்துள்ளது. நாட்டை விட்டு தப்பி ஓடிய ஜனாதிபதி பஷார் அல்-அசாத் தலைமையிலான அரசு இறுதி வரை ஆட்சியில் இருந்தது.

கடந்த சில ஆண்டுகளாக பெரிய அளவில் வன்முறை எதுவும் ஏற்படாத நிலையில், கடந்த வாரம் மீண்டும் போர் வெடித்தது. அசாத் தலைமையிலான அரசுக்கு எதிராக கிளர்ச்சியாளர்கள் போரில் ஈடுபட்டனர். இஸ்ரேல் மற்றும் ஹிஸ்புல்லா இடையே போர் நிறுத்த ஒப்பந்தம் ஏற்பட்ட நிலையில் இந்த கிளர்ச்சி வெடித்தது.

சிரியாவில் உள்ள அலெப்போ மற்றும் ஹமா பகுதிகளை கிளர்ச்சியாளர்கள் கைப்பற்றிய நிலையில், தலைநகர் டமாஸ்கஸ் நோக்கி முன்னேறி சிரியாவை கட்டுப்பாட்டில் கொண்டுவந்துள்ளனர்.

### அசாத் தப்பி ஓட்டம்:

சிரிய அதிபராக இருந்த பஷார் அல் அசாத், அதிபர் மாளிகையில் இருந்து தப்பி சென்றுவிட்டதாகவும் தகவல் வெளியாகியுள்ளது. தலைநகர் டமாஸ்கஸில் இருந்து ஜனாதிபதி அசாத் வெளியேறி விட்டார் என்றும், அவர் சென்ற விமானமொன்று ரேடார் திரையிலிருந்து மாயமாகியுள்ளதாக சில செய்திகள் சொல்கின்றன.

இதேவேளை ரஷ்யா உள்ளிட்ட சில நாடுகள், கிளர்ச்சியாளர்களின் கட்டுப்பாட்டில் சிரியா செல்வது என்பது ஏற்றுகொள்ள முடியாதது என கூறி வருகிறது. இதனால், மத்திய கிழக்கில் பதற்ற நிலை காணப்படுகிறது.

இதனால் ஆப்கானிஸ்தானில் தாலிபன் ஆட்சி அமைந்தது போல, சிரியாவிலும் கிளர்ச்சியாளர்களின் ஆட்சி விரைவில் அமலுக்கு வரலாம் என கூறப்படுகிறது.

09 ஆம் பக்கத் தொடர்ச்சி...

## ஆசியாவில் முதலாவது....

பரிணாமத்துடன் வளர்ச்சி கண்டு வந்த போதும் பத்தொன்பதாம் நூற்றாண்டில் பிள்ளைகளுக்கு ஆங்கில கல்வியை புகட்ட வேண்டுமென்ற புதிய சிந்தனை புனிதம் பெற்றது.

1914 ஆம் ஆண்டு சிரேஷ்ட கேம்பிறிஜ் வகுப்பு ஆரம்பிக்கப்பட்டது என்பதில் இருந்து ஆங்கில பாடசாலையின் தரம் உயர்ந்துள்ளது என்பதை அறியலாம். 1915 ஆம் ஆண்டு பாலர் பாடசாலை ஆரம்பிக்கப்பட்டமை இக் காலப்பகுதியின் முக்கிய நிகழ்ச்சிகளில் ஒன்றாகும். யாழ்ப்பாணப் பகுதியில் பெண் பிள்ளைகளுக்கு அமைக்கப்பட்ட முதலாவது பாலர் பாடசாலை ஆகும். இவ்வாறு பெண் பிள்ளைகளுக்கு கல்வியை புகட்டியதுடன் மட்டுமல்லாமல் அவர்களின் ஆளுமையை வளர்ப்பதற்காக மேலைத்தேய இசை கீழைத்தேய இசை மனையியல் செயல்பாடு ஆக்க செயற்பாடுகள் கைவேலை போன்றவற்றையும் நடைமுறைக்கு கொண்டு வந்து ஊக்குவித்தனர். இதற்காக கர்நாடக சங்கீதத்தை முழுமையாக பயின்று வருவதற்கு இந்தியாவுக்கு பயிற்சி பெற்று வருவதற்கு அனுப்பி எடுத்தனர். பாடசாலை என்றால் மாணவர்கள் கற்கக் கூடிய மகிழ்ச்சிகரமான சூழலாக இருக்க வேண்டுமென்பதற்காக பௌதீக சூழலை இயற்கையுடன் சங்கமிக்கும் வகையில் மரங்களை நாட்டி ரம்மியமான இடமாக மாற்றினர். உடுவில் மகளிர் கல்லூரி இவ்வருடம் 200 ஆவது ஆண்டை தொட்ட மகத்தான தருணமதில் 200 மரங்கள் பாடசாலை வளாகத்தில் வரலாற்றை பேசி நிற்கின்றது..

உடுவில் மகளிர் கல்லூரி தனது 200 ஆண்டு கால வரலாற்றில் நான்கு அமெரிக்க மிசன் அதிபர்களையும் ஆறு சுதேச அதிபர்களையும் கொண்டு இன்று வரை மிடுக்குடன் மிளிர்ந்து வருகின்றது.

இவர்களில் திருமதி ஹரியட் வின்ஸ்லோ செல்வி எலைசா அக்னியு செல்வி சூசன் ஹெலண்ட் செல்வி லூலு புக்வோல்டர் ஆகியோர் அமெரிக்க தேசத்தை சேர்ந்தவர்கள். சுதேச அதிபர்களாக செல்வி ஹட்சன் பரமசாமி திருமதி சரஸ்வதி சோமசுந்தரம் செல்வி F.H செல்லையா திருமதி சிராணி மில்ஸ் திருமதி பற்றிசியா சுனித்தா ஜெபரட்ணம் செல்வி மதுரமதி குலேந்திரன் ஆகியோர் வரலாற்றுத் தடத்தில் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டியவர்கள்.

இலங்கையிலே பெண்களுக்கு தனித்துவம் மிக்க பாடசாலையாக இன்று வரை இயங்கி கல்வியில் மட்டுமல்லாது இணை பாடவிதான செயல்பாடுகள் மாணவர்களின் ஆற்றல்களை வளர்க்கும் நோக்கில் கழகங்கள் ஒழுக்கம் என்பன பொலிவிழக்காது பெண்கள் மத்தியில் பொங்கிக் கொண்டிருக்கின்றது.

இன்று 65 வீதமான பெண்கள் பல்கலைக்கழகங்கள் அரச உத்தியோகங்கள் அரச நிர்வாகங்கள் ஆசிரியர்கள் என ஆண்களை விட அதிகமாக ஆதிக்கம் செலுத்த காரணம் உடுவில் மகளிர் கல்லூரின் பிறப்பே என்று கூறுவதில் மிகையேதுமில்லை.

பெண்களின் பிறப்பிற்கே மகுடம் சூடிய உடுவில் மகளிர் கல்லூரி மிகவும் துன்பகரமான சூழலில் இருந்தே எழுச்சி பெற்றது. இதன் மகிமை பெருமை சொல்லியடங்காது. அப்படிப்பட்ட பாடசாலையில் கல்வி கற்று ஆண்களுக்கு நிகராக சமத்துவத்தை பெற்று தலை நிமிர்ந்து சமத்துவத்துடன் தன்மானத்துடன் வாழ வழிவகை செய்திருக்கின்றது.









அனைவருக்கும் இனிய தைப் பொங்கல் நல்வாழ்த்துகள்



# கற்றிருத்தல் வேறு, கற்பித்தற்கலை வேறு


"சமூகம் விரும்புவதைக் கொடுப்பவன் அல்ல கலைஞன். எம் சமூகத்திற்கு எது தேவை என்பதை உணர்ந்து அதை அவர்கள் மாற்றும் வண்ணம் கொடுப்பவனை சிறந்த கலைஞனென சமூகத்தில் நாம் இனம் காண முடியும்." கற்பித்தல் என்பது ஒரு கலை என்பதை நான் உணர்ந்தபோது நடனத்தில் கற்பித்தலைத் தொடங்கி எட்டு ஆண்டு காலங்கள் கடந்துவிட்டிருந்தது. இந்த எட்டு ஆண்டுகளில் என் மாணவர்களை வருத்தியும் கண்டித்தும் திட்டியும் புரியவைத்தும் அவர்களை உருவாக்கிக் கொண்டிருந்தாலும் அவர்களது கலைத்திறனிலும் சரி வளர்ச்சியிலும் சரி நான் நினைத்த உயரத்தின் அருகிற்கூட நிற்க முடியாமல் போனது யாருடைய பிழை என்பதைத் தெரிந்து கொள்ளாமலேயே எனது கற்பித்தற் பயணம் தொடர்ந்து கொண்டிருந்தது.

எப்போதும் ஆசிரியர்கள் நாம் சரியாகக் கற்பிக்கின்றோம், மாணவர்கள்தான் புரிந்து கொள்கின்றனர் இல்லை, ஆர்வம் இல்லை, அவர்களுக்கு நேரமில்லை, அதற்குரிய சூழல் இங்கில்லை, பாடசாலைப் படிப்புகள் அதிகமாக இருக்கின்றன என்ற காரணங்களைத் தேடிக்கண்டுபிடித்து எம்மை நாமே சமாதானப்படுத்தி வைத்திருக்கின்றோமே தவிர, ஆசிரியராக எம்மை நாம் சுயவிமர்சனம் செய்து கொண்டதில்லை. ஒரு ஆசிரியராக நான் செய்த தவறுகளை சுயவிமர்சனம் செய்வதுடன், இந்த கட்டுரை உங்களுக்கும் பயன் தரும் என்றே நம்புகின்றேன்.

சில வருடங்களுக்கு முன்பு இணையத்தளங்களிற் கண்ட சில மாணவியரின் கலை வெளிப்பாட்டினை, திறனை, அவர்களுடைய நேர்த்தியை கண்டபின் எப்படி இவர்களால் மட்டும் முடிகிறது என்ற கேள்வி எனக்குள் எழுந்தது.

புலம் பெயர் தேசங்களில் பலர் கலைகளை கற்றுக் கொண்டாலும், பரீட்சைகளில் சித்தி பெற்று தமக்கென பல பட்டங்களைப் பெற்றுக்கொண்டாலும் அவர்களில் ஒருவருடைய கலைவெளிப்பாடிற்கூட கலைநுணுக்கங்களையோ, ஆர்வத்தினையோ காணமுடிவதில்லை. பரீட்சை முடிந்து தேர்ச்சி பெற்றவுடன் அவர்களுடைய கலையார்வத்திற்கு என்னவாகிறது? ஓடி ஓடி மூச்சுமுட்டி படித்து சித்திபெற்று இவர்கள் கண்டது என்ன? பல நூறு மாணவர்களும் கலைஞராகிவிடுவர் என்ற எதிர்பார்ப்பில்லை என்றாலும் ஒருவர் கூடவா இல்லாமற் போகின்றனர்? கலையை கற்பித்தல் எனும் போது கலையை ஒரு பாடப் பொருளாக்கிக் கற்பிக்கின்றோம். கலையைக் கற்பித்தலென்பது வெறுமனே அதன் இலக்கண விதிகளையும், அமைப்புகளையும் கற்பித்தலன்று, சமூகத்திற்கும் கலைஞர்களுக்கும் மத்தியில் ஏற்படக்கூடிய தொடர்பாடல் மொழியை கற்றுக்கொடுத்தலும், இனத்தின் வரலாற்றையும் பண்பாட்டையும் கற்பித்தலுமாகும். நாம் கலை இலக்கண விதிகளாலான கலையின் அமைப்பைக் கற்றுக்கொண்டு, கலையின் உள்ளிருந்து இயங்கும் இனத்தின் வரலாறு, பண்பாடு மற்றும் மாறுபட்ட கலாச்சாரங்களுடன் இணைந்து எம்மை அடையாளப்படுத்தல் என்பதே வளர்ச்சிப் பாதைக்கு இட்டுச்செல்லும் கற்பித்தல் முறையெனலாம்.

சில வருடங்கள் முன்புவரை எனது மாணவர்களும் இப்படித்தான் தேர்வை நோக்கியே தமது கலைப் படிப்பினை மேற்கொண்டு வந்தனர்.



கவிதா லட்சுமி
(நோர்வே)

அனைவருமே மிகச் சிறந்த மதிப்பெண்களுடன் சித்தியெய்தினர். சிலர் அரங்கேற்றங்களை ஆர்வத்துடன் செய்து முடித்தனர். அவை முடிந்த கையுடன் அவர்களுள் பெரும்பான்மையினர் காணமற் போயினர். அதுவரை ஆர்வத்துடன் தமது குழந்தைகளை இழுத்து வந்து கற்பித்தலை மேற்கொண்ட பெற்றோர்களும் தமது கடமை முடிந்தது என்றும் பிள்ளைகள் கலையிற் புலமை பெற்றுவிட்டனர் என்ற மனத்திருப்தியுடனும் சென்றுவிடுகின்றனர். இந்த நிலைக்கு எமது கலை வாழ்க்கை தள்ளப்படுவதன் காரணம் என்ன, யார், என்ற கேள்விக்குக் கற்பித்தலை மேற்க்கொள்ளும் குருவே முதற்காரணி என்பேன் நான்.

குழந்தைகள் ஒரு கலையை கற்க வரும்போது ஆர்வத்தின் பெயரில், ஒரு தேடுதலில் தான் தன் குருவை நோக்கிச் வருகின்றனர். தம் குழந்தைகள் ஒரு காலத்திற் இக்கலையினால் பயன் பெறுவர் என்பதைத் தாண்டி தம் குழந்தைகளை அழைத்துவரும்பெற்றோர்கள் சிந்திப்பதில்லை. யாரும் ஒரு அரங்கேற்றத்தை மனதிற் கொண்டோ பரீட்சைகளை நினைத்துக்கொண்டோ வருவதில்லை. அப்படியே வந்தாலும் அவர்களைச் சரியான வழியிற் கொண்டு வழிநடத்திச் செல்வது என்பது கற்பித்தல் தொழிலைக் கொண்ட ஆசிரியர்களிடமே உள்ளது.

ஒரு கலைஞன் தன் துறையில் வெற்றி காண்பவனாயிருக்கிறான் என்றால் அவன் கற்ற கலையின் அத்திவாரம் சரியாக, நேர்த்தியாகப் போடப்பட்டிருக்கின்றது என்பதே முதல் படியாகும். திடமான அத்திவாரம் என்பதே மாணவர்களிடத்தில் தன்நம்பிக்கையையும் அதைத் தொடர்ந்த கலையின்பத்தையும் கொடுக்கும் என்பதை நாம் அறிதல் முக்கியம். அதை எத்தனை ஆசிரியர்கள் சரிவரக் கற்றுகொடுத்திருக்கின்றோம்? அரங்கேற்றம் கண்டு பரீட்சைகளில் சித்தி கண்டு பட்டங்களைக் காவிக் கொண்டிருக்கும் மாணவர்களிடம் கூட அவர்கள் கற்ற முதல் அடியைக் கேட்டால் சரிவரத் தெரியாத நிலையே புலம் பெயர் தேசங்களிற் காணக்கூடியதாக இருக்கிறது. அதற்கான காரணம் ஒவ்வொரு ஆண்டும் பரீட்சையில் சித்தியடைவதற்கான பாடங்களைக் கற்று முதல் வருடத்திற் கற்றவைகளை கைவிடுவதுதான் என்று சொன்னால் இங்கு வாழும்பெரும்பான்மையான ஆசிரியர்கள் முரண்பாடின்றி தலையசைப் பாரகள். சின்ன வட்டத்திற்குள் தாமே தம் கலைகளை இரசித்து இதுதான் கலையென்ற முடிவுடனும், தேடலின்மையுடனும், இதுவே உச்சம் என்று இருக்கும் புலம் பெயர்வாழ் கலைஞர்கள் ஒரு தேர்ந்த கலைஞராக வெற்றி பெற்று வெளிவரமுடியாதவர்களாகவே இருக்கின்றனர். பரீட்சைகளில் சித்தியெத்துவதற்காகவே ஓடிஓடி தம்கலைவாழ்வை முடித்துக்கொள்கின்றனர். இது இப்படியே தொடரும் பட்சத்தில் நாம் உயர்ந்து நிற்கும் கோபுரங்களைப் போல அல்ல சிறு கற்குவியல் அளவுகூட உயரமுடியாதென்ற எனது கருத்து தற்போது மேலும் வலுப்பெற்றிருக்கிறது.

இதில் இருந்து சிறு மாற்றமாவது வேண்டும்என எண்ணி சில வருடங்களுக்குமுன் வரை இருந்த பரீட்சைமுறைக் கலைக்கல்வியை நான் முதலில் உறுதியுடன் கைவிட்டபோது பல திசைகளில் இருந்து அதிருப்தியான பேச்சுகளையும், கேள்விகளையும், கேலிகளையும், புறக்கணிப்புகளையும் சந்திக்க நேர்ந்தது. எப்போதும் புதியமுயற்சியின் போதும் மாற்றங்களின் போதும் இத்தகைய பேச்சுக்கள், புறக்கணிப்புகளை சந்திக்க நாம் தயாராக இருத்தல் வேண்டும். கடந்த ஆண்டுகளாக பரீட்சையின் மோகத்தில் இருந்த என் வகுப்பறைக்கு அதற்குப் பதிலாக கற்பித்தல் முறையில் திறமைவாய்ந்த நடன ஆசிரியை மட்டுமல்ல தன்னிடமுள்ள அத்தனை மாணவர்களையும் மிகச் சிறந்த கலைஞராக உருவாக்கிக் கொண்டிருக்கும் ஆசிரியை ஒருவரை அழைத்து, அவர் மூலம் எனது மாணவர்களுக்குக் கற்பித்து பார்த்த பின்புதான் இத்தனை வருடங்களாக என் கற்ப்பித்தல் முறையில் இருந்த தவறுகள் பலவும் புரியத்தொடங்கியது.

இந்தப் பட்டறை மூலம் நான் முதலில் தெரிந்துகொண்ட விடயம், ஒரு கலையைக் கற்க மாணவர்களுக்கு இருக்கும் பொறுமையைவிட நூறு மடங்கு பொறுமை ஆசிரியருக்கு அமைந்திருக்க வேண்டும் என்பதுதான். தனது மாணவனுக்கு சொல்லிக்கொடுக்கும் முதற் பாடம் நேர்த்தியாகும் வரை இரண்டாவது படிக்கு நாம் தாவக்கூடாது. நூறு தரம் ஆயிரம் தரம் அல்ல அதற்கு மேலும் அவன் பழகும் முதற் பாடத்தை மீண்டும் மீண்டும் சகிப்புத்தன்மையோடு பார்க்கும், திருத்தும் பொறுமை எமக்கு வருமானால் அதுவே ஒரு ஆசிரியனுக்கு இருக்கக்கூடிய முதல் குரு லட்சணமாகும். இத்தனை நாளாக இதைத்தானா கற்றுக்கொண்டிருப்பது என்று பொறுமைவிட்டுப் போன பெற்றோர்க்கும், குழந்தையின் பொறுமை எல்லைகடந்து விடாத அளவில் சுவாரிசியத்துடனும் நாம் கலையில் போடப்பட வேண்டிய அத்திவாரத்தைப்பற்றிய

30 ஆம் பக்கம் பார்க்க...

# கற்றிருத்தல் வேறு, கற்பித்தற்கலை வேறு

விபரத்தை அவர்கள் அறிந்து கொள்ளும் படி பேசிப் புரியவைக்குமளவு பொறுமையும், சாமர்த்தியமும் நமக்கு வேண்டும். இந்த அத்திவாரமென்பது ஒரு வருடமோ, இரண்டு வருடமோ அல்லது மூன்று வருட ங்களோ தன்னும் ஆகலாம் என்பதை நாம் ஆரம்பிக்கும் குழந்தைக்கும், பெற்றோர்களுக்கும் அறிவிக்கலாம்.

இருந்தும் தான் கற்கும் கலை யில் ஆர்வமில்லாத குழந்தைகளை இனம் கண்டு, அவர்களுடைய ஆர்வம் வேறு எங்கு ஏற்பட்டிருக்கிறது என்பதை அறிந்து அந்த குழந்தையின் பெற்றோரிடம் தெரிவித்தல் நல்ல வழிநடத்தல் ஆகும்.

இப்படியான கற்பித்தல் முறையைக் கடைபிடித்தால் யாரும் கலையைக்கற்க நம்மிடம் வரமாட்டார்கள், வேறு குருவைத் தேடிப்போய்விடுவர் என்ற பயம் இருக்கும் வரை நாம் சிறந்த கற்பித்தலை தரும் குருவாக திகழ முடியாது. புலம் பெயர் தேசங்களில் கலைகளைக் கற்கவரும் மாணவர்களின் தொகையைப் போலவே, கலையைக் கற்று, அதன் பின் ஆசிரியர்களாகி கற்றுக்கொடுப்பவர்களின் தொகையும் பெருகி வருகிறதே தவிர தரமான கலைஞர்க ளின் எண்ணிக்கை கூடிவிடவில்லை. ஏன்? ஒரு கலைஞனாக இருக்கும் மனத்திருப்தியை இந்த சமூகம் கொடுக்கவில்லையா? கலைஞனாக இருக்கக்கூடியவனுக்குக் கிடைக்கக் கூடிய யாவும் மறந்த இன்ப உணரவில் யாருக்கும் விருப்பில்லையா? அல்லது ஆசிரியர்களாகிய நாம் அந்த உணர்வை ஒரு பொழுது கூட ஒரு மாணவனிடம் ஏற்படுத்தவில் லையா?

கற்றபித்தல் என்பது ஒரு கலை. அது இப்படித்தான் இருக்கவேண்டும் என்று கையேடோ விதிமுறையோ இந்த உலகில் யாரிடமும் இல்லை. கற்பித்தல் தனிப்பட்ட ஒவ்வொருவரு டைய செய்நேர்த்தி. ஆரம்பத்தில் ஏதோ ஒரு வகையில் தன்



கற்பித்தல் முறையைக் கொண்டிருந்தாலும் அனுபவ முதிர்வால் ஆசிரியர்கள் தமக்கென தரமான அணுகுமுறையை



உருவாக்க வேண்டும்.

ஒரு கலைஞனாக ஒருவன் அரங்கத்தில் மக்கள் முன் நிற்கி றான் என்றால் அது பெருமைக்குரிய விடயம். இப்போதெல்லாம் ஒரு மருத்துவனாகவோ, ஒரு வக்கீலாக வோ, பொறியியலானகவோ வருவ தென்றால் பணம் கொடுத்துக்கூடப் படித்து முடித்துவிடலாம். ஆனால் எத்தனை பணம் கொடுத்தும் ஒரு நல்ல கலைஞனாக முடியாது.

கலையை ஒருவன் இன்னொருவனிடம் இருந்து கற்றுக்கொள்ளும் போது அக்கலையின் மாணவ னாக இருந்தாலும், தனது தேடுதல் மூலமும் படைப்பாற்றல் மூலமும் தான் ஒரு முழுமையான கலைஞனா கின்றான். அவன் தனக்குள்ளிருந்து தானே சுயம்புவாய் பிறப்பெடுக்கி ன்றான். தான் கற்பிக்கும் கலையில் ஆத்மார்த்தமான தேடுதலோ, படைப் பாற்றலோ அல்லாத குருவினால் தேடுதற்கலையை தன் மாணவனிடம் உருவாக்க முடியாது. ஒரு ஆசிரியரின் கடமை தான் கற்றதை அப் படியே கற்பிப்பதல்ல, மணவர்களுள் இருக்கும் திறமையை, சிந்தனையை வெளிக்கொணர்வதுதான். ஆசிரியருக்கும் மாணவர்களுக்குமான கருத்தாடல் வெளி உருவாகின்ற போது தான் உண்மையான கலைதிறனும் அதனூடு நம்பிக்கையும் வெளிப்படும். குருபக்தியைப் போதிக்குமளவு நாம் எமது கலைகளிற் தன்நம்பிக்கையை விதைப்பதில்லை. தன்நம்பிக்கையும் வெற்றியும் கண்ட ஒரு மாண வனிடத்தில் சுயேட்சையாக ஏற்படும் குருபக்தியை பெறும் ஒரு ஆசிரியராக இருப்பதே கற்பித்தற் தொழிலுக்குக் கிடைக்கும் பெரும் வெற்றி. தன்நம்பிக்கையையும், படைப்பாற்றலையும், தேடலையும் ஒரு மாணவனிடத்தில் உருவாக்குவதில் வெற்றி கண்டவர்களே முழுமைபெற்ற குருவாகமுடியும்.

இன்றைய உலகமயச் சூழலில் பிரபஞ்பமெங்கும் பரந்து நாம் வாழ்வதும், மொழி, கலை, கலாச்சார நிகழ்வுகளுக்கு நாம் முக்கியத்துவம் கொடுப்பதும் காணக்கூடியாதாக இருக்கின்றது. ஒரு இனம் அழியாமற் காப்பதில் மொழி மற்றும் கலை முக்கிய பங்குவகிக்கின்றன. மொழியையும், கலையையும் வெறுமனே கற்றுக்கொள்ளல் மூலம் நாம் எம் அடையாளங்களை வெகுதொலைவிற்கு எடுத்து செல்ல முடியாது. நம் கலையையும் மொழியையும் தொடர்பாடல் கருவியாக்கி அதனூடு தன்நம்பிக்கையை ஏற்படுத்தி மாணவனை கலையில் ஈடுபாடு உள்ளவனாக்குவதே ஒரு ஆசிரியரின் வெற்றியாகும். சமூகம் விரும்புவதைக் கொடுப்பவன் அல்ல கலைஞன். எம் சமூகத்திற்கு எது தேவை என்பதை உணர்ந்து அதை அவர்கள் மாற்றும் வண்ணம் கொடுப்பவனை சிறந்த கலைஞனென சமூகத்தில் நாம் இனம்காண முடியும். ■

# குறும்பும் குறும் செய்தியும்

ஒவ்வொரு மணி நேரமும் நமது உடலில் ஒரு மில்லியன் அணுக்கள் மாற்றப்படும். (அடேங்கப்பா... ஒரு பெரிய நிறுவனமே இயங்குது போல. லே ஆஃப் பிரச்சினை வராதா ?)

மனிதனுடைய தொடை எலும்புகள் காங்கிரீட்டை விட வலிமையானவை (சந்தேகம் இருக்கிறவங்க மட்டும் தொடையால காங்கிரீட்டை உடைக்க டிரை பண்ணுங்க.. நான் எஸ்கேப் )

நமது கண்கள் பிறந்த நாளில் எவ்வளவு இருக்குமோ அவ்வளவு தான் இருக்கும் ஆயுள் முழுதும். அளவு மாறாது. ஆனா மூக்கும் காதும் கட்டும் காலம் பூரா வளந்துட்டே இருக்கும் ( ஐயையோ... அப்போ யானைக்காது மாதிரி ஆயிடுமா)



புன்னகைக்கு நமது முகத்தில் ஐந்து முதல் ஐம்பத்து மூன்று ஜோடி தசைகள் செயலாற்றும் ( எவன்டா இதெல்லாம் எண்றது ?)

கருப்பு நிறம் உடையவர்களுடைய தோல் விரைவில் சுருங்காது. ( அட... அதான் சூப்பர்ஸ்டார் இந்த வயசுலயும் இப்டி இருக்காரு)

பெண்களின் இதயம் ஆண்களின் இதயத்தை விட வேகமாகத் துடிக்கும் ( உன்னை விட அதிகமாய் துடிக்கும் இதயம் எனக்கு.. ந்னு பெண்கள் கவிதை எழுதலாம்)

நாளொன்றுக்கு ஒரு இலட்சம் தடவை இதயம் துடிக்கும் (அட..சுளுக்கு கிளுக்கு புடிக்காதா ?) ■

25 ஆம் பக்கத் தொடர்ச்சி...

## குமரி கண்ட குமரன்

மலையை ஆண்ட மன்னன் முருகன், கடல்கோள் காவு கொண்ட இனத்தின் எச்சமாய் நாம், குமரி முனைக்குத் தெற்கே முருகனுடைய மலை என்று அறிவுமதி ஏக்கத்தோடு பதிவு செய்ததன் வரலாற்று இசைப் பதிவாய் இப்படைப்பு மின்னுகிறது. இன்றும் தென் ஈழத்தில் மலை தோறும் வழிபடப்படுப்படும் எம்பெருமானையும் இப் பெட்டகம் காட்சிப்படுத்தியிருக்கலாம் என்ற ஒரு சிறு குறை மட்டுமே இப்படைப்பில். ஒரு படைப்பாளி என்பவன் சமூகத்தின் கண்ணாடியாகத் திகழ வேண்டும் என்பதை மதீசன் மீண்டும் தன் இசைப் படையணியோடு மெய்ப்பித்திருக்கின்றார். இசையமைப்பாளர் மதீசனுக்கும்,, “குமரி கண்ட குமரன்“ இசை ஆக்கத்தில் பங்கெடுத்த அனைத்துக் கலைஞர்களுக்கும் வாழ்த்துகள். பாடலைக் கேட்க https://www.youtube.com/watch?v=7wnWIdg--rU ■

## லேடி சூப்பர் ஸ்டார் பட்டம் வேண்டாம்



பெரும்பாலும் படத்தின் ப்ரோமோஷன் நிகழ்ச்சியில் கூட கலந்து கொள்ளாத நயன்தாரா, தற்போது, ஆங்கில செய்தி ஊடகம் ஒன்றுக்கு பேட்டி அளித்துள்ளார்.

அதில் பல விஷயங்கள் குறித்து பேசி இருக்கிறார். அதில், லேடி சூப்பர் ஸ்டார் பட்டம் குறித்து தொகுப்பாளர் கேள்வி கேட்க, அதற்கு பதில் அளித்துள்ள நயன்தாரா, என்னுடைய அடுத்த மிகப்பெரிய சர்ச்சையே அதுதான். லேடி சூப்பர் ஸ்டார் என்ற பட்டத்தால் நான் பல பின்னடைவுகளை சந்தித்து இருக்கிறேன்.

கடந்த நான்கு, ஐந்து வருடமாக டைட்டில் கார்டு போட வேண்டாம் என்று தயாரிப்பாளரிடமும் இயக்குனரிடமும் பலமுறை சொல்லி இருக்கிறேன். அந்த பட்டத்தை பார்க்கும் போதே எனக்கு பய மாக இருந்தது. பட்டத்தால் எதுவும் நடந்து விடாது என்று எனக்கு நன்றாக தெரியும். ஆனால் எனது ரசிகர்கள் என் மீது வைத்திருக்கும் அன்பு, மரியாதை காரணமாக என்னை அப்படி அழைத்து வருகிறார்கள்.

## சூரி ஜோடியான ஐஸ்வர்யா லஷ்மி

விமல் நடிப்பில் விலங்கு என்ற வெப்சீரிஸ் ஜி 5 தளத்தில் வெளியாகி அவருக்கு நல்ல வரவேற்பை பெற்றுக்கொடுத்தது.

இந்த வெப் சீரிஸை புரூஸ் லி படத்தை இயக்கிய பிரசாந்த் பாண்டியராஜ் இயக்கி இருந்தார். இதையடுத்து விடுதலை 1, கருடன் மற்றும் கொட்டுக்காளி என அடுத்தடுத்து நல்ல படங்களைக் கொடுத்து வரும் சூரி நடிப்பில் ஒரு புதிய படத்தை இயக்க ஒப்பந்தமாகியுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. இந்த படம் திருச்சி பின்னணியில் உருவாகும் ஒரு உணர்ச்சிபபூர்வமான படமாக உருவாகவுள்ளதாக சொல்லப்படுகிறது.





இந்த படத்துக்கான கதையை சூரி தன் சொந்த வாழ்க்கையில் பார்த்த ஒரு சம்பவத்தில் இருந்து எடுத்துக் கூறியதாகவும், அதை வைத்து இயக்குநர் பிரசாந்த் பாண்டிராஜ் திரைக்கதையை அமைத்து வருவதாகவும் சொல்லப்படுகிறது.

இந்நிலையில் இந்த படத்தில் கதாநாயகியாக நடிக்க ஐஸ்வர்யா லஷ்மி ஒப்பந்தமாகியுள்ளதாக சொல்லப்படுகிறது



## மீண்டும் இணையும் கமல் - லோகேஷ்

மாநகரம், கைதி ஆகிய திரைப்படங்களை இயக்கிய இயக்குநர் லோகேஷ் கனகராஜ் அடுத்ததாக விஜய் மற்றும் கமல் ஆகியோர் நடிப்பில் மாஸ்டர் மற்றும் விக்ரம் ஆகிய படங்களை இயக்கினார்.

இந்த இரு படங்களின் வெற்றி அவரை பிரபல இயக்குநராக்கியது.சமீபத்தில் மீண்டும் விஜய்யின் லியோ படத்தை இயக்கிய லோகேஷ் ரஜினி நடிப்பில் உருவாகும் கூலி படத்தை இயக்குகிறார்.

இந்த படத்தை முடித்துவிட்டு அடுத்து அவர் கைதி 2 படத்தை இயக்குவார் என சொல்லப்படுகிறது. இந்நிலையில் அவர் சமீபத்தில் பொலிவுட் நடிகர் அமீர்கானை சந்தித்து பேசியுள்ளார்.

அப்போது இருவரும் இணைந்து படம் பண்ணுவதற்கான பேச்சுவார்த்தை நடந்ததாக சொல்லப்படுகிறது.இந்நிலையில் சமீபத்தில் நடந்த ஒரு நிகழ்ச்சியில் பேசிய லோகேஷ் கனகராஜ் "கமலை இயக்கும் வாய்ப்புக் கிடைத்தது பெரிய விஷயம்.

மீண்டும் அவருடன் ஒருமுறை இணைந்து பணியாற்ற உள்ளேன். அது விக்ரம் இரண்டாம் பாகமாக கூட இருக்கலாம் எனக் கூறியுள்ளார்.

## இந்தியாவில் புகழ் பெற்ற ஒரேயொரு பெண்



இந்தியாவின் புகழ்பெற்ற மனிதர் யார் என்பதை கண்டறிய 'Hansa Research' என்ற ஆய்வு நிறுவனம் இந்தியா தழுவிய அளவில் ஒரு கருத்துக் கணிப்பை நடத்தியுள்ளது.

தேர்ந்தெடுக்கப்பட்ட 36 நகரங்களில் 4 ஆயிரம் பேரிடம் இந்த ஆய்வு நிறுவனம் கருத்துக் கணிப்பை நடத்தியுள்ளது இந்தப் பட்டியலில் விராட் கோலி, மகேந்திர சிங் தோனி, சச்சின் டெண்டுல்கர் ஆகிய மூன்று பேரும் முதல் மூன்று இடங்களை பிடித்துள்ளனர். இந்தப் பட்டியலில் நான்காவது இடத்தை ஷாருக் கான் பிடித்துள்ளார். அவருக்கு அடுத்து அகஷய் குமார், அமிதாப் பச்சன் ஆகி யோர் முறையே ஐந்து மற்றும் ஆறாவது இடத்தைப் பிடித்துள்ளனர்.

'புஷ்பா – 1' படம் மூலம் இந்தியாவின் பல்வேறு பகுதிகளிலும் புகழ்பெற்ற அல்லு அர்ஜுன் இந்தப் பட்டியலில் ஏழாவது இடத்தில் இருக்கிறார். இந்தப் பட்டியலில் சல்மான் கான், ஹிருத்திக் ரோஷன், தீபிகா படுகோன் ஆகி யோர் அடுத்த மூன்று இடங்களில் இருக்கிறார்கள். இதில் பத்தாவது இடத்தைப் பிடித்துள்ள தீபிகா படுகோன், இந்தப் பட்டியலில் இருக்கும் ஒரே பெண்.







அனைவருக்கும் இனிய தைப் பொங்கல் நல்வாழ்த்துகள்




















அனைவருக்கும் இனிய தைப் பொங்கல் நல்வாழ்த்துகள்